
கல்கி
KALKI 23-2-75 60 காசு

மக்ஸய்ஸாய் விருது பெற்ற



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு

திருச்சி நகர மக்கள் அளிக்கும்

பாராட்டு

*

1975 மார்ச் 2ம் தேதி மாலை 6 மணிக்கு

திருச்சி, சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரியிலுள்ள
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அரங்கத்தில்

*


பாராட்டு விழாவுக்குப் பின்னர்

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின்
இன்னிசைக் கச்சேரி

கண்டதேவி அழகர்சாமி	...	வயலின்
காரைக்குடி மணி	...	மிருதங்கம்
வி. நாகராஜன்	...	கஞ்சிரா
புதுக்கோட்டை மகாதேவன்	...	மோர்சிங்

ஒப்பற்ற வெள்ளைவெளேர்-சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்...

ஒப்பற்ற வெள்ளைவெளேர்!



அதி உன்னதமான துலக்கும் சக்தி படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப், கண்மறைவான அழுக்கையும்
அகற்றிவிடுகிறது. பிறர் பொருமைப்படும்
அளவுக்கு அதி உன்னதமான வெண்மை
அளிக்கிறது உங்கள் துணிகளுக்கு.
அதிசயமென்ன, இந்தியாவின் தலைசிறந்த ரகமாக
விளங்குகிறது ஸூப்பர் ஸர்ஃப்!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

கல்கி

ஆனந்த மாசி, 11 ★ பிப்ரவரி 23, 1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள
பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே!
சம்பவங்களும் கற்பனையே.



அடுத்த இதழில்...



போட்டிக் கதை:



உருவாக்கினர்

-பிரேம் ஆனந்த்.

போட்டிக் கட்டுரை:
மிஸோராமில் நடந்த
பயங்கரக் கொலை பற்றிய
துயரகரமான விவரங்கள்

சந்தா விபரம்	இந்தியா	ஒரு வருடம்	ரூ. 30-00	ஆறு மாதம்	ரூ. 15-00
	பிற நாடுகள்	,,	ரூ. 67-50	,,	ரூ. 33-75
	இலங்கை (இலங்கை நாணயம்)	,,	ரூ. 44-00	,,	ரூ. 22-00

வரலாறு கேட்டிராத வாய்ப்பு!
வழங்குவதோ **ஸிங்கர்**

3 மாதங்களில் உங்கள்

மெரிட்*

தையல் மெஷினுக்குப்

பணத்தைக் கொடுங்கள்

ஆனால் லிஸ்ட் பிரைஸைவிட ஒரு காசுகூட அதிகம் தராதீர்கள்!

''மிகவும் மகத்தானது''

ஸிங்கர் சிறிதும் கூடுதல் பணமின்றி தவணை முறைகளில் வாங்கும் வாய்ப்பை உங்களுக்கு அளிக்கிறது.





''என் சேமிப்பு எவ்வளவு என்பதை ஊகிக்க முடியுமா!''

மூன்று மாதங்களில் பணத்தைக் கொடுத்தால் எவ்வளவு சேமிக்கிறீர்கள்? லிஸ்ட் பிரைஸைவிட ஒரு காசுகூட அதிகம் தராமலேயே அதை எவ்வளவு விரைவில் திரும்பப் பெறுகிறீர்கள் என்பதை கண்டு நீங்களே வியப்படைவீர்கள். அதன் பிறகு எல்லாமே சேமிப்புத்தான்!

''ஒரு காசுகூட அதிகமில்லை''


வழக்கமாக தவணை முறைகளில் வாங்கும் போது சாமானின் விலை அதிகமாகிறது. காரணம்? அந்த வசதியை உங்களுக்குத் தர கம்பெனிக்கு அதிகம் செலவாகிறது. உங்கள் மெரிட் தையல் மெஷினுக்கு பணத்தைக் கொடுத்து வரும்போதே மிச்சமும் செய்கிறீர்கள் (தையல் செலவு சிறிதுமில்லையே).





''அது நீடித்து உழைக்க வல்லது''.

சில நாட்களே அமுலிலிருக்கும் இதைப் போன்ற சலுகையை ஸிங்கர் மட்டுமே உங்களுக்கு அளிக்க முடியும். ஆகவே முந்துங்கள். இந்த வாய்ப்பை பயன்படுத்தும் அதிர்ஷ்டசாலி யாக ஏன் இருக்கக்கூடாது? அருகிலுள்ள ஸிங்கர் கடையையோ அல்லது டீலரையோ அணுகுங்கள்.



யாவரும் அறிந்த உண்மை இது. உலகத்திற்கு தையற் கலையைக் கற்பித்தவர்களே நாங்கள்தான்.

ஸிங்கர்

ஸிங்கர் சூயிங் மெஷின் கம்பெனி,
207, டி. என். ரோடு, பம்பாய் 400 00

*ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட் மார்க்

CHAITRA-SM-79TAM

கல்கி

மலர் 34

இதழ் 30

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இடித்துரைத்த நண்பர்

சோஷலிஸம் என்பது மக்களின் க்ஷேம நலன், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் எனக் கொண்டோமானால் நமது முதல் பணி நாட்டின் செல்வத்தை அதிகரிப்பதே. தேசத்தின் பொருளாதாரச் செழிப்பை அதிகரித்த பின்னரே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயல வேண்டும். அப்போது சோஷலிஸம் நன்கு செயல் பட முடியும்.

இதைத்தான் கால்பிரெய்த் கூறுகிறார். அபிவிருத்தி அடைந்த நாட்டில்தான் சோஷலிஸத்தை நிர்வகிக்க முடியும்; பொருளாதார முன்னேற்றம் அடையாத நாட்டில் அல்ல என்கிறார்.

ஆனால் நமது அரசோ சோஷலிஸம் என்றால் அரசுடைமை யாக்குதல் என்பதாக ஒரு விபரீத அர்த்தத்தைக் கற்பித்துக்கொண்டு சிறிய வியாபாரம் முதல் பிரும்மாண்டத் தொழிலகம் வரை சகலத்திலும் தலையை நுழைத்துக் கொண்டு அவதிப்படுகிறது: மக்களையும் அவதிக்குள்ளாக்குகிறது. புதிதாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நிர்வாக ஆற்றல் குறைவாக இருக்கும் போது தொழில் வியாபாரத் துறைகளில் மேன்மேலும் பல சுமைகளை அரசே தாங்க முன்வந்தால் நஷ்டமும் மக்களின் கஷ்டமும் தான் கண்ட பலனாக இருக்க முடியும்.

என்ன கஷ்டம், நஷ்டம் வந்தாலும் சரி, கொள்கையை விட மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கும்போது சோஷலிஸம் அடிபட்டுப் போய் அந்த இடத்தில் சர்வாதிகாரக் கொடுங்கோன்மை தலை எடுக்கிறது.

உண்மை நட்பு இடித்துரைக்கும் என்பது வள்ளுவர் வாக்கு. உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும், அமெரிக்கத் தூதராக இந்தியாவில் பணியாற்றியவருமான ஜான் கென்னத் கால்பிரெய்த் இடித்துரைத்திருக்கிறார்.

கொள்கை அளவில் காரியம் செய்யாதீர்கள்; எதைச் செய்தால் மக்கள் நலன் காக்கப்படும் என்று கவனித்துச் செய்யுங்கள் என்று கூறியுள்ளார். கால்பிரெய்த் சொன்னதை நமது அரசு அலட்சியப்படுத்தினால் அது கொள்கைப் பித்துப் பிடித்து வரட்டு ஜம்பத்துக்காக மக்கள் நலனை மறப்பதாகவே ஆகும்.


இலங்கைத் தமிழரின் அன்பர்


இலங்கையில், தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு: எஸ். ஜெ. வி. செல்வநாயகம் நாடாளுமன்ற உபதேர்தலில் 16,000 வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். இலங்கைத் தமிழர்களுக்கு இந்தத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இலங்கைவாழ் தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கும் அரசியல் சட்டத்தை, ஈழத் தமிழர்கள் நிராகரிப்பதை இலங்கை அரசுக்கும் உலகுக்கும் நிரூபிப்பதற்காகவே திரு செல்வநாயகம் தமது நாடாளுமன்ற அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்து மீண்டும் இந்த அடிப்படையில் தேர்தலுக்கு நின்றார். அதில் முன்னெப்போதையும் விட மிக அதிகமான பெரும்பான்மை வோட்டுக்கள் பெற்று வெற்றி அடைந்திருக்கிறார் செல்வநாயகம்.

அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் பௌத்தர், கம்யூனிஸ்டுகளின் பேச்சைக் கேட்டுத் தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி அடிப்படை உரிமைகளை மறுத்து வந்திருக்கின்றன. பௌத்த மதத்துக்கே பிராதான்யம் அளிக்கப்படுவதும் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதுமே தமிழர்கள் மனத்தை மிகவும் புண்படுத்தியுள்ளன. இதனால் வருத்தமும் கோபமும் அடைந்துதான் தமிழர் ஐக்கிய முன்னணி, பிரிவினை வாதத்திலும் இறங்கியுள்ளது.

இதனைப் புரிந்து கொண்டு தமிழர்களுக்குச் சம உரிமையும் கௌரவமும் அளிக்க முன்வருவதே புத்திசாலித்தனமானது. சிங்கள அரசு இதைச் செய்யாது போனால் அதன் பிடிவாதமே பிரிவினை வாதத்துக்கு உரமிட்டதாக முடியும்.


பகீரத ஏக்கம்
காவிரி
ஊர்ஸ்


புதிய அகதி!
அங்கே இருந்து என்னைத் துரத்திட்டாங்க. இங்கே எனக்கு இடம் உண்டா?
பங்களா தேஷ்
ஜனநாயகம்

திணிக்காதீர்கள், திமிறுவோம்!

ஓசைப்படாமல் ஹிந்தியை ஆட்சிமொழியாக்கத் தீவிரமான நடவடிக்கைகள் மறைமுகமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ரயில்வே போர்டு சார்பில் தென் இந்திய ரயில்வேயிலிருந்து ஒரு சுற்றறிக்கை இருநூறு பேர்களுக்குப் போயிருக்கிறது. இப்படியே மத்திய ரயில்வே, வடக்கு ரயில்வே முதலிய பிரிவுகள் தலா இருநூறு பேர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்புகின்றன. இந்தச் சுற்றறிக்கையில் பல கேள்விகள் எழுப்பப்பட்டு அவற்றுக்கு விடைகள் கோரப்பட்டுள்ளன. ரயில்வேயில் ஹிந்தியைக் கடிதங்களிலும் தந்திகளிலும், பயன்படுத்தத் தடையில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? ரயில்வே ஸர்விஸ் கமிஷன் பரீட்சைகளை ஹிந்தியில் நடத்துவதால் உங்கள் பகுதியில் புத்திசாலிகளைத் தேர்ந்தெடுப்பது வசதியல்லவா? ஹிந்தியை ரயில்வேயில் மேலும் பிரபலப்படுத்த என்னென்ன யோசனைகள் கூறுவீர்கள்? ஆங்கிலமும் கூடவே இருக்கவேண்டியது அவசியம்தானா? என்பன போன்ற விஷமத்தனமான கேள்விகள் அந்தச் சுற்றறிக்கையில் உள்ளன. இவற்றுக்குப் பதில்கள் கிடைக்கப் பெற்றதும், பொதுஜன அபிப்பிராயம் பெற்று விட்டதாக முடிவு செய்து ஹிந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்துவார்கள். நூறு இருநூறு பேர் தரும் அபிப்பிராயம் பொதுஜனக் கருத்தாகி விடாது. ஹிந்தி வெறியர்களின் சூழ்ச்சிக்குப் பலியாகாதிருப்போம். தமிழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இது விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சேவைக்கு ஒரு சகோதரி

ஸ்ரீமதி மேரி கிளப்வாலா ஜாதவ் அவர்களுக்கு பத்மவிபூஷண் பட்டம் கிடைத்தது பற்றிக் கல்கியில் எழுதியதை நேயர்கள் படித்து மகிழ்ந்த மறுநாளே அவர் காலமான செய்தி கிடைத்துத் திடுக்கிட வைத்தது.

சமூக சேவை என்று நினைத்தாலே முதலில் ஸ்ரீமதி மேரி கிளப்வாலா ஜாதவ்தான் நினைவுக்கு வருவார். அந்த அளவுக்கு அவர் சமூகப் பணியில் ஒன்றினார். சமூக சேவை நிறுவனங்கள் அந்த அளவுக்கு அவரை நம்பியிருந்தன. சிறு வயதிலிருந்தே இந்தத் துறையில் ஈடுபாடு கொண்டார் அவர். நாளடைவில் சமூக சேவையின் பல்வேறு பிரிவுகளிலும் அவர் ஈடுபாடு கொண்டு தமது நேரம் முழுவதையும் அர்ப்பணித்தார்.



சமூகப் பணியாற்றும் ஏராளமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி வந்தார். இது தவிர சென்னை நகர ஷெரீப்பாகவும் மேல்சபை உறுப்பினராகவும் விளங்கி அரும் பணியாற்றினார்.

அனாதை என்ற சொல் யாரையும் அண்டவிடாமல் காப்பதே கடமையாகக் கொண்டிருந்தார் மேரி கிளப்வாலா ஜாதவ். அவர் மறைவில் இன்று உண்மையாகவே அந்த வார்த்தையின் பொருளைப் பலர் உணர்ந்திருப்பார்கள்.

நன்றி கூறுகிறோம்!

புட்டோவுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்கா சம்மதித்ததால் அவர்கள் செய்துள்ள ஒரு நல்ல காரியம் பலர் கவனத்துக்கு வராமலே போய்விடக் கூடும். மழையின்மையால் கடுமையான வறட்சியும், பஞ்சமும் நிலவுகிற இன்றைய பாரதத்தின் நிலையைக் கருதி தொம்பதாயிரம் டன் உணவுப் பொருள்களை நன்கொடையாக வழங்குகிறது. இதன் மதிப்பு பதினாறு மிலியன் டாலர்கள். இந்த உணவுப் பொருள்கள் 'கேர்' நிறுவனத்தின் மூலம்

ராஜாஜி சிந்தனை

பட்ஜெட்

அபரிமிதமான வரிகள் வளரும் தொழில் துறையின் ஜீவனை அழித்து விடுகின்றன. பொருளாதார ஞானமும் நியாயமுமின்றிப் போடப்படும் வரிகள் தனியார் துறையைத் திக்குமுக்காடச் செய்கின்றன. விஸ்தரிப்புத் திட்டங்களுக்கோ எதிர்கால அபிவிருத்திக்கோ இடமில்லாமலே போகும்.

நமது தொழிலதிபர்கள் திகைத்துப் போயிருக்கிறார்கள். அதிகாரத்திலுள்ளோரைச் சந்தித்துப் பேசுகிறார்கள். ஆனால் அவர்களால் ஆட்சியிலிருப்பவர்கள் சிறிதும் பாதிக்கப்படுவதில்லை. ஆட்சியைக் கைப்பற்றி நாட்டை ஆளும் விஷய ஞானமற்றவர்களுக்குச் சம்பந்தப்பட்ட அறிவை ஊட்டத் தொழிலதிபர்களால் முடியவில்லை. ஏனெனில் அதிகாரத்திலுள்ளவர்கள் இவர்கள் சொல்வதற்குச் செவி சாய்ப்பதில்லை. இவர்கள் சுயநலத்துடன் பேசுவதாக எண்ணுகிறார்கள். செவிமடுக்க முயன்றால் ஆட்சியாளருக்குத் தூக்கம் வருகிறது!

தேசத்தின் பொருளாதாரம் குரங்கு கைப் பூமாலையாகி விட்டது.

சுயராஜ்யா, மார்ச் 30, 1963

விநியோகமாகும். அமெரிக்க அரசுக்கும் மக்களுக்கும் நமது நன்றி உரித்தாகிறது.

இன்றைய பெண்கள்

ஆபாசப் புத்தகங்களையும் சினிமாக்களையும் எதிர்த்துக் கல்லூரிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் சேர்ந்த மாணவிகள் நீண்ட ஊர்வலம் சென்றனர்; கோஷங்களையும் செய்தனர் என்று திருப்பதியிலிருந்து வந்த ஒரு செய்தி கூறுகிறது.

இப்பொழுதெல்லாம் எந்தச் சினிமாப் படமானாலும் பெண்ணைப் பலாத்காரப்படுத்தும் காட்சிகளும், கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டும் பாடல்களும் இல்லாமல் இருப்பதில்லை. இதை ஆட்சேபித்தால், நீங்கள் பத்தாம் பசலிகள், இன்றைய யுவதிகளின் மனப்போக்கு உங்களுக்குத் தெரியாது என்று கூறி இந்த ஆபாசக் காட்சிகளைத் தொடர்ந்து புகுத்தி வந்தனர்.

இன்றைய யுவதிகளோ, இதை ஆட்சேபிக்கிறார்கள் என்பதை இந்தத் திருப்பதி ஊர்வலம் நிரூபிக்கிறது.

திருப்பதிப் பெண்களை மற்ற நகரப் பெண்மணிகளும் பின்பற்றித் தங்கள் பலமான ஆட்சேபத்தைத் தெரிவிக்க வேண்டும்.

பெண்மை வெல்க!

பழமொழிகள்

காவேரி நீரைப் பங்கிடுவது பற்றி அரசியல் சார்பற்ற உயர் மட்டக் குழு அமைக்கப்படும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். கர்நாடக முதல்வர் இதற்குச் சம்மதம் அளித்திருந்தும் இப்போது கர்நாடக மராமத்து மந்திரி சென்னபாஸப்பா தகராறு செய்கிறார்.

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தரவில்லை!

வேலூர் ஆஸ்பத்திரி ஊழியர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக நிர்வாகிகள் தமது யோசனையைக் கேட்கவில்லை என்று முதல்வருக்கு ரொம்பக் கோபம். ஆனால் அவரே தமிழ்நாடு செகரடேரியட் சங்கத்துக்கு இனி எந்தவித மான மதிப்பும் அளிக்க முடியாது என்று கூறி விட்டார்.

மாமியார் உடைத்தால் மண்கலம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்!

முஜிபுர் ரஹ்மான் சர்வாதிகாரங்களும் பெற்ற ஜனாதிபதியாகி விட்டார். தேசிய அவாமி கட்சியைக் கலைக்குமாறு புட்டோ உத்தரவிட்டு விட்டார்!

குட்டி பதினாறு அடி பாய்ந்தால் தாய் எட்டு அடியாவது பாய வேண்டாமா?

தமிழ்நாட்டுப் பிரச்னைகளைக் காஷ்மீரப் பிரச்னைகளுடன் ஒப்பிடக் கூடாது. காஷ்மீரம் பெற்றுள்ள தனி உரிமைகளை மற்ற மாநிலங்களும் பெற முயலக் கூடாது. ஆனால் மாநில சுயாட்சிக் கோரிக்கையில் ரொம்ப நியாயம் இருக்கிறது. — ஷேக் அப்துல்லா.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்

தி. க.விலிருந்து பிரிந்த தி. மு. க.விலிருந்து பிரிந்த அ. தி. மு. க.விலிருந்து பு. அ. தி. மு. க. பிரிந்து உள்ளது!

பிரிவினைச் சக்திகள் பிரியாமல் என்ன செய்யும்? விளையும் பயிர் முளையில் தெரிகிறது.

கல்விப் பணிக்கு வெள்ளி விழா

எம். ஐ. டி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் சென்னை டெக்னலஜி இன்ஸ்டிட்யூட் வெள்ளிவிழா கொண்டாடுகிறது. விழாவைத் தொடங்கி வைக்கப் பிரதமரே வருகிறார்.

எம். ஐ. டி. காலஞ்சென்ற திரு வி. ராஜம் அவர்களால் தொடங்கப்பட்டது. ஆயிரம் ரூபாய் முதலீட்டுடன் ஒரு சிறு கைத்தறித் தொழிற்கூடத்தை அந்த நாளில் ஆரம்பித்தவர் திரு வி. ராஜம். அதன் பிறகு பல துறைகளில் வெற்றி தோல்விகளை மாறி மாறிக் கண்டும் மனம் தளராமல் ஆற்றலாலும், இடைவிடா உழைப்பாலும் உயர்ந்தார். நாளடைவில் ஐந்து மிகப் பெரிய நிறுவனங்களின் தலைவரானார். பெருஞ் செல்வந்தராய் விளங்கினார்.

தொழிலதிபர் திரு வி. ராஜம் சிறந்த தேசபக்தரும்கூட. ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி, ஸ்ரீ மாளவியா போன்றோருடன் தொடர்பு கொண்டிருந்து தேசப் பணி புரிந்தார். இந்தத் தேசபக்தியின் ஒரு பிரதிபலிப்பாகத்தான் தாம் ஈட்டிய பொருள் எதிர்காலச் செல்வங்களுக்குப் பயனாக வேண்டும் என்ற நோக்கில் எம். ஐ. டி. பொறி இயல் கல்லூரியை ஆரம்பித்தார். சுப்பராய ஐயர், கே. ஸ்ரீனிவாசன், டாக்டர் ராதாகிருஷ்ணன், வி. ஆர். ஸ்ரீனிவாசன், எல். வேங்கட கிருஷ்ண அய்யர் போன்றோர் திரு வி. ராஜத்தின் இந்த நன்முயற்சிக்குப் பக்கபலமாய் நின்றனர். நன்கொடைகளும் தாராளமாகவே கிடைத்தன.

திரு வி. ராஜம்



இன்று திரு வி. ராஜத்தின் புதல்வர் திரு ராஜம் ராமஸ்வாமி தகப்பனார் ஆரம்பித்து வைத்த கல்விக் கூடத்தைப் பல அறிஞர்களின் ஒத்துழைப்புடன் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வருகிறார்.

வெள்ளி விழாக் காணும் எம். ஐ. டி.க்கும் அதில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கும் பயிலும் மாணவ மாணவிகளுக்கும் நமது நல்வாழ்த்துக்கள்.

செலவைக் குறையுங்கள்!



ரீ:பில் பாக் 50 கிராம்

வழக்கமான
ஜாடியைவிட 50பைசா
விலை குறைவு.

வியத்தகு சிக்கனம்! வழக்கமான 50 கிராம் ஜாடியை விட 50 பைசா குறைவு. ஒவ்வொரு கப் ப்ருவுக்கும் வறுத்தரைத்த காபியின் விலையை விட அதிகமில்லை. மேலும் இது ஸ்ட்ராங்கானது உண்மையான காபியின் மணம் நிறைந்தது.

சிறந்த காபியைப் போல் நற்சுவை அளிப்பது ப்ரு

முக்கியம்:

ரீ:பில் பாக்கிலிருப்பதை மறுபடியும் பயன் படுத்தக் கூடிய ப்ரு ஜாடியில் நிரப்பி பயன் படுத்திய பிறகு மூடியை இறுக்கமாக மூட வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.



OBM-4012A/3TAM

எனக்கு ஏன் கனகாபிஷேகம்? (2)



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்கள் நமக்கு இட்டிருக்கிற ஆக்ஞை என்ன?

நாம் எல்லோரும் பரமாத்மாவைப் பூஜிக்க வேண்டும் என்பதேயாகும்.

சரி, பூஜை என்றால் என்ன விதத்தில் செய்வது? பல தினுசான பூஜைகள் இருக்கின்றனவே! பரமாத்ம பிம்பத்தை வைத்து அதற்குச் சந்தனமிடுவது—கந்தம்; நாமாவளிகளைச் சொல்லி அர்ச்சனை செய்வது — புஷ்பம்; சாம்பிராணி காட்டுவது — தூபம்; விளக்கேற்றிக் காட்டுவது — தீபம்; ஆகாராதிகளை அர்ப்பணம் பண்ணுவது — நைவேத்தியம்; இப்படி ஐந்து விதமாக உபசரிப்பதே பஞ்சோபசார பூஜை என்பது. இவற்றோடுகூட ஆவாஹனம் முதல் ஆபரணம் சமர்ப்பிப்பது வரை இதர பல உபசாரங்களையும் சேர்த்துப் பதினாறு உபசாரங்களாகச் செய்தால் ஷோடசோபசாரம். இதுவும் போதாது என்று ராஜாதி ராஜர்களுக்குச் செய்கிற எல்லா மரியாதைகளும் செய்தால் அறுபத்து நான்கு உபசாரங்கள் கொண்ட சதுஷ்சஷ்டி உபசாரமாகும். குறைந்தது, நாமெல்லாரும் கந்தமிட்டு, நாலு புஷ்பங்களைத் தூவி, ஓர் ஊதுபத்தியைக் காட்டி, இரண்டு கற்கண்டு திராட்சைப் பழமாவது நிவேதனம் பண்ணி, கர்ப்பூர ஆரத்தி செய்ய வேண்டும்.

பகவத்பாதர்கள் ஆக்ஞையில் இன்னவிதமான பூஜைதான் பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரா? எல்லாப் பூஜைகளிலும் பரம உத்தமமானது இதுவே என்று எதையாவது சொல்லியிருக்கிறாரா? சொல்லியிருக்கிறார். எதைப் பரமாத்மாவுக்கு மிகவும் பிரீதியான பூஜையாகச் சொல்லியிருக்கிறார்? "அப்பா, ஜன சமுத்திரத்தின் க்ஷேமத்துக்காகவும், உன்னுடைய ஆத்ம சிரேயஸுக்காகவும் ஒன்றுசேர்த்து வேதங்கள் விதித்திருக்கிற கர்மத்தை நீ பண்ணிக் கடமையை நிறைவேற்ற வேண்டும். இதைச் செய்வதாலேயே நீ ஈசுவரனைப் பூஜித்தவனாகிறாய்" என்கிறார்.

ஆசார்யாள் சரீரத்தைவிட்டுவிட நினைத்த கடைசிக் காலத்தில் சிஷ்யர்கள், "எங்களுக்குச் சுருக்கமாக ஓர் உபதேசம் தந்து கடைத்தேற்ற வேண்டும்" என்று மனம் உருகிப் பிரார்த்தித்த போது, அவர் நிரம்பக் கருணையோடு, "ஸோபான பஞ்சகம்" என்று ஐந்து சுலோகங்களைச் சொன்னார். அதிலேதான் இப்படிச் சொல்கிறார் — அதாவது ஆக்ஞையிடுகிறார் : குழந்தைக்குக்கூடப் புரிகிற மாதிரி சொல்கிறார்: வேதோ நித்யம் அதீயதாம் (தினந்தோறும் வேதத்தை அப்பியசியுங்கள்); தத் உதிதம் கர்ம ஸு அநுஷ்டீயதாம் (அதில் கூறியிருக்கிற கர்மங்களை நன்றாக அநுஷ்டியுங்கள்); தேந ஈசஸ்ய விதீயதாம் அபசிதி (இதனாலேயே ஈசுவரனுக்குப் பூஜை செய்யுங்கள், 'அபசிதி' என்றால் 'வழிபாடு'. இங்கே, 'கடமையைக் கர்மாவைச் செய்யுங்கள்', 'பூஜை செய்யுங்கள்' என்று பிரித்துப் பிரித்துச் சொல்லவில்லை. தேந (அதனாலேயே, கர்மத்தை அநுஷ்டிப்பதாலேயே) பூஜை செய்யுங்கள் என்றே சொல்கிறார். இதுதான் ஆசார்யாள் ஆக்ஞை.

ஆக்ஞையை நிறைவேற்ற நமக்கு ஆசை இருந்தாலும், அதற்கான விடாத பிரயாசையைச் செய்கிற சிரத்தை இருக்க வேண்டுமே! இதற்கு எங்கே போவது? ஆக்ஞை போட்ட ஆசார்யாளிடமேதான், அதை நிறைவேற்றுகிற சக்தி நமக்கு வேண்டும் என்றும் பிரார்த்திக்க வேண்டும். பகவானுடைய காலைப் பிடித்துக் கொண்டால்தான் எதுவும் கிடைக்கும். இப்படிப் பகவானின் காலாக இருக்கப் பட்டவர்தான் "பகவத்பாதர்". அவருடைய புண்ணிய பாதங்களை நாம் பிடித்துக்கொண்டாலே, நல்லதைச் செய்வதற்கான சக்தியை நல்லதே செய்த சம்—கரரிடமிருந்து, அநுக்கிரகிக்கப் பெறலாம். நல்ல புத்தி வர சுலபமான வழி குருவை நமஸ்கரித்துக் கொண்டேயிருப்பதுதான்.

நம் நமஸ்காரங்கள் எல்லாம் முடிவில் எங்கே போய்ச் சேருகின்றன? அவை யாருக்கு உரியன? எந்த ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்தாலும் அது கேசவனுக்கே போய்ச் சேருகிறது என்று பொதுவில் சொல்வதுண்டு. (ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி.) இங்கே கேசவன் என்றால் பரமாத்மா என்று அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். பல தெய்வ மூர்த்திகள் இருந்தாலும்கூட, அவர்களில் யாரை நமஸ்கரித்தாலும் அது அத்தனை மூர்த்திகளுமாயிருக்கிற ஒரே ஸ்வாமியைத்தான் சென்றடையும் என்பது இதன் தாத்பரியம். இப்போது என் மாதிரி சந்நியாசியாக இருக்கப்பட்டவர்களை எல்லாரும் நமஸ்கரிக்கிறீர்கள். இச்சமயங்களில் எல்லாவற்றையும் துறந்த துறவி, "இந்த நமஸ்காரம் என்னைச் சேர்ந்தது" என்று நினைத்துவிட்டால் அப்போதே அவனுக்கு அதோகதிதான். தன்னை வைத்துச் செய்யப்படுகிற அந்த நமஸ்காரம் சர்வலோக ரக்ஷகனாக இருக்கப்பட்ட நாராயணனுக்கே உரியது என்ற நினைப்பு சந்நியாசியைவிட்டு அகலக்கூடாது. உண்மையான சந்நியாசியானால் இவனுக்கு ஒருத்தர் நமஸ்காரம் பண்ணும்போது, தானும் பக்தியோடு அதை நாராயணனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் 'ஸர்வ தேவ நமஸ்காரம்' கேசவனைச் சென்றடைவதுபோல், எந்த சந்நியாசிக்குச் செய்கிற நமஸ்காரமும் அந்தப் பரமேசுவரனையே அடையும். இதனால்தான் பக்தர்கள் ஒரு சந்நியாசியை நமஸ்காரம் செய்யும்போது அவன் "நாராயண நாராயண" என்று சொல்லவேண்டும் என்று வைத்திருக்கிறது. பக்தர்களுக்குக் கேட்பதற்காக இவன் அப்படிச் சொல்லவில்லை; நாராயணனைத் தன் மனசில் தியானித்து அவரிடம் இந்த நமஸ்காரத்தை அர்ப்பணம் பண்ணுமுகமாகவே அந்த நாமத்தைச் சொல்கிறான்.

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்". 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தந்தி: 'EVERMANS', போன்: 85834, தபால்பெட்டி: 414

நீண்டகாலச் சீட்டுகள்

50 மாதங்கள் — 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகியகாலச் சீட்டுகள்

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி-பம்பாய்-பெங்களூர்-கல்கத்தா-கோயம்புத்தூர்.

ஸ்தாபிதம்: 1947

29 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை



இன்றும் நாம் காணும் ஆசார்யாள்

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்


துர்லபம் த்ரயமேவ ஏதத் தைவ
அநுக்ரஹ ஹேதுகம்
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம்
மஹா புருஷ ஸம்ஸ்ரய:

மனிதனாய்ப் பிறப்பது, இப்பிறவியிலிருந்து விடுதலை பெறுவதற்காக வேண்டித் தீவிரமாக முயற்சி செய்வது, அதற்காக மஹாபுருஷர்களை அண்டுவது இம்மூன்றும் தெய்வ அனுக்கிரஹத்தினால் மட்டுமே கிட்டும். இம்மூன்றும் ஒருவருக்குக் கிட்டிவிட்டால் தெய்வத்தினுடைய அனுக்கிரஹம் இருக்கிறது என்பது புலனாகிறது என்று பொருள். அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது என்ற முதுமொழியும் இதையே கூறுகிறது. இந்த உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள் பிறந்திருக்கிறார்கள். இப்பொழுதும் கோடிக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மனிதருள் மாணிக்கமாய் விளங்கியவர்கள் மிகச் சிலரே. மாணிக்கம் என்றவுடன் நவரத்தினம் ஞாபகத்துக்கு வருகிறது. மாணிக்கங்களாகச் சிலர் இருந்திருக்கலாம். நவரத்தினங்களாகத் திகழ்வது மிகவும் அரிதே. ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு மனிதர் தம் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து அதன் மூலம் தம்முடைய வாழ்வை மேன்மைப்படுத்திக் கொண்டு உலகுக்கும் மாணிக்கமாக விளங்கியிருப்பார்கள். ஆனால் ஆன்மீக வழியிலும் பரிபூரணமாக ஈடுபட்டு அதனுடைய முழுப் பயனையும் அனுபவித்து அதோடுகூட உலக மக்களுக்குத் தேவையான கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், தர்ம மார்க்கம், சமுதாய வளர்ச்சி மார்க்கம், பரஸ்பர பிரேம மார்க்கம், மஹா மேதாவிகளும் வியக்கும்படியான விஞ்ஞான ஞான உபதேச மார்க்கம், பகவத்கீதையில் அருளிய நான்குவித பக்தி நிலை இவற்றுக்கு ஆதர்சமாக ஒரு மூர்த்தி திகழ்ந்து வருவது என்பது அபூர்வமே. இந்த அபூர்வத்தை நாம் இன்று காணவேண்டுமானால் காஞ்சீபுரம் செல்ல வேண்டும். இத்தனை ரத்தினங்களையும் ஓரிருக்கையாகக் கொண்டுள்ள நவரத்தின மூர்த்தி காஞ்சியில் ஒளிர்விட்டு உலகெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அந்த ஒளியின் அருள் மூலம் கோடிக்கணக்கான மனிதர்கள் ஆன்மீக அனுபவத்தைப் பெற்று ஆனந்த நிலையை அடைந்து வருகின்றனர். ஆதி சங்கர பகவத்பாதர் அருளியபடி **த்ருஷ்டாந்தோ நைவ த்ருஷ்ட: த்ரிபுவன ஜடரே ஸத்குரோ: ஞானதாது:** [மூவுலகிலும் ஞானத்தின் இருப்பிடம் நல்லாசான். அவருக்கு நிகர் அவரே.] என்பதற்குச் சான்றாக, ஆதர்சமாக ஒளிவிட்டுக் கொண்டிருப்பவர் நமது பரமாச்சார்யாள். ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளை சிவனின் அம்சமாகப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன. ஆனால் நமது பரமாசார்யாளை, ஆன்மீக தத்வ உபதேசத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியான, பரமேசுவரரான சங்கரராகவும், தர்மோபதேசத்திலும், தர்ம ஆசரணையிலும், தர்ம ஸம்ரக்ஷணையிலும், பரிபாலனும்சமான விஷ்ணு ஸ்வரூபமான ராமாவதாரத்தின் வடிவமாகவும், உலகிலுள்ள ஜனங்கள் உய்வதற்காகப்





காஞ்சியில் வாழ் ஞானத் தவ முனிவர்



திருமுருக கிருபானந்த வாரியார்....

அறிவு என்றாலும் ஞானம் என்றாலும் ஒன்றுதான். ஞானம் ஒன்றே முக்திக்கு வழியாகும். ''ஞானமலது கதி கூடுமோ?'' என்கின்றார் தாயுமானவர்.

ஞானிகளால் இந்த நாடு தழைக்கின்றது. ஞானிகள்பால் எட்டு சித்திகளும் ஏவல் செய்யும். முக்தித்தலமாகிய கச்சியம்பதியில் எண்பது ஆண்டுகளாக வாழ்ந்து ஆன்மாக்களின் அஞ்ஞான இருளை ஓட்டி, ஞான ஒளியை ஊட்டி வருகின்ற பரமஞானமூர்த்தி காஞ்சி ஆச்சார்ய சுவாமிகள்.

'' ஊனினைச் சுருக்கி
உள்ளொளி பெருக்கி ''

என்று மாணிக்கவாசகருடைய திருவாக்குக்கு இலக்கியமாக, உடம்பைச் சுருக்கி ஒப்பற்ற உயர் ஞானத்தைப் பெருக்கி, சதா தம்மை நாடி வருபவர்களிடம் புன்னகையுடன் திருமுகமலரால் கருணை மழை பொழிகின்ற மெய்ஞ்ஞான முகில் நம் சுவாமிகள்.

ஆ ஆ! அவர்களின் திருமுகத்தில் அருள் ஞானத் தேன் சொட்டுகிறது. அவருடைய வேதமணம் வீசும் திருவாக்கில் இன்னமுதம் உதிர்கின்றது.

உலகில் உள்ள எல்லாப் பகுதியிலும் வாழ்கின்ற மக்கள் காஞ்சிபுரம் சென்று அவருடைய செந்தாமரைத் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தங்கள் துன்பச் சுமையை இறக்கி விடுகிறார்கள்.

அதனும் மிகப் பெரிய பதவியில் உள்ளவரும் அவருடைய கடைக்கண் பார்வைக்கு ஏங்கித் தவஞ் செய்கின்றார்கள். பின்னே வருவதை முன்னே அறிகின்றவர் நம் ஞான முனிவர்.

ஒருசமயம், திருச்சி தேசியப் பள்ளியின் பேராசிரியராகப் பணி புரியும் என் நண்பர் ராதாகிருஷ்ணன் அவர்களின் தந்தையார் சுவாமிகளிடம் கணக்கராய்ப் பணி புரிந்து கொண்டிருந்தார்கள். அப்போது சுவாமிகள் ஸ்ரீசைலத்தில் இருந்தார்கள். அங்கே சுவாமிகள் சங்கரர் திருக்கோயில் புதுக்கினார்கள். அதற்குக் கும்பாபிஷேகம் நான்கு நாட்களில் நடக்க விருந்தது.

சுவாமிகள், ராதாகிருஷ்ணன் அவர்களின் தந்தையைக் கூப்பிட்டு, ''நீ பட்டணம் போ'' என்று பணித்தருள்னார். அவர் ''அந்தோ! அண்மையில் நடக்கவிருக்கும் கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கின்ற பாக்கியம் நமக்கு இல்லையே'' என்று எண்ணி உள்ளம் உலைந்தார். குரு வார்த்தைக்கு மறுவார்த்தை கூற அஞ்சிப் புறப்பட்டுச் சென்னை வந்து தம் புதல்வியின் இல்லம் சேர்ந்தார்.





அத்தருணத்தில் தமது குடும்பத்தாருடன் அவர் இருக்க வேண்டிய அவசியத்தை ஞானத் தவ முனிவர் உணர்ந்தே சென்னைக்கு அனுப்பியிருந்தார் என்பது அவரது குடும்பத்தினருக்குப் பின்னரே தெரிய வந்தது. இப்படி காஞ்சி கருணை முனிவருடைய வரலாற்றில் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன.


இப்போது அவர்கள் எண்பது ஆண்டுகள் நிறைந்து நமக்குத் திருவருள் புரிந்து கொண்டு விளங்குகின்றார்கள். அவர்களின் திருவடி நமக்கு இகம் பரம் வீடு என்ற மும்மை நலங்களையும் வழங்கும்.

பலவிதமான முறைகளில் ஸ்தாபனங்களைத் துவக்கி இருப்பதில் உலகம் படைக்கும் பிரம்ம தேவனின் ஸ்வரூபமாகவும் மௌன நிலையில் இருந்து கொண்டு ஆனந்த நிலையை அனைவருக்கும் உணர்த்துவதின் மூலம் மும்மூர்த்திக்கும் அப்பாற்பட்ட பரப்ரும்ம ஸ்வரூபத்தின் நிலையாகவும் நாம் ஒருங்கிணைத்துக் காண்கிறோம். இங்கேதான் **குருர் பிரும்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மகேசுவர: குருஸ் ஸாக்ஷாத் பரம் பிரும்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:** என்று கூறப்பட்டிருக்கும் உருவத்தைக் கண்முன் நாம் காண்கிறோம்.

ஆதிசங்கரர் காஞ்சியில் வைத்த ஒளி விளக்கு காமாட்சியின் கருணை கடாக்ஷத்தினால் பரம்பரை பரம்பரையாக ஒளிவிட்டுக் கொண்டு இன்று நம்மிடையே ஆயிரம் இளம் பிறைச் சந்திரனைக் கண்டு **'' ஸஹஸ்ர சந்த்ர தர்சீ ''** என்ற புனிதப் பெயரைப் பெற்றுத் துலங்குகிறது. இளம் பிறைச் சந்திரனைத் தலையில் கொண்ட சிவபிரானின் பெயரோடு திகழும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ என்ற திருநாமத்துடன். சந்திரன் எவ்விதம் குளுமையை அளிக்கிறதோ, அதுபோல் ஸம்ஸார சாகரத்தில் தவித்துக் கொண்டிருக்கும் நம்மனைவர்க்கும் குளிர்ச்சியையும், ஆனந்தத்தையும் அளித்துக் கொண்டு விளங்குகின்ற நமது ஜகத்குருவான பரமாசார்யாளை நமஸ்கரித்து நாம் உய்வதுடன் அந்த நவரத்தின ஒளி மேலும் வெகு காலம் ஒளிர் விட்டுக் கொண்டிருக்க அன்னை காமாக்ஷியிடம் இறைஞ்சுவோமாக.

மேலட்டை வண்ணப்படம்: **கே. விசுவநாதன்**

அனந்தசயனம் ராலிஃபேன்  வாங்கி ஐந்தாண்டுகள் ஆகின்றன. அக்கம்பக்கத்து குழந்தைகள் அதனைச் சீண்டி விளையாடுகின்றன. ஆயினும் புத்தம் புதியதுபோல் தோன்றுகிறது. அந்தோனி ராலிஃபேன்  வாங்கி எத்தனையோ காலம் ஆயிற்று. எனினும் எவ்விதக் கோளாறும் இல்லை. ஆசிரியர் அன்பரசு எத்தனையோ ஊர்கள் மாற்றிப் போய் வந்திருக்கிறார். ஆனாலும் அவர் வீட்டு ராலிஃபேனில்  வளைவோ நெளிவோ இல்லை. பங்கஜம் மாமியின் பாட்டுக்கு அவர்கள் வீட்டு ராலிஃபேன்  ஓட்டம் இடையூறாகவே இருப்பதில்லை. அப்துல்காதர் தன் வீட்டு ராலிஃபேனைப்  பார்த்திருப்பாரோ என்னவோ. நடிகை நளினாவின் வரவேற்பு அறையின் வண்ணத்திற்கு ராலிஃபேன்  எவ்வளவு கச்சிதமாகப் பொருந்தி உள்ளது. அது மட்டுமல்ல, சந்தேகப் பிராணி கண்ணாயிரம் கண்ணை மூடிக் கொண்டு ராலிஃபேன்  வாங்கி விட்டார்!



உங்களின் தேவை என்ன என்பதை மிக நன்றாக புரிந்து வைத்துள்ளது **ராலிஃபேன்**

U-RTF 20 TAM

நான்தான் தங்கம்!

அழகான மஞ்சள் நிறம் உள்ள, கவர்ச்சிகரமான, மனோரம்மியமான, பார்ப்பதற்கு மிருதுவானதாகக் காணப்படும் தங்கம்! ஆனால் மிகவும் உறுதியான தங்கம். வாயுக்களினாலோ, தண்ணீரினாலோ, பாதிக்கப்பட்டுத் துருப் பிடித்துவிடாத தங்கம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்தியர் ஓர் அங்குல உயரத்தில் 3,67,000 தகடுகளாகத் தட்டி அடுக்கி வைக்க இடம் கொடுத்த தங்கம்.

எவ்வளவு மெல்லியதாக இழுக்கப்பட முடியுமோ,



அவ்வளவு மெல்லியதாக இழைக்கப்பட அனுமதி அளித்து, 'தங்கக் கம்பி' என்று மனிதத் தன்மை புகழப்படுவதற்காகச் சொற்றொடரை உண்டாக்கிய தங்கம். குழந்தைகளைத் தாய்மார் ''என் தங்கமே! தங்கக் கட்டியே! தங்கக் குட்டியே!'' என்றெல்லாம் அன்புததும்பக் கொஞ்சி உளறுவதற்காக வசதி அளித்த தங்கம். ஏன், என்னை வெறுப்பதாகச் சொல்லும் பக்தர்கள்கூட, ''மாற்றறியாத செழும் பசும் பொன்னே!'' என்று என்னைக் கடவுளுக்கே உவமையாக்கிப் போற்றிப் புகழ்ந்து பாடிய தங்கமாக்கும்!

மனிதன் என்னை ஆற்று மணலிலிருந்து சலித்தெடுத்த அந்தக் காலத்திலேயே எனக்குப் பெரும் புகழும், மதிப்பும் கிராக்கியும் ஏற்பட்டுவிட்டன. பிறகு பூமியில் சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுத்து வருகிறார்கள். பல ரகசிய மூலிகைகளின் சாற்றில் செப்பைப் புடம் போட்டு என்னைச் செயற்கையாகத் தயாரிக்க ரசவாதிகள் முயன்றனர். முடியவில்லை. இப்போது விஞ்ஞானிகள் கடல் நீரிலிருந்தும் தயாரிக்க முயற்சி செய்துவருகிறார்கள்.

நான் மதிப்பில் எவ்வளவோ உயர்ந்து விட்டேன். சிலர் வைரமும் உயர்ந்தது என்கிறார்கள். ஆனால் அவற்றில் பலவற்றுக்குத் தோஷம் என்பது உண்டு. சிலவற்றால் துரதிர்ஷ்டம் ஏற்படும் என்ற கதைகள் இருக்கின்றன. வைரத்தைப் பொடி செய்து சாப்பிட்டால் உயிருக்கு ஆபத்து. என்னைப் பஸ்மமாக்கி மகரத்துவஜம் என்ற மருந்தாகச் சாப்பிட்டாலோ உடல் வலு ஏற்படும். முகத்தில் தேஜஸ் உண்டாகும். இந்திய மன்னர்கள் பலர் 'நீரக்' அதாவது என்னை மெல்லிய தகடாகச் செய்து உணவில் கலந்து கொண்டு சாப்பிடுவார்கள்!

என்னைப் பற்றி நான் இப்படியெல்லாம் தம்பட்டம் கொட்டிக் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. ஆனால், எனக்கு அடிமையா யிருக்கும் மனிதன் என்னைப் பெறுவதற்காகத் தன் மதிப்பை இழக்கவும், கொலை, கொள்ளை மற்றும் எது வேண்டுமானாலும் செய்யத் தயாரா யிருப்பதையும் நினைக்கக் கஷ்டமாயிருக்கிறது.

இன்றைய உலகில் நான் நம்பர் 2 கடவுள்!

அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கமே என்னைச் சில வாரங்கள் முன்னர் பகிரங்க ஏலத்தில் விற்றது.

இருபது லட்சம் அவுன்ஸ் தங்கம் ஏலத்துக்கு விட்டது. ஏழரை லட்சம் அவுன்ஸ்கள் தான் விற்பனை ஆயிற்று.

அமெரிக்க அரசாங்கமே என்று ஏன் சொன்னேன் தெரியுமா? அது நாற்பது வருடங்களுக்கு முன்னால் யாருமே தங்கத்தை வாங்கவும் கூடாது, விற்கவும் கூடாது என்று ஒரு சட்டம் போட்டது. எல்லாத் தங்கத்தையும் நாக்ஸ் எனப்படும் கோட்டைக்குள் பலமான ராணுவப் பாதுகாப்பு ஏற்படுத்திப் பத்திரப்படுத்தி வைத்தது.

அந்தப் பாதுகாப்புக்களையெல்லாம் மீறி ஒருவர் அதற்குள் புகுந்து கொள்ளை அடித்ததாக அயான் ஃபிளெமிங் ஒரு ஜேம்ஸ்பாண்ட் நாவல் எழுதினார்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஒரு பவுன் விலை பதின்மூன்று ரூபாய் மட்டுமே. இப்போது விலை 410 ரூபாய். அதாவது பன்னிரண்டு பங்குக்கு மேல். வைரம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் விற்றதைவிட இப்போது எட்டு பங்கே விலை உயர்ந்திருக்கிறது. எனக்குத்தான் மக்கள் மிக உயர்ந்த மதிப்புக் கொடுத்து, எதைச் செய்தாவது பெற்றுப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பண்டைய பாரத நாட்டின் ரிஷிகளும், மகான்களும், ஆசார்யாளும், பக்தர்களும், பெண்ணையும், பொன்னையும் வெறுக்க வேண்டும் என்று எத்தனையோ கதறியிருக்கிறார்கள். ஆனால்! என்னைப் பெற ஆசைப்படாத இந்தியன் ஒருவன்கூட இல்லை.

இந்த நவநாகரிக 1975ம் ஆண்டில்கூட இந்திய வாலிபர்கள் பலர் கழுத்தில் ஒரு



தங்கச் சங்கிலியை மாட்டிக் கொள்கிறார்கள்.

''என்ன விலையாக இருந்தாலும் கல்யாணப் பெண்ணுக்குப் பதினைந்து முதல் இருபத்தைந்து பவுன் வரை நகைகள் செய்து போட்டாக வேண்டும்'' என்று ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த மகத்தான காரியத்தைச் செய்துவிட்ட அம்மான் கூறுவதைக் கேட்க என் மனம் பதைபதைக்கிறது. தங்கக் கண்ணீர் விடுகிறேன்!

—அனுமதேயம்



சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

நாற்பத்தாறாம் அத்தியாயம்

வாதாபி

வட பெண்ணைக் கரையிலிருந்து சளுக்க சைனியத்தின் பெரும் பகுதி வடமேற்குத் திசையாக வாதாபி நகரத்தை நோக்கிக் கிளம்பிற்று. சிவகாமியும் அந்தச் சைனியத்துடன் பிரயாணம் செய்தாள்.

தொண்டை மண்டலத்துக் கிராமங்களிலே பார்த்த பயங்கரங்களைக் காட்டிலும் கொடுமையான காட்சிகளைப் பார்த்துக் கொண்டு போனாள். வீடுகளும் வைக்கோற் போர்களும் பற்றி எரிவதையும், பசுமையான தோப்புக்கள் போர் யானைகளால் அழிக்கப்படுவதையும் பயிர்கள் நாசமாக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டு போனாள். குற்றமற்ற கிராமத்து ஜனங்கள் கொல்லப்படுவதையும், திடகாத்திர புருஷர்களும் இளம் வயதுப் பெண்களும் சிறைப்பிடிக்கப்படுவதையும், தாய்மாரைப் பிரிந்த குழந்தைகள் அலறி அழுவதையும் பார்த்துக் கொண்டு போனாள்.

சிவகாமியின் உள்ளத்திலும் பெரிய தீப்பிழம்பு ஜுவாலை விட்டு எரியத் தொடங்கியது.

வாதாபிச் சக்கரவர்த்தியை மீண்டும் சந்தித்து இம்மாதிரி அக்கிரமக் கொடுமைகளைச் செய்ய வேண்டாமென்று வேண்டிக் கொள்ள விரும்பினாள். பல தடவை அதற்காகப் பிரயத்தனம் செய்தாள். தன்னுடன் வந்த காவலர்களைத் தன்னைப் புலிகேசியிடம் அழைத்துப் போகும்படி கேட்டுக் கொண்டாள். அந்தக் காவலர்கள் அவள் கூறியதைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை.

ஒவ்வொரு சமயம் அவள் இரவில் தூங்கும் போது, 'ஹா ஹா ஹா' என்று பேய் சிரிப்பது போன்ற சிரிப்புச் சத்தம் கேட்கும். திடுக்கிட்டுக் கண்ணை விழித்துப் பார்ப்பாள். எதிரே சற்றுத் தூரத்திலிருந்து வாதாபிச் சக்கரவர்த்தியின் உருவம் திரும்பிப் போவதுபோலத் தோன்றும். எழுந்து உட்காருவதற்குள் அந்த உருவம் மறைந்து போய்விடும். தன்னுடைய சித்தப் பிரமையில்







தோன்றிய உருவம்தான் அது என்று எண்ணிக் கொள்வான்.

புலிகேசி இளம் பிராயத்தில் சிற்றப்பன் மங்களேசனால் பெரிதும் கொடுமை செய்யப்பட்டவன். அதன் காரணமாக மரத்திலே வைரம் பாய்வது போல் அவனுடைய சுபாவத்திலேயே குரூரம் கலந்து இறுகிக் கெட்டிப்பட்டிருந்தது.

நாகநந்தியின் உதவியால் வாதாபிச் சிம்மாசனம் ஏறிய காலத்திலிருந்து உள்நாட்டு எதிரிகளை ஒழித்தல், வெளிப் பகைவர்களோடு யுத்தம் செய்தல் முதலிய கொடுங் காரியங்களிலேயே புலிகேசியின் வாழ்நாளெல்லாம் சென்றிருந்தது.

பிறருடைய துன்பங்களைப் பார்த்து வருந்துவது என்பது புலிகேசியின் சுபாவத்தில் இல்லவே இல்லை.

தற்சமயம், புலிகேசியின் சுபாவக் குரூரத்தை ஒன்றுக்குப் பத்தாக வளரச் செய்த காரணங்கள் இரண்டு ஏற்பட்டிருந்தன.

ஒன்று, மகேந்திர பல்லவனுடைய மாய தந்திரங்களினால் தன்னுடைய தென்னாட்டுப் படையெடுப்பு அபஜயமாக முடிந்ததில் ஏற்பட்டிருந்த ஆசாபங்கம்.

இன்னொன்று, இதுகாறும் வாதாபி இராஜ்யத்தின் பெருமையையும், தம்முடைய க்ஷேமத்தையும் தவிர வேறு கவனமே இல்லாமலிருந்த நாகநந்தியடிகளின் உள்ளத்தை ஒரு பல்லவ நாட்டுப் பெண் கவர்ந்து விட்டாளே என்ற அசூயையும், ஆத்திரமும்.

இக் காரணங்களினால் தம் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்த குரோதத்தையெல்லாம் புலிகேசிச் சக்கரவர்த்தி தாம் சென்ற மார்க்கத்தில் எதிர்ப்பட்ட குற்றமற்ற ஜனங்கள் மீது காட்டினார்.

அதனோடு, சிவகாமியின்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்கும் தக்க வழியை யோசித்துக் கொண்டிருந்தார்.


இதையெல்லாம் அறிந்திராத சிவகாமி, தான் மட்டும் வாதாபிச் சக்கரவர்த்தியை இன்னொரு தடவை நேருக்கு நேர் சந்திக்க முடிந்தால், அவருடைய படைகள் செய்யும் கொடுமைகளையெல்லாம் நிறுத்திவிடலாம் என்று ஆசையுடன் நம்பினாள். அவளுடைய இந்தமனோரதம் வாதாபி போய்ச் சேரும் வரையில் நிறைவேறவில்லை.

வாதாபியில் பெரியதோர் அழகான அரண்மனையில் சிவகாமி கொண்டு வந்து சேர்க்கப்பட்டாள். அவளுக்குத் துணையாகவும், பணிவிடை புரிவதற்காகவும் இரண்டு தாதிப் பெண்கள் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் பிராகிருதமும் தமிழும் கலந்த பாஷையில் பேசினார்கள். அந்தத் தாதிப் பெண்களுடைய பேச்சையெல்லாம் சிவகாமி எளிதில் புரிந்து கொள்ளுதல் சாத்தியமாயிருந்தது.

சக்கரவர்த்தி கட்டளையின் பேரிலேயே அந்த அரண்மனை சிவகாமிக்காகத் திட்டம் செய்யப்பட்டதென்றும், அவளுக்கு யாதொரு சௌகரியக் குறைவும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளும்படி ஆக்ஞை என்றும் மேற்படி தாதிப் பெண்களிடம் சிவகாமி தெரிந்து கொண்டாள். இதெல்லாம் அவள் எதிர்பார்த்தபடியே இருந்தது. ஆகவே, கூடிய சீக்கிரம் புலிகேசிச் சக்கரவர்த்தி தன்னைப் பார்க்க அங்கு வருவார் என்றும் சிவகாமி தீர்மானித்தாள். அப்படி அவர் வரும்போது என்ன பேச வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி ஓயாமல் சிந்தித்த வண்ணம் இருந்தாள்.

சக்கரவர்த்தியின் விஷயத்தில் சிவகாமியின் மனோபாவம் இரண்டு விதமாயிருந்தது. ஒரு சமயம், அவருடைய சைனியம் செய்த கொடுஞ் செயல்களை எண்ணி எண்ணி அவளுடைய உள்ளம் கொதித்தது. மற்றொரு சமயம், அப்பேர்ப்பட்ட கொடுங்கோல் மன்னன் மீது அபலையாகிய தனக்கு ஏற்பட்டிருந்த சக்தியை நினைத்து அவள் உள்ளம் பெருமிதம் அடைந்தது.

இராவணன் கவர்ந்து சென்று அசோக வனத்தில் சிறை வைத்த சீதாதேவியின் நினைவு சிவகாமிக்கு அடிக்கடி வந்தது. சீதையின் நிலைமைதான் தன்னுடைய நிலைமை



யும். இராமபிரான் இராவணனை வென்று சீதையைச் சிறை மீட்டுக் கொண்டு போனது போல் மாமல்லர் ஒருநாள் வந்து இந்தப் பாதகப் புலிகேசியை வென்று தன்னைச் சிறைமீட்டுக் கொண்டு போகப் போகிறார்!

இவ்விதம் நம்பிய சிவகாமி சீதைக்கும் தனக்கும் இருந்த வித்தியாசத்தைப் பற்றியும் எண்ணமிட்டாள். சீதாதேவியை இராவணன் அவளுடைய அழகுக்காக ஆசைப்பட்டு அவளைக் கொண்டு வந்தான். அவளைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினான். ஆனால், புலிகேசியோ, தன்னிடமிருந்த நாட்டியக் கலையின் மேல் மோகம் கொண்டு தன்னைச் சிறைப்பிடித்து வந்திருக்கிறான். புலிகேசியே மாறுவேடம் பூண்ட புத்த பிக்ஷு என்னும் நம்பிக்கை சிவகாமியின் உள்ளத்தில் வேரூன்றியிருந்தபடியால் இவ்விதம் எண்ணினாள்.



ஆகையால் இராவணன் மீது சீதைக்கு இல்லாத செல்வாக்கு, தனக்கு வாதாபிச் சக்கரவர்த்தியின் மீது இருக்கிறது. தன் கலையின் சக்தி கொண்டு அவரைத் தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டி வைக்கலாம். ஆ! அந்தப் பொல்லாத புத்த பிக்ஷுவைத் தான் இலேசில் விடப் போவதில்லை. வரட்டும் இங்கே! எப்படியும் என்னிடம் வந்துதானே ஆக வேண்டும்?

சிவகாமி வாதாபி வந்து சேர்ந்த எட்டாம் நாள் அவளுடைய மனோரதம் ஈடேறியது. சக்கரவர்த்தி அவளைப் பார்ப்பதற்காக அந்த அரண்மனைக்கு வந்தார். வாசற்புறம் இருந்த தாதி ஓடி வந்து, ''சக்கரவர்த்தி வருகிறார்!'' என்று தெரிவித்ததும், சிவகாமி மிக்க பரபரப்புக் கொண்டு வாதாபிச் சக்கரவர்த்தியை வரவேற்கவும், அவர் மீது தன் கூரிய கண்ணம்புகளையும், சொல்லம்புகளையும் செலுத்தவும் ஆயத்தமானாள்.

ஆனால், சக்கரவர்த்தி அரண்மனைக்குள்ளே வந்து நின்று அவளை மேலும் கீழும் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, அவள் கனவிலே கேட்டது போன்ற ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்ததும், சிவகாமி எண்ணியிருந்த எண்ணமெல்லாம் எங்கேயோ போய்விட்டன. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பீதி அவளுடைய இருதயத்தில் புகுந்து தேகமெல்லாம் வியாபித்துத் தேகத்தின் எலும்புகளுக்குள்ளே பிரவேசித்து ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. வாயைத், திறந்து பேச முடியாதபடி நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

''சிற்பி மகளே! நாட்டிய கலாராணியே! மகேந்திர பல்லவனின் கலைப் பொக்கிஷமே! சௌக்கியமா? வாதாபி வாசம் உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று புலிகேசி கேட்டபோது, சிவகாமியின் உடம்பு படபடத்து நடுங்கிற்று.

தன்னுடைய நாட்டியத் தோற்றங்களில் வெகு சாதாரணமான தோற்றத்தைக் கண்டு அப்படியே பரவசப்பட்டு நின்ற புத்த பிக்ஷுவா இவர்? தன்னிடம் அணுகும்போதே பயபக்தியுடன் அணுகி, உணர்ச்சி மிகுதியினால் தன்னுடன் பேச முடியாமல் தத்தளித்து நின்ற நாகநந்தி இவர்தானா? பொன்முகலி நதிக்கரையில் தொண்டை நாட்டுப் பெண்களை விடுதலை செய்ய வேண்டுமென்று தான் வரங் கேட்டுப் பெற்றபோது, அவர் இவ்விதமில்லையே? வாதாபி நகருக்கு வந்துவிட்டதனாலேயே இவரிடம் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதா?

இவ்விதம் சிவகாமியின் உள்ளக்கடல் கொந்தளித்துக் குழம்ப, புலிகேசியின் கேள்விகளுக்கு மறுமொழி ஒன்றும் சொல்ல முடியாமல் நின்றாள். அதைப் பார்த்த புலிகேசி, ''பெண்ணே! ஏன் மௌனம் சாதிக்கிறாய்? 'கலை உணர்ச்சி இல்லாத வாதாபிப் புலிகேசியுடன் நமக்கென்ன பேச்சு' என்ற எண்ணமா? அப்படி நான் அடியோடு கலை உணர்ச்சி இல்லாதவனல்ல. அவ்விதம் இருந்தால் சிறைப்படுத்திக் கொண்டு வந்த உன்னை இந்த அரண்மனையில் வைத்திருப்பேனா? பல்லவ நாட்டின் இணையற்ற நடன கலா ராணிக்குத் தகுந்த அலங்கார மாளிகை அல்லவா இது? இங்கு உனக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா? பணிப் பெண்கள் திருப்தியாகப் பணி

விடை செய்கிறீர்களா? ஏதாவது குறை இருந்தால் சொல்!'' என்றார்.

புலிகேசியின் பேச்சு எவ்வளவோ அருவருப்பாயிருந்த போதிலும் இனி பேசாமல் இருக்கக் கூடாது என்று சிவகாமி கருதி, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''பிரபு! இங்கு எல்லாம் சௌகரியமாயிருக்கிறது. ஒரு குறையும் இல்லை. மிக்க வந்தனம்!'' என்றாள்.

''ஆஹா! வாய் திறந்து பேசுகிறாயா? நல்ல வேளை! நீ மௌனமாய் நின்றதைப் பார்த்துவிட்டு, ஒருகால் நீ உயிருள்ள பெண்தானோ அல்லது உன் தந்தை அமைத்த கற்சிலைகளில் ஒன்றைத்தான் சிறைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டோமோ என்று சந்தேகித்தேன். நீ இந்த மட்டும் பேசியது மிக்க சந்தோஷம். உன்னுடைய வந்தனத்தைத் தெரிவித்தது அதைவிடச் சந்தோஷம். நீ வாயினால் சொன்னபடி உண்மையாகவே எனக்கு வந்தனம் செலுத்த விரும்பினால் அதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது'' என்று புலிகேசி மேலும் கூறத் தயங்கி நின்றார்.

அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற பீதியுடன் சிவகாமி மௌனமாயிருந்தாள்.

''பெண்ணே! அந்த மூடன் மகேந்திர பல்லவன் என்னைக் கலை உணர்ச்சியற்றவன் என்று சொன்னான். அதையும் நீ நம்பினாய். நரிக்கும் புலிக்கும் எவ்வளவு வித்தியாசமோ, குட்டைக்கும் சமுத்திரத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, உள்ளங்கை அகலமுள்ள தொண்டை மண்டலத்துக்கும் விஸ்தாரமாகப் பரந்த சளுக்க சாம்ராஜ்யத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் மகேந்திர பல்லவனுடைய கலை உணர்ச்சிக்கும் என்னுடைய கலையுணர்ச்சிக்கும் உண்டு. கூடிய சீக்கிரத்தில் இதை நீயே தெரிந்து கொள்வாய். கலாராணியே கேள்! தொலை தூரத்தில் உள்ள பாரசீக நாட்டுச் சக்கரவர்த்தியிடமிருந்து என்னுடைய சபைக்குத் தூதர்கள் வந்திருக்கிறார்கள். என்னுடைய நட்பைக் கோரிப் பாரசீக சக்கரவர்த்தி காணிக்கைகளும் சன்மானங்களும் அனுப்பியிருக்கிறார். பாரசீகத் தூதர்களைப் பகிரங்கமாக வரவேற்பதற்கும் அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளை ஏற்பதற்கும் நாளைய தினம் நமது மகுடாபிஷேக மண்டபத்தில் மகாசபை கூடுகிறது. அந்த மகாசபையில் வந்து நீ நடனம் செய்ய வேண்டும்.''

இத்தனை நேரம் பயமும் பல வகைக் குழப்பங்களும் குடிகொண்டிருந்த சிவகாமியின் உள்ளம் நடனம் என்ற வார்த்தையைக் கேட்டதும் அசாதாரண தைரியத்தை அடைந்தது. கொஞ்சமும் தயங்காமலும் பயப்படாமலும் தலைநிமிர்ந்து புலிகேசியை நோக்கி, அழுத்தம் திருத்தமான குரலில், ''முடியாது!'' என்றாள்.

புலிகேசியின் கண்கள் ஒருகணம் ஜுவாலாக்கினியைக் கக்கின. தன்னை மீறிக் கொண்டு வந்த கோபத்தைப் புலிகேசி பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டதாகத் தோன்றியது.

''பெண்ணே! ஏன் இவ்வளவு கண்டிப்பாக 'முடியாது' என்று சொல்லுகிறாய்? மூன்று நாள் உனக்கு அவகாசம் கொடுக்கிறேன். யோசித்துச் சொல்!'' என்றார் புலிகேசி.

''யோசிப்பதற்கு அவசியமே இல்லை, பிரபு! என்னைத் தங்களுடைய சபையில் ஆடச் சொல்லி, மகேந்திர பல்லவரைத்



தாங்கள் ஜயித்து வந்தது பற்றி உலகத்துக்கெல்லாம் பறையறையப் போகிறீர்கள். 'பல்லவ நாட்டிலிருந்து கொண்டு வந்த அடிமை இவள்!' என்று சுட்டிக் காட்டப் போகிறீர்கள். ஆ! தங்கள் நோக்கம் தெரிந்தது. தாங்கள் என்னைச் சிறைப் பிடிக்கலாம். என்னுடைய தேகத்தை அடிமை கொள்ளலாம். என் ஆத்மாவையும் கட்டுப்படுத்தலாம். ஆனால், என்னிடமுள்ள கலையைத் தங்களால் அடிமைப் படுத்த முடியாது. அதிகாரத்துக்கு அடங்கி, ஆக்ஞைக்குப் பயந்து, நான் நடனம் ஆட மாட்டேன்! ஒருநாளும் ஆட மாட்டேன்'' என்றாள்.

ஆத்திரம் பொங்கிய குரலில் சிவகாமி மேற்கூறிய மொழிகளைக் கூறி வந்த போது புலிகேசியின் கண்கள் செந்



தணல் நிறம் பெற்று கனல் உமிழ்ந்தன.
சிவகாமி பேசி முடித்ததும் புலிகேசி பழையபடி ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்தார்.

''பெண்ணே! பொறு. இவ்வளவு பதற்றம் உனக்கு எங்கிருந்து வந்தது? அப்படி யொன்றும் உன் தேகத்தையோ உன் கலையையோ அடிமைப்படுத்த எனக்கு உத்தேசமில்லை. உனக்கு இஷ்டமில்லாவிட்டால் நீ நடனம் ஆட வேண்டாம். இந்த அரண்மனைக்குள்ளே உன்னைச் சிறைப்படுத்தி வைத்திருப்பதாகவும் எண்ண வேண்டாம். உனக்கு இஷ்டமானபோது நீ இந்த மாளிகையை விட்டு வெளியே போகலாம். வாதாபி நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம். உங்கள் காஞ்சியைப் போல் எங்கள் வாதாபி அவ்வளவு அழகாயில்லா விட்டாலும், ஏதோ பார்க்கத் தகுந்த காட்சிகள் இங்கேயும் இருக்கின்றன. இந்த அரண்மனை வாசலில் காவல் காப்பவர்கள் உன்னைச் சிறை வைப்பதற்காக இங்கு இருக்கவில்லை. உனக்கு ஏவல் புரிவதற்காக இருக்கிறார்கள். நீ எப்போது சொல்கிறாயோ அப்போது அவர்கள் உனக்குப் பல்லக்குத் தருவித்துக் கொடுப்பார்கள். மறுபடியும் என்னைப் பார்ப்பதற்கு நீ விரும்பினாலும் அவர்களிடமே சொல்லி அனுப்பலாம். சிற்பி மகளே! நீ என் அதிகாரத்துக்குப் பயந்து நடனமாட வேண்டாம். உன் இஷ்டம் போல் சுயேச்சையாகவும் சுயமாகவும் இருக்கலாம்!''

இவ்விதம் சொல்லிவிட்டுப் புலிகேசி சக்கரவர்த்தி சிவகாமியைக் கூர்ந்து பார்த்தார். அந்தப் பார்வையில் எல்லையில்லாத துவேஷமும், பழி வாங்கும் உறுதியும் குடிகொண்டிருந்ததைச் சிவகாமி கவனிக்கவில்லை. அந்த ஏழைப் பெண் அப்போது தரையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். கொடுமைக்கும் கொடூரத்துக்கும் பெயர் போன வாதாபிப் புலிகேசியைத் தான் வென்று விட்டதாக அவளுடைய உள்ளம் இறுமாப்புடன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

* * *

அன்று மாலை சிவகாமி வாசற் காவலரிடம் தான் வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்க விரும்புவதாகக் கூறிப் பல்லக்குக் கொண்டு வரச் சொன்னாள்.

''உன்னை இங்கே சிறை வைத்திருக்கவில்லை. உன் இஷ்டப்படியே சென்று வரலாம்'' என்று புலிகேசி கூறியது அவள் மனத்தை விட்டு அகலாதிருந்தது.

தன்னுடைய சுதந்திரத்தை அன்றே பரிசோதித்துவிட எண்ணிப் பல்லக்கில் ஏறிக்கொண்டு புறப்பட்டாள்.

(தொடரும்)

தமிழ்நாட்டுக்கு ஒரு திருப்பதி


தமிழ்நாட்டில் ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்குமுன் திருப்பதி ஸ்தலம் ஒன்று கொள்ளிடக்கரை அருகே உள்ள திருமயிலாடி ஊரிலிருந்து கிழக்காக ஒரு மைல் தூரத்திலிருந்திருக்கிறது. கொள்ளிடம் வெள்ளத்தில் பல நூறு வருடங்களுக்கு முன்பே இத்திருத்தலம் மண்மூடிப் போயிருக்கிறது.



சமீபத்தில் பிருந்தாவனவாசியான மகாத்மா ஹரிதாஸ் ஸ்வாமிகள் இத்தலத்துக்கு வருகை தந்தார். அவரது பெரு முயற்சியால் மண் மூடி, பெரிய ஆலமரத்தின் விழுதுகளால் மூடப்பட்டுப் பூமியின் அடியில் இருந்த திரு வேங்கடாசலபதி தேவியருடன் இருக்கும் ஆறடி உயரக் கருங்கல் உருவச் சிலையும், ஹனுமான் சிலையும், சிறிய உத்ஸவர் விக்கிரகமும் கிடைத்திருக்கின்றன. அவர் இத்தலத்திலேயே தங்கியிருந்து பெருமாள் வேங்கடாசலபதிக்கு ஒரு கோயில் அமைக்க வழி வகுத்து வருகிறார்.

தொன்மை வாய்ந்த இக்கோயில் புனருத்தாரணத்துக்கு உதவ விரும்புவோர் நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி: திரு டி. கே. சுவாமிநாதன், செயலாளர், தென் திருப்பதிக் கோயில் திருப்பணிக்கமிட்டி, புத்தூர், வழி மாயூரம்.

இத்தலத்தை நேரில் தரிசிக்க விரும்புவோர் சீர்காழிக்கு அருகில் உள்ள திருமயிலாடியை ரயிலிலோ, பஸ் மார்க்கத்திலோ அடையலாம். - படங்கள், தகவல்கள்: ரா. வைத்தியநாதஸ்வாமி.



காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும்


புதிய
பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்

பயன்படுத்தி
அவற்றைப்
பாதுகாருங்கள். காயங்களை
விரைவில் ஆற்ற இப்போது
மெர்க்கியூரோக்ரோம்
மருந்து கலக்கப்பட்டுள்ளது.



உங்கள் குழந்தைகளின் வாழ்வில் தூசியும் அழுக்கும் எங்கும் இடம் பெறுகின்றன. ஆனால் அவை இடம் பெறக் கூடாத இடம் ஒன்று உண்டு—அதுதான் திறந்த காயம்.

எல்லா சிறிய வெட்டுக் காயங்கள், சீறல்கள் மற்றும் சிராய்ப்புகளை ஆற்றுவதற்கு புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் உபயோகியுங்கள். இப்போது அதில் மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப் பட்டுள்ளது. இந்த நிரூபணமான ஆன்டிசெப்டிக் மருந்து பிளவுபட்ட சருமத்துக்கு இதமளித்து, காயங்களை ஆற்ற உதவுகிறது. புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் பயன்படுத்திப் பாதுகாப்பது விவேகமாகும்.



எப்பொழுதும்
புதிய
பாண்டு-எய்ட்*
டிரஸ்ஸிங்குகள்
கைவசமிருக்கட்டும்.

A Johnson & Johnson product

*TRADEMARK © J & J

OBM-3173 TM

ஒரு புதிய

ஆபீஸிலிருந்து வரும்போதே தலையை இலேசாக வலித்துக் கொண்டிருந்தது. அதை நான் லட்சியம் செய்யவில்லை. வீட்டில் நுழைந்தபோது அது அதிகமாகிவிட்டது. அதற்கு என் தர்மபத்தினியின் கூப்பாடுதான் காரணம் !

காரிலிருந்து இறங்கும்போதே, ''ஏன் ஒரு மாதிரி இருக்கேள்?'' என்று ஆரம்பித்து விட்டாள்.

என் மனைவி விசாலிக்குத் தெரியாததே ஒன்றும் கிடையாது. அவளிடமிருந்து எதை யும் மறைக்க முடியாது. அவள் தொண தொணப்பிலிருந்து யாரும் தப்பவும் முடி யாது....

''ஒன்னுமில்லே. இலேசாகத் தலைவலி.''— நான் அவசரமாகக் காரிலிருந்து இறங்கி வீட் டுக்குள் நுழைந்து விட்டேன்.



இல்லாவிட்டால் வாசலிலேயே கூப்பாடு போட ஆரம்பித்து விடுவாள். ''எனக்குத் தெரியும்... இது சாதாரணத் தலைவலியாக இருக்காது. ஷுகரெல்லாம் டைபாய்டும், மஞ்சள் காமாலையும் தலை விரிச்சாடறது, ஏதாவது ஒன்று கெடக்க ஒன்று வந்துடப் போறது....''

'' உஸ்..... சத்தம் போடாதயேன்....''

''ஆமாம்...! ஆ...ஊன்னு என்னைத்தான் அடக்கத் தெரியும். கடைசியில் கிடந்து அவஸ்தைப்படறது யார் ?''

இதற்குள் எதிர் வீட்டில் இரண்டொரு தலைகள் எட்டிப் பார்க்கவே நான் பேச்சை அத்துடன் முடித்துக் கொண்டு உள்ளே வந்து விட்டேன். அரை நொடியில் ஏதோ ஒரு கஷாயத்தை எடுத்துக் கொண்டு அவள் என் எதிரில் வந்தாள்.

இந்த ஐம்பது வயதிலும் அவள் சுறு சுறுப்பை என்னால் வியக்காமல் இருக்க முடிய வில்லை. அதை மறுக்காமல் வாங்கிக் கொண் டேன் நான். அது எட்டிக்காயாகக் கசக்கும் என்கிற 'முன் அனுபவம்' இருந்தாலும், அந்தக் கசப்பைக்கூடப் பொறுத்துக் கொள்ள லாம், அவள் தொணதொணப்பிலிருந்து மீள என்று 'தைரியமாய்'க் குடித்துவிட்டு 'ஈஸிசேரில்' சாய்ந்தேன்.

விசாலியுடன் என் வாழ்வு பிணைக்கப் பட்டுக் கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் ஆகின்றன. அவளின் பழமைகள் இன்னும் தேயாமல், மெருகு குலையாமல் இருப்பது எனக்கு ரொம்ப மகிழ்ச்சிதான். ஆனால் அதே சமயத்தில் ஒரு புதிய வெள்ளத்துக்கு, ஒரு புதிய நடைக்கு ஈடு கொடுக்கும் தெம்பு அவ ளிடம் இல்லையே என்பதை நினைக்கும்போது எனக்கு வேதனையாகவும் இருந்தது. சில சமயங்களில் வெறுப்பாகவும் இருந்தது! ஒரு குறுகிய வட்டத்தில் தன்னைப் பிணைத்துக் கொண்டு கணவன் தனக்குக் கட்டுப்பட்டவன், மகன் தனக்கு அடங்கியவன், இந்த வீட்டின் எஜமானி தான்தான், தன்னைத்தான் அனை வரும் கேட்க வேண்டும் என்கிற மாதிரியான சில கோட்பாடுகளை உருவாக்கிவிட்டு அவை களை மற்றவர்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்கிற கட்டுப்பாட்டில் அதிக கவனம் செலுத்துபவளாக அவளால் எப்படி இன்னமும் வாழ முடிகிறது ?....

ஏதாவது வேலைக்காரிக்கோ, சமையல் காரிக்கோ சந்தேகம் வந்தால் என்னிடம் ஏதாவது கேள்வி கேட்டுவிட்டால், அத்துடன் அவள் வேலை தொலைந்தது! ''ஐயாவிடம் என்ன பேச்சு ? அவரா உனக்கு வேணுங்கிற சமயம் பார்த்து முன்பணமும், தீபாவளிக்குப் புடவையும் வாங்கித் தரார்? ஆள் பின்னை யிடம் என்னடி பேச்சு ? நான் இல்லே ? வீட்டு எஜமானி நான் ! என்னைக் கொன்னை கொண்டு போயிடுத்தா என்ன?''

யாரும் மூச்சுக் காட்டமாட்டார்கள்....


தப்பித் தவறி யாராவது எதிர்த்துப் பேசி விட்டால்......

''எல்லாம் ஐயா கொடுத்த இடம்.... அவரவர்களை அந்தந்த இடத்தில் வைக்க ணும்.... இடத்தை குடுத்தா மடத்தைப் பிடுங்கற வேலை.... என்னை யார் மதிக்கிறா... இந்த வீட்டிலே ?'' — என்ற புலம்பல்....

தன்னை யாரும் மதிக்கவில்லையோ என்கிற பயத்தில், சமூகத்தில் தன் தனி அந்தஸ்து உருக்குலைந்து விடுமோ என்கிற அச்சத்தில், தனக்குத் தானே தோற்றுவித்துக் கொண்ட பொய்மையான பிரமைத் தோற்றங்களில் அவள் புதைந்து போகிறாள். எனக்குப் புரிகிறது ! அவளுக்குப் புரியவில்லையே !

அன்று இப்படித்தான் நான், என் மகன் பதி (இன்ஜினியரிங் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறான்) விசாலி மூவரும் சினிமா போனோம்.

''டேய், பதி... இங்கே வாடா....இங்கே இடம் இருக்குடா.....'' என்று அவள் கத்தி யது தியேட்டர் முழுதும் எதிரொலித்தது.




தலைமுறை!

விமலா ரமணி.

பதி சிரித்தபடியே தன் தாயின் அருகில் சென்றான்....

'இண்ட்ரவெலில்' 'கூல்டிரிங்க்' வாங்கிச் சாப்பிட நினைத்தவனை—''கூல் டிரிங்க்' உடம்புக்கு ஆகாது.... சூடா காப்பி சாப்பிடு... வேளை கெட்ட வேளையில் கூல் டிரிங்க் சாப்பிட்டால் என்னத்துக்கு ஆறது?'' என்று கூறிச் சமீபத்தில் அவனுக்கு வந்த 'ப்ளூ' ஜுரக் கொடுமை, அதற்காக அவன் பட்ட அவஸ்தை இவைகளையெல்லாம் இரைந்து அவள் விவரித்தாள்.

இடைவேளையில் அக்கம் பக்கம் இருந்தோர்க்கு ஒரு குட்டி சினிமா, காசில்லாமல் பார்த்த நிறைவு கிட்டியிருக்கும்!

மா(ு)த புன்சிரிப்புடன் அவன் திரைப்படத்தில் லயித்திருந்தான். அவனது பொறுமையை நான் பாராட்டினேன்.

இந்த வீட்டுக்குள், இந்தச் சூழ்நிலையில் இவன் வளர்ந்தால் இவனும் இவளைப் போலவே மனத்தால் குறுகிப் போவான் என்று ஹாஸ்டலில் சேர்க்க நான் எத்தனையோ கஷ்டப்பட்டேன். விசாலி தடுத்து நிறுத்தி விட்டாள்.

ஹாஸ்டலில் சேர்த்தால் அவன் கெட்டுப் போய்விடுவானாம்! எனக்கென்னமோ இந்தக் குறுகிய வட்டத்துக்குள் அவன் உணர்வுகளை தாங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கெட்டுப் போக்கிக் கொண்டு இருப்பதாகத் தோன்றியது.

'சுவிசேர்' கிரீச்சிட்டது. நான் என் நினைவுகளிலிருந்து மீண்டேன்.

ஏதோ ஒரு சினிமாப் பாடலை முணு முணுத்தபடி உள்ளே நுழைந்த பதியிடம்....

''பதி...! அப்பா தலைவலின்னு சுவிசேரில் சாய்ஞ்சுகண்டிருக்கார்...சத்தம் போடாதே!'' என்கிற அவள் குரலின் கம்பீரத்துக்குமுன் அவன் பாடல் தேய்ந்து போயிற்று! சின்னச் சின்ன விஷயங்களுக்கும் தடை! சாதாரண ஆசைகளுக்கு முற்றுப் புள்ளி!

இப்படி ஒவ்வொரு செயலிலும் தனது சர்வாதிகார வல்லமையை வெளிப்படுத்த நினைத்து இந்த வீட்டில் தனக்குள்ள உரிமையை எப்போதும் இவள் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறாளா?

அவள் காப்பி குடிக்கக் கூப்பிட்டால் ஓடி வர வேண்டும்! சாப்பிடக் கூப்பிட்டால் பதறி அடித்துக் கொண்டு வர வேண்டும்! ஏன்? ஏன்? இந்த வீட்டில் தன்னுடைய ''பொஸஸிவ்னெஸ்ஸை' நிலைநிறுத்த ஒவ்வொன்றிலும் ஒரு முத்திரை பதிக்கிறாளோ? ஒரே மாதிரி அவள் ஆணைகளுக்குக் கட்டுப் பட்டுக் கட்டுப்பட்டு நாங்களே இயந்திர மாகிவிட்டோமோ? இதை எதிர்க்க முடிய வில்லை! காரணம்...? இதன் பின்னணியில் அன்பு, பாசம் என்கிற பலமான பிணைப்பு இருப்பதை உணருகிறேன். ஆனாலும்... நான் வயதானவன்.... முப்பது வருடங்களாக இந்த இயந்திர கதிக்கு என்னை உட்படுத்திக் கொண்டு வாழப் பழகிக் கொண்டவன்.

ஆனால் பதியால் இது எப்படிச் சாத்தியமாகிறது? அவன் ஒரு புதிய தலைமுறையின் புதிய வார்ப்படம்! இந்தப் பழைமைக்கும், போலிக்கும், ஆவை வர்க்கத்துக்கும் அவனால் எப்படி அடிபணிய முடிகிறது?

ஒரு நாள்கூடத் தன் தாயை அவன் எதிர்த்து நான் பார்த்ததில்லை....

என் மீது நிழல் படிவதை உணர்ந்தேன்.

'சட்'டென்று நிமிர்ந்து பார்த்தேன்.

பதி!

''தலைவலியா அப்பா?''

வீடு நிசப்தமாக இருந்ததிலிருந்து விசாலி வெளியே போயிருக்கிறாள் என்பதை யூகித்தேன்.

''அம்மா கோயிலுக்குப் போயிருக்கிறாள்'' என்றான் சுருக்கமாக.

என் நெற்றியில் அவன் விரல்கள் அழுந்தப் பதிந்தன.

'சட்'டென்று என்னுள் ஏதோ நெகிழ்வது போலிருந்தது. சின்னஞ் சிறு வயதில் அவன்

ஒரு முறை காய்ச்சலால் படுத்திருந்தபோது அவன் அருகில் நானும், விசாலியும் மாறி மாறி உட்கார்ந்து இராப் பகலாகக் கண் விழித்திருந்த கதை நினைவுக்கு வருகிறது. அவன் தூங்கிவிட்டால் என்ன செய்வது என்று நானும், நான் தூங்கிவிட்டால் என்ன செய்வது என்று அவனும் ஒரே உணர்வு அலைகளால் தூண்டப்பட்டு இருவருமே விழித்திருந்தோம்! மகனைப் பொறுத்தவரையில் இருவருக்குமே ஒரே நினைவு!

''உங்களிடம் ஒரு முக்கியமான சங்கதி பேச வேண்டும்.''

நான் ஆச்சரியப்படுகிறேன். இவன் தனிமையில் என்னிடம் என்ன சொல்லப் போகிறான்? ஓ! நாளை மறுநாள் பெண் பார்க்கப் போகிறோம்! பெரிய இடம்.... விசாலி பார்த்து ஏற்பாடு செய்திருக்கிறாள்! கையில் ரொக்கமாக இருபதினாயிரம் ரூபாய் தருகிறார்களாம்.... ஐம்பது பவுன் நகை போடுகிறார்களாம்... பெரிய பணக்காரர்கள். பெண் பி. ஏ. படித்திருக்கிறாள்... நல்ல அழகு.... அநேகமாக எல்லாம் முடிந்த மாதிரி தான்..... நாங்கள் பார்த்துவிட்டோம்.... ரவிதான் பார்த்து 'ஓ.கே.' சொல்ல வேண்டும்... அது சம்பந்தமாக ஏதாவது....

''என்ன ரவி?'' என்றேன்.

''நாளை மறுநாள் பெண் பார்க்கப் போகிறோம் அல்லவா? அது அவசியம்தானா?''

''நீதான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாய். நீ பெண் பார்ப்பது ரொம்ப அவசியம்.''

சற்று நேரத் தயக்கத்துக்குப் பின் அவன் சொன்னான்: ''எனக்கு இப்போது கல்யாணமே அவசியம் இல்லை என்று தோன்றுகிறது....''

நான் ஒரு கேள்விக் குறியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தேன்.

அவன் பேச ஆரம்பித்தான்.

''என்னை மன்னித்து விடுங்கள். நான் இது வரை அம்மாவின் எந்தக் கோரிக்கையையும் அவமதித்தது கிடையாது. காரணம் தாய்மைக்கு நான் மதிப்புக் கொடுக்கக் கற்றிருந்ததுதான். சில சமயங்களில் அந்த அளவுக்கு அதிகமான பக்தியே என் கோபத்தை அர்த்தமற்றதாக்கி யிருக்கிறது. அவளின் ஆசாபாசங்களை நான் புரிந்து கொண்டிருக்கிறேன் என்கிற பெருமிதமே சில சமயங்களில் அவளின் அர்த்தமற்ற பேச்சுக்களைக் கேட்கக் கூடிய நல்ல மனத்தை எனக்குத் தந்திருக்கிறது. ஆனால் கல்யாணம் என் வாழ்க்கைப் பிரச்னை. இதில் என் உணர்வுகளுக்குத்தான் முதலிடம் தரப்பட வேண்டும். அம்மாவின் கட்டாயத்துக்காக, அவள் உணர்ச்சிகளை மதிக்கிறேன் என்ற பெயரில் நான் எனக்கு விருப்பமில்லாத ஒரு திருமணத்துக்கு உட்படுவது தற்கொலைக்கு ஒப்பாகும். என்னுடன் கல்லூரியில் படிக்கும் பிரேமாவை நான் காதலிக்கிறேன். எங்கள் காதல் உடலுக்காக அலையவில்லை. அதனால் கல்யாணத்துக்கு இப்போது அவசரமில்லை. என் படிப்பு முடிந்து என் மனைவியை என்னால் காப்பாற்ற முடியும் என்ற நிலைக்கு நான் வந்தபின்தான் திருமணத்துக்கு உடன்படுவேன். பிரேமாவிடம் அம்மா எதிர்பார்க்கிற சமூக அந்தஸ்தோ, பண பலமோ கிடையாது. ஆனால் அதே பிரேமாவிடம் அம்மா விரும்புகிற அத்தனை பெண்மையின் இலக்கணங்களும் இருக்கின்றன. பிரேமாவைத் தவிர வேறு யாரையும் நான் மணக்க முடியாது. இது சத்தியம். இதை நான் உங்களிடம் சொல்ல வந்தது இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண அல்ல. ஏனெனில், இந்த வீட்டைப் பொறுத்தவரை அம்மாவே எல்லாமாகிப் போனபிறகு இதைப் பற்றி உங்களிடம் நான் பேசுவதுகூட அநாவசியம்தான். ஆனால் தந்தை — மகன், தாய் — மகன் என்கிற உறவுகளை நான் மதிக்கிறவன். அந்த உறவுகளுக்குப் பங்கம் ஏற்படாதபடி வாழ ஆசைப்படுகிறவன். அந்த உறவு நீடிக்க வேண்டுமானால், அந்த உறவின் எல்லைகளைக் கடந்து அப்பால் நின்று கொண்டு புன்முறுவல்களைப் பரிமாறிக் கொள்வதுதான் நல்லது. பிரேமாவை நான் மணக்கப் போவது எவ்வளவு உறுதியோ அத்தனை உறுதி அவளை நான் மணந்தவுடன் தனிக் குடித்தனம் போவதும். இந்த வீட்டில் வாழ இடமில்லையா என்று கேட்காதீர்கள். வாழ்வு வேறு, கடன் வேறு.... நான் வாழ ஆசைப்படுகிறேன். மனைவியின் அதிகாரங்களை ஏற்றுக் கொள்ள மட்டுமே பழகிவிட்ட உங்களுக்கு உண்மை வாழ்வின் தத்துவம் புரிந்திருக்க நியாயம் இல்லை. நீங்கள் படித்தவர், உங்களிடம் இதைப் பற்றிச் சொன்னால் என்னைப் புரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையினால்தான் இத்தனை நேரம் பேசிக் கொண்டிருக்கிறேன். அம்மாவிடம் இந்த விஷயங்களைத் தர்க்கிக்க முடியாது. அவளால் அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது; தாங்கிக் கொள்ளவும் முடியாது. அவள் மனம் நோவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது. ஆதலால்....''

''கடிதம் எழுதிவிட்டு வீட்டைவிட்டு ஓடப் போகிறாயா?'' — நான் குறுக்கிட்டேன்.

''நிச்சயமாக இல்லை. என் சாதாரண ஆசைகள் பலி போவதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் என் வாழ்வு ஒரு போலியான அதிகாரத்தால், பாழாவதை நான் அனுமதிக்க முடியாது. பிரமை வாழ்வு வாழ்ந்து கொண்டு, தானும் வாழாமல் மற்றவர்களையும் வருத்திக் கொண்டு துன்பம் தந்து கொண்டிருக்கிற ஒரு தாயால் என் மண வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாது. அவள் தாய் என்பதை எப்படிப் போற்றுகிறேனோ, அதேமாதிரி பெண்மையையும் நான் போற்ற ஆசைப்படுகிறேன். அந்தப் பெண்மை ஒரு தாய்மையில் உருக்குலைந்து போக நான் சம்மதிக்க மாட்டேன். என் மனைவி முன் நான் கணவனாக வாழ ஆசைப்படுகிறேன். அவளால் நான் மதிக்கப்பட வேண்டும் என்பதை மன்தார விரும்புகிறேன். உங்களை மாதிரியல்ல! அன்பைத் தருகிற என்னால் அவளை அதிகாரமும் செய்ய முடியும். ஆனால் என் அதிகாரம் அவளின் உணர்வுகளைப் புண்படுத்தாத அதிகாரமாக இருக்கும்.... கணவனாக நான் வாழ நினைக்கிற நேரத்தில், அம்மா என்னை இன்னமும் நடை வண்டி பழகுவதாகக் கற்பனை செய்து கொண்டு செய்கிற அதிகாரம் என்னை அழிக்கவில்லை, என் ஆண்மையையே நசுக்குகிறது. மற்றவர்கள் கண் பார்வையில்

நான் குறைத்து மதிக்கப்படுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.... ஆனால் மனைவியின் கண் பார்வையில் நான் ஓர் ஆண்மையுள்ள கணவனாக மதிக்கப்படுவதைத்தான் விரும்புகிறேன். எனது இந்த ஆன்ம சுதந்திரத்துக்கு இந்த வீட்டின் சூழ்நிலை சரியில்லை. அதனால் நான் இப்போதே தனியாகப் போய் விட விரும்புகிறேன். முடிந்தால் அம்மாவுக்குச் சொல்லுங்கள்.... இல்லாவிட்டால் நானே ஒரு நாள் உணர்த்துவேன்....."

நான் திகைத்து நிற்கிறேன்....

பதி.... பதியா இத்தனை பேசினான்? இவனையா நான் ஒன்றுமே தெரியாதவன் என்று நினைத்திருந்தேன்? என்னவோ பிரமாதமான வாழ்வு என்று நான் நினைத்திருந்ததை ஒரு நொடிக்குள் 'கரையான் புற்று' என்று சொல்லிவிட்டானே? இவன் பார்வையின் தெளிவு எனக்கில்லையா? பாசம், பந்தம், அன்பு என்ற பயமுறுத்தல்களிலேயே நான் என் ஆன்மாவை நசுக்கிக் கொண்டே வாழ்ந்து பழகிவிட்டேனா? இவனும் அந்த உணர்வுகளை மதிக்கிறான்! ஆனால் அதே சமயத்தில் முக்கிய பிரச்னைகளுக்கு ஸ்திரமான ஒரு முடிவு எடுக்கிறான்! ஓ! பதி! நீ எவ்வளவு தீர்க்க ஆலோசகன்!

நான் அவனை நிமிர்ந்து பார்க்கிறேன்...

"நான் நாளைக் காலையில் கிளம்பப் போகிறேன். அதைச் சொல்லத்தான் வந்தேன்..."

அவன் குரல் தீர்மானமாக ஒலிக்கிறது.

வாசலில் விசாலியின் குரல் கேட்கிறது. கோவிலிலிருந்து திரும்பிவிட்டாளா?

"அவசியம் இல்லை.... நீ உன் அறைக்குப் போ.... நான் கூப்பிடும்போது வா.... போதும்." என் குரலின் கம்பீரத்தைக் கண்டு அவன் திகைத்திருக்க வேண்டும்......

இதோ விசாலி உள்ளே நுழைகிறாள்....

"இந்தாங்கோ கோயில் பிரசாதம் வாங்கிக்கோங்கோ!" — அவள் குரல் கணீரென்று ஒலிக்கிறது. இத்தனை நாட்கள் அவள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிக் கொண்டிருந்தவன் ஒரு புதிய இருப்பத்துடன், அவளை எதிர்க்கும் புதிய சக்தியுடன் அவள் வரவை எதிர்பார்த்து 'ஈஸிசேரில்' நிமிர்ந்து உட்காருகிறேன்!

கிண்டியில் உருவாகியுள்ள ராஜாஜி நினைவாலயத்தின் மேல் விதானம் ராமருடைய கிரீடம் போல் விளங்க வேண்டும் என்று நமது முதல்வர் கருத்துத் தெரிவிக்க, கட்டடக் கலை நிபுணர்களும் அந்தப்படிக்கே அதனை அமைத்துள்ளார்கள்.

இதையொட்டி டாக்டர் வே. ராகவன் நவீனமான ஓர் இந்தோநேஷிய நாடகக் கதையைக் கூறுகிறார்:

ஓர் அரசன் ராமருடைய கிரீடத்தை அடைந்துவிட்டால் அவனது ஆட்சி நீண்ட நாள் நிலைத்திருக்கும் என்பதாக ஒரு நம்பிக்கை. துரியோதனன், எப்படியாவது ராமரின் கிரீடத்தைத் தான் அடைந்துவிட்டால் பாண்டவர்களுடன் தனக்குள்ள பிணக்கு தீர்ந்து நிம்மதியாக ராஜ்யம் ஆளலாம் என்று எண்ணுகிறான். எனவே, அந்தக் கிரீடத்தைப் பெற்று வருமாறு கர்ணனை அனுப்புகிறான்.

கேசவசித்தி என்ற ரிஷியின் ஆசிரமத்தை அடையும் கர்ணன், அவர்தான் ராமரது கிரீடத்தை ஒளித்து வைத்திருப்பதாகக் கருதி அவருடன் போர் தொடுக்கிறான். அப்போது அனுமன் வந்து கர்ணனை வீழ்த்தி ரிஷியைக் காக்கிறான். கர்ணன் வெட்கம் அடைந்து தவமிருக்கச் செல்கிறான். ரிஷி கேசவசித்தி, அனுமனை அழைத்து இனிமேல் யுத்தங்களில் ஈடுபட வேண்டாம் என்றும் ராவணனுடைய ஆன்மா சிறைப்பட்டிருக்கும் மலைக் குகையை அடைந்து அது தப்பிப் போகாமல் காவல் இருக்க வேண்டும் என்றும் பணித்து அனுப்புகிறார். இல்லாத போனால் அந்த ஆன்மா புதிய பிறவிகள் எடுக்கும் என்ற கவலை ரிஷிக்கு.

இதற்கிடையில் யுதிஷ்டிரருக்கு ராமருடைய கிரீடத்தைப் பெற்றுத் தரலாம் என்ற ஆசையில் அர்ஜுனனும் புறப்பட்டு ரிஷி கேசவசித்தியின் ஆசிரமத்தை அடைகிறான். அவன் பணிவன்புடன் கேட்க ரிஷி ராமருடைய கிரீடம் என்பது ஸ்தூல வடிவமான ஒரு பொருள் அல்ல என்றும் அது ஆன்மீக அறிவையும் எல்லா அரசர்களுக்கும் இருக்க வேண்டிய எட்டு குண நலன்களையும் உணர்த்துவது என்றும் விளக்குகிறார்.

தவமிருந்து விட்டு அடக்கம் பெற்றுத் திரும்பும் கர்ணனுக்கும் அர்ஜுனன் இந்த விவரத்தைச் சொல்கிறான்.

ராஜாஜி நினைவாலயத்தின் விதானம் ராமருடைய கிரீடத்தின் வடிவில் அமைந்திருப்பதில் உள்ள பொருத்தத்தை நாம் முன்னிலும் நன்றாக இப்போது உணர முடிகிறதல்லவா?




"ஆம்! நரசுஸ் காபியேதான்!
ஒன்று என்ன இரண்டு கப்
சாப்பிடுங்களேன்!"
நரசுஸ்
காபி
எந்த இடத்திலும், எந் நேரத்திலும்
விரும்பிச் சாப்பிடத் தூண்டுவது
நரசுஸ் காபி!
"தெர்மலோ"
முறையில் தயாரிக்கப்படும்
ஒரே காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-636007
கிளைகள் : பாண்டிச்சேரி மற்றும் தமிழகமெங்கும்

EP-NC-4



ராஜாவின் தீர்ப்பு

-அருந்ததி-

கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவர் ''எல்லாம் மனித முயற்சிதான்'' என்று பிரசாரம் செய்து வந்தார்.

''எல்லாம் கடவுள் செயல்'' என்று ஆஸ்திகர் ஒருவர் பிரசாரம் செய்து வந்தார்.

இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. பொதுமக்கள் கட்சி கட்டினார்கள். யார் சொல்வது சரி?

ராஜாவைப் போய்ச் சந்தித்தார்கள். ராஜா தீர்ப்புச் சொல்லியாக வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர். ராஜா ஒரு யோசனை சொன்னார்.

''அர்த்தஜாம பூஜை நடந்த பிறகு, இருவரையும் காளி கோயிலுக்குள் அடைத்து விடுங்கள். யார் சொல்வது உண்மை என்று பார்க்கலாம்.''

மனித முயற்சியில் நம்பிக்கையுள்ள நபரும் தெய்வச் செயலில் நம்பிக்கையுள்ள நபரும் காளி கோயிலில் அடைக்கப்பட்டார்கள்.

கோவிலை விட்டு வெளியே வர முடியாது. பக்தர் பாடல் பாடலாகப் பாடிக்கொண்டிருந்தார். முயற்சியில் நம்பிக்கை உள்ளவர் உணவு கிடைக்குமா என்று கோவில் எங்கும் ஆராயத் தொடங்கினார். முயற்சியாளர் உணவை ஆராய்ந்தபோது பக்தர் பாடிக் கொண்டிருந்தார்.

பாடினால் பசி இருமா?

இராது. ஆனாலும் கடவுள் மீது பாடினார்.

முயற்சியாளர் பல இடங்களையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். அம்பாளின் அருகாகப் போனார். போனால்....!

அம்பாள் சிலைக்குப் பின் ஒரு வெள்ளிக் கும்பா. கும்பாவில் பால் பாயசம் இருந்தது. குங்குமப்பூ, முந்திரிப் பருப்பு போட்டு நேர்த்தியாகச் செய்யப்பட்ட வாசனைப் பாயஸம். வாசனை மூக்கைத் துளைத்தது.

மனித முயற்சிக்குக் கை மேல் பலன் கிடைத்தது.

''ஏ மடையா! பாட்டை நிறுத்து!'' என்று கத்தினார்.

பக்தரோ பாட்டினை நிறுத்தாமல் மேலும் மேலும் பாடினார்.

பாயஸம் கண்ட முயற்சியாளர், பாயஸத்தை எடுத்து உண்ணத் தொடங்கினார். கையால் கலக்கி உண்டார்.

கையில் அகப்பட்ட முந்திரி, திராட்சை இரண்டையும் நசுக்கிப் பார்த்து வாயில் போட்டுக் கொண்டார். மேலும் துழாவிய போது கூழாங்கல் ஒன்று கிடைத்தது.

கையில் எடுத்தார். ஓங்கி வீசினார். பாடிக் கொண்டிருந்தவர் நெற்றியில் பட்டது. பாடகர் மேலும் தெய்வத்தின் கருணையைப் பாடிக் கொண்டிருந்தார்.

''அட மடையா! பாயஸம் எனக்கு; அதன் கல் உனக்கு!'' என்றார்.

மீண்டும் ஒரு சிறு கல் அகப்பட்டது. அதையும் துழாவி எடுத்தார். பாடுகிறவர் மீது எறிந்தார். இவ்வாறு தமது கையில் கிடைக்கும் கற்களைப் பாடிக் கொண்டிருக்கும் பக்தர் மீது எறிந்தார்.

பாயசம் உண்டவருக்கு ஆயாஸம் வந்தது. படுத்துத் தூங்கி விட்டார்.

எல்லாம் ஆண்டவன் செயல் என்பவர் மேலும் மேலும் பாடிக் கொண்டிருந்தார். தெய்வத்தின் திருவருள் குறித்துப் பாடினார். அளவே இல்லாத அளவுக்குப் பாடல்களைப் பாடினார்.

பொழுது விடிந்தது! பொதுமக்கள் வந்தனர்.

ராஜா வந்து கதவைத் திறக்கச் சொன்னார். தெய்வச் செயல் என்பவர் பாடிக் கொண்டிருந்தார். மனித முயற்சி உள்ளவர் எழுந்து உட்கார்ந்தார்.

''அரசே! என் முயற்சியால் உணவு கிடைத்தது. மனித முயற்சி பலன் தந்தது. உண்டேன், உறங்கினேன். தெய்வச் செயலுக்கு என்ன கிடைத்தது? பட்டினியும் பாட்டும் கிடைத்தன!''

பக்தர் தம் பாடல்களை நிறுத்திவிட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தார். தம் உடம்பில் சில காயங்களைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

''தேவி! எல்லாம் உன் திருவிளையாடலா?'' என்று மனமுருகக் கேட்டார்.

''நான் எறிந்த கற்கள் அவை. பாயசம் எனக்கு; அதில் கிடந்த கற்கள் உமக்கு!''

பக்தர் தம் மீது வீசப்பட்ட கற்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்தார். இருட்டிலிருந்து வெளியே வந்தார்.

என்ன ஆச்சரியம்! அத்தனையும் வைரம், வைடூரியம், கோமேதகம், பச்சை, நீலம் நவமணிகள் அவர் கை நிறையக் கிடைத்தன.

''இவை யெல்லாம் தெய்வச் செயல்!'' என்று ராஜாவின் காலடியில் வைத்தார் பரம பக்தர்.

பொதுமக்கள் ராஜாவைப் பார்த்தார்கள். ராஜா சொன்னார்:

''மனித முயற்சி சிறந்ததுதான். அது பலன் தரும் என்பதும் உண்மை. ஆயினும் சிறிதளவு பலனே கிடைக்கும். மனித முயற்சியால் பாயசம் கிடைத்தது. ஆனால் தெய்வம் அருள் தரும்போது அளத்தற்கரிய செல்வம் கிடைக்கும். வைரம், வைடூரியம் போன்ற பெருஞ் செல்வம் பக்தனுக்குக் கிடைத்தன. பால் பாயசம் மனித முயற்சியுள்ளவனுக்குக் கிடைத்தது. இதிலிருந்து எது அதிக பலன் தரும் என்று நீங்களே தீர்ப்புச் சொல்லுங்கள்.''


கூட்டத்தோர் ''போற்றி! போற்றி! இறைவா போற்றி!'' என்று கோஷமிட்டார்கள்.

மனித முயற்சியில் நம்பிக்கை உள்ளவரும் அந்தக் கோஷத்தில் ஐக்கியமானார்.

மனித முயற்சிக்கு அப்பால் தெய்வத்தின் கடாட்சம் வேண்டும்.


இந்தியாவிலும். அயல்நாடுகளிலும் இப்பொழுது அதிகமான அளவில் தேவைப்படுகிறது இந்த தேங்காய் நார்





Ennor

இயந்திரங்கள்—
தேங்காய் நார்
தயாரிக்க.



Crusher

குறைந்த முதலீட்டில் சிறந்த முறையில் தேங்காய் நார் தயாரிக்க இயந்திரங்கள் இதோ!


தேங்காய் நார் தயாரிக்க இந்தியாவில் இதுவரை சரியான இயந்திரங்கள் இல்லாமல் இருந்தது. அதிக அளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தது.

இப்பொழுது இதற்குத் தேவையான எல்லா இயந்திரங்களையும் நாங்கள் தயாரித்துள்ளோம். இதன் மூலம் நீங்கள் குறுகிய காலத்தில் அதிக அளவு தேங்காய் நார் உற்பத்தி செய்யலாம். அதிக அளவு ஏற்றுமதியின் மூலம் அதிக வருவாய் தேடிக் கொள்ளலாம்... உங்களுக்கும் உங்கள் தேசத்திற்கும்!


இதுவரை தென் இந்தியாவில் 12 இடங்களில் எங்கள் என்னுர் இயந்திரங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன

மற்ற விபரங்களுக்கும் சரியான ஆலோசனைக்கும் எங்களை அணுகுக:


Manufacturers:
BHARAT MOTORS
5, Greames Road, Madras-600006
Phone: 86204 Cable: FIBRO-FLEX




Turbo Cleaner



Defibering Machine



Revolving Screen



Fibre Baling Press





— 'அவரல்ல நான்!'

மேஜர் சி. எல். தத்தா என்பவர் நமது முதல் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கும் அடுத்த ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் மெய் காப்பாளராக இருந்திருக்கிறார். இப்பொழுது இவர் ராஷ்டிரபதி பவனில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'இரண்டு ஜனாதிபதிகளோடு' (*With two Presidents*) என்று ஒரு புத்தகம் (*Vikas Publications Delhi*) எழுதியிருக்கிறார். அதிலிருந்து சில :

□ ராஜன் பாபு காலத்தில் ராஷ்டிபதி பவனத்தில் நிறையச் சாமியார்கள் வருவார்கள். பஜனைகள் நடக்கும். பல நாட்களில் அவர் உண்ணாவிரதம் இருப்பார். வருடந்தோறும் பத்ரிநாத் யாத்திரை போவார். நிறைய தான தருமங்கள் செய்வார்.

அவருக்கு வயதாகியும் ஞாபக சக்தி அதிகம். ஒரு புத்தகத்தை ஒரு தடவை படித்தால் போதும். அவருக்கு மனப்பாடம் ஆகிவிடும்.

□ அவரிடம் வரும் கருணை மனுக்களுக்கு அவர் மொட்டைக் கையெழுத்துப் போடுவது கிடையாது. அவரே திறமையான அட்வகேட் ஆனதால் கேஸ்களை நன்றாகப் படித்துப் பார்த்த பிறகுதான் உத்தரவுகள் போடுவார்.

ஜனாதிபதி ஜோக்குகள்...

□ ஒரு சமயம் ராஜன் பாபு ராஷ்டிரபதி பவனத்தில் ஒரு மரத்தடியில் ஓய்வாக உட்கார்ந்திருந்தார். பார்லிமெண்டிலிருந்து சில ரகசியக் கடிதங்களைக் கொண்டு வந்த ஒரு பியூன் உள்ளே வந்தான். அவனைக் கூப்பிட்டு 'அந்தக் கடிதங்களைக் கொடு' என்று ராஜன் பாபு கேட்டார். அவரை யார் என்று அடையாளம் கண்டு கொள்ளாத அந்தப் பியூன் 'நான் இவற்றை ஜனாதிபதியிடம்தான் கொடுக்க வேண்டும்' என்று சொல்லி அவரிடம் கொடுக்க மறுத்துவிட்டு உள்ளே போய் விட்டான்!



□ ராஜன்பாபு தமது ஊழியர்கள் உடல் நலனில் நல்ல அக்கறை காட்டுவார். ஒரு சமயம் அவர் ஜப்பானுக்குப் போயிருந்தபோது அவரது காரியதரிசிக்கு உடல் நலம் சரியாக இல்லாததால் ஜப்பானிய மன்னர் அளித்த விருந்தில் கலந்து கொள்வதை ரத்து செய்து விடும்படி கூறினார். பிறகு அதிகாரிகள் அது சரியல்ல என்று பல தடவை கூறியபிறகு அரை மனத்தோடு போனார்.



"நாங்கள் டெலிவிஷன் அருகிலேயே இருந்தோம்!"

□ அவர் தினமும் ராஷ்டிரபவனத்தில் நூல் நூற்பார். சம்பளத்தில் பெரும் பகுதியைப் பிரதமர் நிவாரண நிதியில் செலுத்திவிடுவார். ஏழைகள் யாராவது குறைகள் சொன்னால், உடனே கையிலிருந்து காசு எடுத்துக் கொடுத்து விடுவார்.

இவர் ரிடையர் ஆனதும் தம் சொந்த உபயோகத்துக்கு ஒரு புது ஆஸ்டின் கார் கேட்டார். ஆனால் நிதி இலாகா மறுத்து விட்டது.

□ பிரிட்டிஷ் அரசியிடம் ராஜன்பாபு சுயசரிதை எழுதிக் கொண்டிருந்ததாகச் சொன்னார்கள். 'அப்படியா? முடிந்துவிட்டதா?' என்று கேட்டார் ராணி ராஜன் பாபுவிடம். 'இல்லை. 1200 பக்கங்கள் முடித்து விட்டேன்' என்று கேட்டார். 'உங்களுக்கு எப்படி நேரம் கிடைத்தது?' என்றார் ராணி. உடனே ராஜன்பாபு கொஞ்சமும் யோசிக்காமல், 'நான் உங்கள் தந்தை ஆட்சிக் காலத்தில் பதினாறு ஆண்டுகள் சிறையில் இருந்தேன். அப்போது எழுதினேன்' என்றார்.

□ பிரிட்டிஷ் அரசி எலிசபெத் ராஷ்டிரபதி பவனில் சந்தித்த ஒரு ஜெனரலிடம் 'நீங்கள் ஐரோப்பா போயிருந்தபோது மோனலிஸாவைப் பார்த்தீர்களா?' என்று கேட்டார்.





"எழுத எப்படி நேரம் கிடைத்தது?"

அந்த ஜெனரலுக்கு 'மோனலிஸா' என்றால் என்ன என்றே தெரியாது. ஒன்றும் புரியாமல் அருகில் இருந்தவர்களைப் பரிதாபமாகப் பார்த்தார். ஒருவர் 'லேடி' என்று சொல்லிக் கொடுத்தார். உடனே அந்த ஜெனரல் ராணியிடம் 'அவர் ஒரு நல்ல லேடி. லண்டனில் அவருடைய கலை நிகழ்ச்சியைப் பார்த்தேன். பிரமாதமாக இருந்தது' என்று ஒரு போடு போட்டார்.

□ 1961ல் அமெரிக்க உதவி ஜனாதிபதி ஜான்ஸனும் அவரது மனைவியும் இந்தியா வந்தார்கள். அதற்குச் சில நாட்கள் முன்பு அமெரிக்க விண்வெளி வீரர் ஷெப்பர்ட் விண்வெளியில் பறந்து இறங்கி இருந்தார். அந்த முயற்சியை 'லூப்' (Space loop) என்று சொல்வார்கள். அதைப் பற்றிக் கேட்க நினைத்த மெய்காப்பாளர் மிஸஸ் ஜான்ஸனிடம் 'ஷெப்பர்ட் லூப் அடித்த போது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்குமே?' என்றார். 'ஆமாம். நாங்கள் டெலிவிஷன் அருகிலேயே இருந்தோம்' என்றார் திருமதி ஜான்ஸன்.

'லூப்' என்ற வார்த்தையைக் கேட்ட அருகிலிருந்த ஒரு ஜெனரல் அதைக் 'கருத்தடை 'லூப்' என்று நினைத்துக் கொண்டு தாமும் ஏதாவது கேட்கலாமே என்று நினைத்து, 'அமெரிக்கப் பெண்களுக்கு 'லூப்' ரொம்ப உதவியாக இருக்கிறதா?' என்று கேட்டு வைத்தார்.

□ ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்லின் கென்னடி இந்தியாவுக்கு வந்தார். அவரோடு கென்னடியின் சகோதரியும் வந்திருந்தார். அவர்கள் இருவரும் ஜனாதிபதியைச் சந்தித்தபோது ஜனாதிபதி கென்னடியின் சகோதரியை ஜாக்லின் கென்னடி என்று நினைத்துப் பேசிக் கொண்டேயிருந்தார். அருகிலிருந்தவர்கள் சைகை செய்தும் ஜனாதிபதி தவற்றைத் திருத்திக் கொள்ளவில்லை.

□ ராஜன்பாபு ஜனாதிபதியாக இருந்தபோது நடந்த இன்னொரு நிகழ்ச்சி: அப்பொழுது அவர் வயிற்றில் நடந்த ஆபரேஷனுக்குப் பிறகு குணமடைந்து கொண்டிருந்த சமயம். அவருக்கு மன மகிழ்ச்சியாக மாலை நேரங்

களில் இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுவது உண்டு.

ஒரு நாள் காரியதரிசி மெய்காப்பாளரைக் கூப்பிட்டு 'இன்று மாலை 4—30 மணிக்கு பிஸ்மில்லாகான் ஜனாதிபதிக்காக ஷெனாய் வாசிக்கப் போகிறார். ஏற்பாடு செய்யுங்கள்' என்றார். உடனே அவர் இதை ஜனாதிபதியிடம் தெரிவிக்க, ஜனாதிபதியும் மகிழ்ச்சியோடு சம்மதித்தார். ஜனாதிபதி வசதியாக உட்கார்ந்து கேட்கவும் எதிரில் வாசிப்பவர்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. 4—15 மணி ஆயிற்று. பிஸ்மில்லாகான் வருவதாகக் காணோம். ஆனால் கொஞ்ச நேரத்தில் ஒரு நாதஸ்வர பார்ட்டி வந்து சேர்ந்தது. ஆனால் பிஸ்மில்லாகான் வரவில்லை. விசாரித்தபோது வந்திருந்த கோஷ்டிதான் நாதஸ்வரம் வாசிக்கப்போவதாகவும் அந்த வித்வானுக்குத்தான் 'தென்னாட்டு பிஸ்மில்லாகான்' என்ற பட்டம் என்றும் தெரிந்தது!

☐ ஜனாதிபதியின் மாதச் சம்பளம் 10 ஆயிரம் ரூபாய். ஆனால் ராஜன் பாபு மாதம் 2500 ரூபாயும், ராதாகிருஷ்ணன் மாதம் 3000 ரூபாயும்தான் வாங்கிக் கொண்டார்கள். —**பாலி**

வட்ட மேஜை

இந்தியாவில் 14.7 சதம் வருமான வரியை, அடித்து வாங்குகிறார்கள் என்று வருமான வரிக்குப் போய்விட்டீர்கள் ஒரு துணுக்கில். நமது தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களில் லெவி என்ற முறையில் வீடு வீடாக நுழைந்து விவசாயிகள் வைத்துள்ள நெல்லை அவர்களே எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். வருமான வரி அதைவிட மோசம் அல்ல. தனிமனிதனின் ஜீவாதார உரிமைகள் எங்கே?

திருமலைப்பேட்டை

28—1—75 டி. எல். வெங்கடேசன்

இதுவரை ''கல்கி'' படைத்துத் தந்த காவியங்களுக்கு இணையாக எதுவும் இல்லை என்ற அளவு உயர்ந்த கல்கி இந்த 2—2—75 இதழில் ''தலைவர் தரிசனம்'' தலைப்புத் தந்து தமிழக முதல்வர் படத்தையும் அழகுறப் பிரசுரித்து, மீண்டும் தன் புகழை நிலைநாட்டிக் கொண்டது பற்றி மகிழ்ச்சி யடைகிறேன்.

திருவைகுந்தம்

30—1—75 ஆ.ச. தென்பாண்டியன்

'தலைவர் தரிசனம்' முதல் மூன்று இதழ்களுக்கு கடைப்பிடித்த நிலை நான்காவது இதழுக்கு வேறுபடக் காரணம் என்ன? முதல் மூன்று தலைவர்களும் உமக்குத் தலைவராகத் தெரியவில்லையா? கருணாநிதிக்கு மட்டில் தனிச் சலுகை என்ன? கல்கியில் அட்டைப் படமாக அலங்கரிக்க அப்படிப்பட்ட அருகதை முதல்வர் என்பதைத் தவிர வேறு என்ன உள்ளது?

பெங்களூர், 1—2—75 இ. பார்த்தசாரதி

பாளையங்கோட்டையில் உள்ள செயின்ட் ஜான் கல்லூரியின் ஹாஸ்டலில் அண்மையில் நடந்த 'ஸ்டூவர்ட்' (Steward) தேர்தல் போட்டியில் மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டு ஒரு மாணவர் உயிர் துறந்தார். மற்றும் சில மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் உள்ளனர். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

இதற்கெல்லாம் காரணம் நம் அரசியல் தலைவர்களே. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களிடையே அரசியல் கட்சிப் பாட்டை ஏற்படுத்தி அவர்கள் படிப்பையே நாசப்படுத்துகிறார்கள். படிப்பு வீணாவதுடன் மாணவர்கள் வாழ்க்கையும் பாழாகின்றது.

டால்மியாபுரம்

4—2—75 ரெ. ஆர். திருவேங்கடத்தான்

''செந்நீரில் மலர்ந்தது கண்ணீரைச் சொரிகிறது'' என்னும் தலையங்கத்தில் மூன்று இடங்களில் பங்களா தேசத்து ஜனாதிபதி அவர்களின் பெயரை, ''முஜிபுர்'' என்று குறித்திருக்கிறீர்கள். பங்களா ஜனாதிபதியின் பெயர் முஜிபுர் ரஹ்மான். இது: முஜிப் — உர் — ரஹ்மான் என்று பிரிபடும். ஆக அன்னாருடைய பெயரைச் சுருக்கி எழுதுங்கால் ''முஜிப்'' என்று எழுதுவதுதான் சரி.

சென்னை—5

6—2—75 எல். ஆர். மதுசூதன்

மாதர் சிறப்பிதழ் சிறப்பாக இருந்தது. குறிப்பாக, ''கடமையை உணர்த்தட்டும் கலை'', ''ஏட்டுக் கல்வியுடன் நாட்டுக் கல்வி'' ''தேவைக்கு ஏற்ற சேவை'' ஆகிய பகுதிகள் சிறப்பிதழை மேலும் சிறப்பாக்கின.

உளுந்தூர்பேட்டை

7—2—75 அ. நியமத்துல்லா

'நாகபுரி நகர்வல'த்தில் தொடாது 'விட்டகுறை' சிலவற்றைத் 'தொட்டகுறை' யாக்குகிறேன். பாரதத்தின் மையத்தில் இருக்கும் நாகபுரியில், பாரதத்துக்குப் பெருமை சேர்க்கக்கூடிய பல பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. நீத்தனை பயிற்சிப் பள்ளிகள் இந்தியாவில் வேறு எந்த நகரத்திலும் இல்லை என்ற பெருமை படைத்தது இந்த நகரம். ஒரே கூரைக்குள் இயங்கும் 'பூலே மார்க்கெட்' இந்தியாவிலேயே பெரிய தொன்று. மூன்று முறை கட்டி விழுந்த 'ஸ்டேடியம்' இன்னொரு வகையில் பெருமை சேர்ப்பதாகக் கொள்ளலாமே!

நவராத்திரியும், ராமநவமியும், ஐயப்ப வழிபாடும், முருக வழிபாடும் இந்த நகரத்தில் உள்ள பலமொழி பேசுபவர்களையும் சேர்த்து இணைத்து அரும் பணி புரிகின்றன. மோதிபாக் ஸ்கந்த சமாஜம், கந்த சஷ்டி கொண்டாடுவதோடு குன்றுதோறும் குமரக் கடவுளுக்கு — தமிழ்க் கடவுளுக்குச் சிறந்த முறையில் கோயில் எடுக்கும் பணியையும் மேற்கொண்டிருக்கிறது. விட்டுப் போன இந்தச் செய்தியை வெளியிட்டு நாகபுரி வாழ் தமிழ் மக்களின் நல்லார்வத்தைத் தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு எடுத்துக்கூறினால் எங்கள் பணி சிறக்க உதவியாயிருக்கும்.

நாகபுரி

9—2—75 க. வே. காசி



தலைவருடன் தொண்டரும் அவரது குடும்பமும்

எம். பக்தவத்சலம்.

சொல்பவர் கருப்பையா

ஒரு விழாவுக்குத் திரு ஏ. வி. அழகேசனை அழைக்கச் சென்றபோது அவர் என்னைத் திரு. பக்தவத்சலத்துக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த வேளையில் நான் பக்தவத்சலம் அவர்களை, எளிமை ததும்பும் தெய்வ பக்தி நிறைந்த கனவானைச் சந்தித்தேன்.

அதன்பிறகு அவர் வாழ்வில் பல மாறுதல்கள். முதல் அமைச்சராய் விளங்கினார். தேர்தல்கள் அளித்த தீர்ப்பினால் பதவியை விட்டும் ஒதுங்கினார். ஆனால் முதன் முதலில் அவரிடம் கண்ட, கனிந்த முதிர்ந்த மனிதாபிமான உணர்ச்சியில் இதுவரையில் எந்த வித மாறுதலையும் நான் காணவில்லை. சாதாரணமாக இவருக்குக் கோபம் வந்துகூட நான் கண்டதில்லை. கோபம், மகிழ்ச்சி, வருத்தம் முதலிய உணர்ச்சிகளை வெளியே காண்பிக்கப் பழகியவரல்ல.

இவருக்கு அதிகாரம் செய்து பழக்கமில்லை. சில சமயங்களில் இவர் கூடப் பிரயாணம் செய்பவர்கள் கொஞ்சம் ஆர்ப்பாட்டம் செய்வதுண்டு. அவர்களுக்காக இவர் 'பொறுங்க! பொறுங்க' என்று இரு பக்கத்தையும் சமாதானம் செய்வார்.

1937-ல் ராஜாஜி அவர்கள் மந்திரிசபை அமைத்தபோது அதில் நிச்சயமாகப் பக்தவத்சலம் அவர்களைச் சேர்த்துக் கொள்வார் என்று எல்லோரும் நம்பினார்கள்; எதிர்பார்த்தார்கள். ஆனால் பக்தவத்சலத்தை விட வயதிலும் அனுபவத்திலும் குறைந்த கோபால ரெட்டியை அமைச்சராக்கினார் ராஜாஜி. அந்தக் கோபாலரெட்டிக்குப் பார்லிமெண்டரி செக்ரடரியாக பக்தவத்சலம் நியமிக்கப்பட்டார். இந்த எதிர்பாராத ஏற்பாடு பலரை ஏமாற்றத்துக்குள்ளாக்கியது. பக்தவத்சலத்தின் நண்பர்கள் சிலரை ஆத்திரமடையவும் செய்தது. ஆனால் பக்தவத்சலம் அவர்களோ அவருக்கே உரித்தான நிதானத்துடனும் அமைதியுடனும், 'என் கடமை எனக்குக் கொடுத்த வேலையைச் செய்வதே' என்று சொல்லி விட்டார்.

அதைத் தொடர்ந்து கோபால ரெட்டி பல சந்தர்ப்பங்களில் தம் பார்லிமெண்டரி செக்ரடரியின் அனுபவமிக்க யோசனையின் மீதே செயல்பட நேர்ந்தது. இதைக் கோபாலரெட்டி அவர்களே பெருந்தன்மையுடன் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

பக்தவத்சலம் அவர்கள் தெய்வ பக்தி நிறைந்தவர். ஆண்டுதோறும் எப்படியும் ஒரு தடவை திருப்பதிக்குச் சென்று வருவார். அவர் அற நிலையத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் சிதிலமடைந்த பல கோவில்களை மீண்டும் நல்ல பராமரிப்புக்குள் கொண்டு வந்திருக்கிறார்.

மீஞ்சூருக்கு அருகே, இவருடைய முன்னோர்களால் நிறுவப்பட்ட ஆலயம் ஒன்று இருக்கிறது. பரம்பரை தர்மகர்த்தா முறை. இவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு சற்று யோசித்துப் பார்த்தார். சுதந்திர இயக்கத்திலும் காந்திய வழிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் அந்தக் கோவிலில் ஹரிஜனங்கள் உள்ளே நுழையச் சாத்தியமில்லாத சூழ்நிலை. 'அத்தகைய கோவிலுக்குத் தாம் தர்மகர்த்தாவாக இருந்து பயனில்லை. அந்தப் பொறுப்பை விட்டுக் கொடுக்கத் தயார்' என்று அரசாங்கத்துக்கு எழுதி விட்டார். அப்படிச் செய்ய முடியாது என்றும் அவர் விரும்பினால் வேறு ஒருவரை அவரே தேர்ந்தெடுத்து நியமிக்கலாம் என்றும் பதில் வந்தபோது பக்தவத்சலம் அவர்கள் அந்தப் பொறுப்பைத் திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயரிடம் ஒப்படைத்துத் தாம் விலகிக் கொண்டார்கள்.

அரசியல் வாழ்க்கையில் தரத்தையும் கண்ணியத்தையும் பிணைத்துப் பழகியவர். 1967-ம் ஆண்டு தேர்தலின்போது எதிர்க்கட்சிகளின் கூட்டணி பற்றி இவர் சார்ந்திருந்த கட்சி நிர்வாகம் கேலியாக ஒரு கலரொட்டியைத் தயாரித்திருந்தது. ''தயவுசெய்து அந்தக் கலரொட்டிகளை என் தொகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டாம்'' என்று பக்தவத்சலம் அவர்கள் கேட்டுக் கொண்டது எனக்கு நன்கு

நினைவிருக்கிறது. அப்போது அவர் தமிழக முதல் அமைச்சர்.

போலீஸ் அதிகாரி ஒருவரை உடனடியாக ஓர் இடத்தை விட்டு வேறு ஓர் இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று இவர் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ஒருவர் ஓர் அமைச்ச ரிடம் வற்புறுத்தினார். இந்தச் செய்தி இவரை எட்டியது. உடனே, போலீஸ் நிர்வாகத்துக்கு ஒரு தாக்கீது விட்டார். 'பொது ஜனங்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந் திருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் வேண்டுவதை யெல்லாம் சரியான கோரிக்கைகள்தானா என்று சீர்தூக்கிப் பார்த்தே செயல்பட வேண் டும்' என்று குறிப்பிட்டார். சக மந்திரி களுக்கு, 'இந்த மாதிரிப் புகார்களையும் வேண்டுகோள்களையும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பவிட வேண்டும். முடிவு செய்ய வேண்டியவர் அவர்தான்' என்றும் அறிவுரை வழங்கினார்.

தம் வேலையைக் குறித்த நேரத்தில் முடித்து விடுவது என்பது அன்றி ருந்து இன்றுவரை, இன்றைய வயோதிக நிலையிலும் இவருக்குக் கைவந்த கலை. அமைச்சர் பதவி வகித்த நாட்களில் இருநூறு ஃபைல்களானா லும் ஒரே மூச்சில் உட்கார்ந்து பார்த்துப் பைசல் பண்ணி விடுவார்.

தமக்கு என்று எந்தவித பிரத்தியேக சௌகர்யங்களையும் இவர் எதிர்பார்ப்பது இல்லை. சாப்பாடு விஷயத்திலும் வெகு எளிமை. ஒருபிடி சாதம் அதிகமாகப் போனா லும், அதை சரிகட்ட ஒரு கப் மோரை மாத்திரம் வாங்கிக் குடித்து விட்டு மோர் சாதத்தைத் தவிர்த்துவிடுவார்.

இந்த வயதிலும் இவருடைய மனத்தில் ஓர் ஆசை உண்டு. தரமான ஆங்கிலத் தின சரிக்கு ஆசிரியராக இருந்து நடத்த வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஒப்புக் கொண்டு விட்டால் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்துவிடுவார். உடல் நலம் பாதிப்படைந்திருப்பதைக்கூட மறந்து விடுவார். சமீபத்தில் நடந்த சம்பவம் ஒன்று எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒரு பொ ரிகக் கடிதம் கேட்டவரை மறுநாள் சுதேச மித்திரன் காரியாலயத்தில் தம்மை வந்து சந்திக்கும்படி சொல்லியிருந்தார். எதிர் பாராத வகையில் மறுநாள் இவர் உடல் நலம் சரியாக இல்லை. ஆனாலும், கடிதம் கேட்டு வந்தவர் காத்திருப்பாரே என்ற அனுதாபத்தினால் அவர் சுதேசமித்திரன் காரியாலயத்துக்கு வந்துதான் போனார்.

தம் பொறுப்புக்களைத் திறமையுடன் நிர்வகிக்க இவர் என்றுமே தயங்கியதில்லை. பொறுப்புக்கள் இல்லை என்றால், பதவியே அவசியமில்லை என்று கருதும் சுபாவமுமுண்டு. பிரகாசம்காரு மந்திரி சபையில், பொதுப் பணித்துறை, பெருநீர்ப் பாசனம், பெரு வழித்துறை ஆகிய இலாக்காக்கள் பக்தவத் சலத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் திடீரென்று பிரகாசம்காரு பெருநீர்ப் பாசனத் துறையை இவரிடமிருந்து எடுத்து கரந்த் அவர்கள் பொறுப்பில் ஒப்படைப்ப தாக இவருக்குக் குறிப்பு அனுப்பி விட்டார்.

உடனே 'நீர்ப்பாசனத் துறை இல்லை என் றால், என் இலாக்காவுக்கு அதிக வேலை இல்லை. ஆகவே நான் அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுவதில் பயன் இல்லை. எப்படியாவது மந்திரியாக இருந்தால் போதும் என்று நினைப்பவன் நான் இல்லை. ஆகவே இதையே என் ராஜிநாமாவாக ஏற்றுக் கொள்ளலாம்' என்று கைப்பட எழுதிக் கவரில் போட்டுச் சீல் செய்து முதல்வ ருக்கு அனுப்பத் தயாராகி விட்டார். ஆனால் நல்ல வேளையாக மறுநாள் பிரகாசம்காரு பழைய உத்தரவை ரத்து செய்து விட்டார். "I always found Sri Bhakthavatsalam correct in his conduct of Public Affairs" என்று ராஜாஜி அவர்களாலே பாராட்டப் பெற்றவர்.

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்று அழைக்கப்படுவதற்குச் சமமல்லவா!

கேட்டு எழுதியவர் — **கோமதி சுவாமிநாதன்**



SISTA'S-DIL-349 TAM



ஃபாச்-இண்டர்ஃப்ரான் லிட்.,
தபால் பெட்டி எண் 6582,
பம்பாய் 400 018

அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

செல்லி கான்வெண்டிற்குப் போகிறாள்!

'விஸ்வப்பிரியா'

மழலை மாறாத இனிய குரலில் உல்லாசமாகப் பாடிக்கொண்டு வகுப்பறையை விட்டுச் சிறுமிகள் மரத்தடியை நோக்கி ஓடி வந்தனர். அவர்களுக்கு வீட்டிலிருந்து மதிய உணவு கொண்டு வரும் கிழவி கண்ணம்மாள், வெகு நேரமாக அந்தக் 'கான்வெண்ட்' பள்ளியின் வாசலில் காத்திருந்து விட்டு, மணி அடித்தவுடன், சாப்பாட்டுக் கூடையைத் தலையில் சுமந்தபடி உள்ளே நுழைந்தாள்.

''ஆயா — எங்கம்மா எனக்கு இன்னிக்குக் கட்லட் அனுப்பி இருக்காங்க இல்லே?'' என்று ஆவலாகக் கேட்டாள் சவிதா.

''எனக்கு இன்னிக்கு ஹாப்பி பர்த்டே... எங்கம்மா கூட எனக்கு முந்திரிப் பருப்பு கேக் பண்ணி அனுப்பறேன்னு சொன்னாளே'' பட்டுப் பாவாடையும் தங்க நகையுமாய்குலுங்கிய அபர்ணாவின் குரலில் பெருமிதம் தவழ்ந்தது.

''எங்கம்மா நேத்திக்கு ஊருக்குப் போய் விட்டா — எங்க பாட்டிக்குத் தயிர் சாதம் தான் பண்ணத் தெரியும். வெறும் 'போர்' '' என்று சலித்துக் கொண்டாள் வசந்தா.

குழந்தைகள் பேசியபடியே உணவுப் பாத்திரத்தைப் பிரித்து உண்ணத் தொடங்கினர். கவலைகள் எதுவுமற்ற பிஞ்சு மனங்களின் மகிழ்ச்சியைச் சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் கிழவி கண்ணம்மாள்.

பச்சையும் இளம் சிவப்பும் கலந்த அழகான சீருடை, தலையில் பட்டுப் பூச்சியாய்ப் பறக்கும் வெள்ளை ரிப்பன், வெள்ளைக் காலுறை— இவை அழகு கூட்ட, ஒரு கையால் புத்தகப் பையைப் பிடித்தபடி, ''ஆயா! ஸ்கூலுக்கு நேரமாச்சு, போயிட்டு வரேன்'' என்று தன் அருமைப் பேத்தி செல்லி ஒயிலாகக் கையசைத்துக் கூறிவிட்டு 'டக்டக்' என நடந்து செல்லும் காட்சி அந்தக் கிழவியின் மனக் கண்ணில் நிழலாடியது. சூடான பெருமூச்சுக் கிளம்பியது. ''ம்! அந்தக் குட்டியைக் கார்ப்பரேசன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவே எனக்கு வசதி பத்தலே ; இந்த இங்கிலீசு இஸ்கூலுக்கு அனுப்ப முடியுமா? எனக்கு ஆசை என்னவோ இருக்குது ... ஆதன் தலையில நல்ல எளுத்து எளுதலையே கடவுள்? அப்பனே முளுங்கிடுச்சு. பெத்தவ பேயா மாறிட்டா!'' அவள் கண்கள் கலங்கின.

கண்ணம்மாவின் கணவன் இறந்தபோது பெரிய மகன் மருதமுத்துவுக்குப் பதினைந்து வயது இருக்கும். சின்னவன் வேலுச்சாமி பத்து வயதுச் சிறுவன். தீராத துக்கத்தையும் தன் பிள்ளைகளுக்காகத் தாங்கிக் கொண்டு தன் உடலை வருத்திக் கூலி வேலை செய்து பிள்ளைகளுக்கு வயிறு வாடாமல் சோறு போட்டு வளர்த்தாள்.

பெரிய மகன் மருதமுத்து டிரைவிங் லைசென்ஸ் பெற்று ஒரு தனியார் கம்பெனியில் டாக்சி ஓட்டத் தொடங்கினான். இளையவனோ படிக்காமல் வேலையும் செய்யாமல் ஊர் சுற்றி அலைந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். ஒருநாள் கண்ணம்மா அவன் போக்குக்கு அவனைக் கண்டிக்கவே ரோசம் தாளாமல் ஊரை விட்டே சென்றும் விட்டான்.

மருதமுத்துவும் அவன் மனைவியும் கண்ணம்மாவை நன்றாகத்தான் கவனித்துக் கொண்டனர். ஆனால் பிள்ளைக்குப் பாரமாய்த் தான் உழைக்காமல் உட்கார்ந்து தின்னக் கூடாது என்ற வீம்பில் கடந்த பத்து வருடங்களாகப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு மதிய உணவு எடுத்துச் செல்கிறாள். அதில் வரும் வருமானம் அவள் ஒருத்திக்குத் தாராளம். அவ்வப்பொழுது பேத்தி செல்லிக்கும் மருமகள் காந்திமதிக்கும் ஒரு முழம் துணிகூட எடுத்துக் கொடுக்க முடிந்தது கண்ணம்மாவால்!

ஆனால் நாலு நாள் விஷக் காய்ச்சலில் மகன் மருதமுத்து கண் மூடிய பொழுது இடி விழுந்த பசுமரமாய்க் கருகியது கண்ணம்மாவின் குடும்பம். மகனிடம் உயிரையே வைத்திருந்த கண்ணம்மா புலம்பித் தவித்தாள். மருமகள் காந்திமதியோ தன் கணவன் இறந்த சில நாட்களுக்குள்ளேயே பெற்ற மகளைக் கூடக் கவனியாது கிழவியிடம் விட்டுவிட்டு, சிங்கப்பூரிலிருந்து வந்த அவள் மாமன் மகனுடன் மறுவாழ்வு பெறச் சென்று விட்டாள்.

மகனை இழந்த துக்கத்துக்கு அழுவதா — மருமகளின் செயலுக்கு வருந்துவதா — தள்ளாத வயதில் சிறுபெண்ணைக்காப்பாற்றி ஆக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டு விட்ட தன்நிலையைஎண்ணி நோவதா — கிழவி தவித்து உருகிக் கொண்டிருந்தாள்.



தனது வாழ்வில்அவள் சந்தித்து விட்டிருந்த துயரச் சம்பவங்கள் அனைத்தையும் பேத்தி செல்வியின் முகத்தில் மறக்க ஆரம்பித்தாள் கண்ணம்மாள். காலையில் செல்வியைக் குளிப்பாட்டிச் சோறு போட்டுப் பக்கத்துக் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டுத் தன் வேலைக்குப் புறப்படுவாள். நாலு வீட்டில் உணவுப் பாத்திரங்களைச் சேகரித்துக் கொண்டு கான்வெண்டுக்கு வரும் பொழுது மணி பதினொன்று ஆகிவிடும். மறுபடியும் குழந்தைகள் சாப்பிட்டபிறகு பாத்திரங்களை அவரவர் வீட்டில் சேர்த்து விட்டுக் குடிசைக்கு வந்து இருப்பதை வைத்து அருமைப் பேத்திக்கு உணவு தயாரித்து விடுவாள்.

கான்வெண்டுக்குத் தினமும் போவதாலோ என்னவோ, தன் வாழ்வு முடிவதற்குள் ஒரு நாள் தன் பேத்தி செல்வியை இங்கிலீஷ் இஸ்கூலுக்குப் படிக்க அனுப்பவேண்டும்என்று ஒரு வெறியே அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அந்தப் படிப்புக்கு ஆகும் செலவைப்பற்றிச் சில 'அம்மாமார்களிடம்' கேட்டதும் தலை சுற்றியது கண்ணம்மாவுக்கு. ''அடேயப்பா! அம்மாம் பணத்துக்கு நான் எங்க போவேன்'' என மலைத்து விட்டாள்.

தன் நிலைக்கு அப்பாற்பட்டது என தெரிந்த பின்னர் கூட ஒவ்வொரு நாளும் கான்வெண்டில் குழந்தைகளின் பாட்டையும் பேச்சையும் கேட்கும் பொழுதெல்லாம் 'செல்விக் குட்டியை இப்பிடியாப்பட்ட இஸ்கூலுலே சேக்காட்டி நான் உசிரோடு இருந்து என்ன புண்ணியம்' என அவள் மனம் பொருமத் தொடங்கும்.

''ஆயா! என்ன எங்கேயோ பார்த்துகிட்டு இருக்கே? நாங்க சாப்பிட்டாச்சு! பாத்திரங்களை எடுத்துக்கோ'' என்று கீச்சுக் குரலில் கத்திவிட்டு ஓடினர் சிறுமியர்.

தனது நினைவை எங்கோ படரவிட்டுப் பகல் கனவில் லயித்து நின்ற கண்ணம்மாள் சட்டென்று சுய உணர்வு பெற்றாள். குனிந்து பாத்திரங்களைப் பொறுக்கி எடுத்துக் கூடையில் வைத்தாள். காலடியில் ஏதோ நெருடவே காலை நகர்த்தி உற்றுப் பார்த்தாள். பளபளக்கும் தங்கச் சங்கிலி! பிறந்த நாள் கொண்டாடிய அபர்ணா அணிந்திருந்த நகை அது!

தன் காலடியில் ஒளிவிட்ட தங்க நகையைக் கண்டதும் கண்ணம்மாளின் மனத்தில் ஆசை துளிர் விட்டது. ''டாக்டரம்மா வீட்டுப் பொண்ணு போட்டிருந்த சங்கிலியாச்சே! நாம எடுத்ததை யாரும் பாக்கலியே! மூச்சுக் காட்டாமெ எடுத்துக்கிட்டுப் போனு



ஆயிரம் ரூபாயாவது தேறும்... செல்லிக் குட்டியை இஸ்கூலுக்குச் சேக்கற செலவுக்கு ஆகுமே!'' மெதுவாக அக்கம்பக்கம் பார்த்து விட்டுச் சங்கிலியைத் தன் புடவைத் தலைப்பில் பத்திரப்படுத்தினாள்.

பள்ளிக்கூடத்தின் வெளிவாசலைக் கடந்து வீதியில் நடந்தாள் கண்ணம்மாள். தார் வீதியில் காலை வைத்ததும் சுள்ளென்று நீயாய்ச் சுட்டது. தெரிந்தே அவள் செய்து விட்ட தவறு நெஞ்சை உறுத்தியது. ''டாக்டரம்மா எவ்வளவு நல்லவங்க? போன வருசம் செல்லிக்குட்டி சீக்கா இருந்தப்ப ஆஸ்பத்திரிலே சேத்து ராப்பகலா சொந்தக் கொளந்தையைப்போலக் கவனிக்கப் பார்த்தாங்களே! எங்கிட்ட கால் காசுகூட வாங்கலியே! அந்த அம்மாவோட சொத்தை நான் அவங்களுக்குத் தெரியாம மடியிலே வைச்சிருக்கேனே! அது பெரிய பாவம் இல்லியா?'' அவள் உள் மனம் உறுத்த மடியில் இருந்த சிறு பொன் மாலை கல்லாய்க் கனத்தது.

நேராக டாக்டர் அம்மாவின் வீட்டுக்குச் சென்று தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்ததை விவரமாகக் கூறிக் கொடுத்தாள் கண்ணம்மாள். அவளது நேர்மைக்குப் பரிசாக அந்த அம்மாள் கொடுத்த பத்து ரூபாய் நோட்டுடனும் தெளிந்த மனத்துடனும் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

''என்ன அத்தை, கவனிக்காம போறே'' குரல் கேட்டுத் திரும்பினாள் கண்ணம்மாள். ''அடேடே கன்னியப்பனா! நீ போன மாசம் லாரிலே அடிபட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கிறதா உன் பொஞ்சாதி சொல்லிச்சே! நல்லா ஆயிட்டயா தம்பி?'' பரிவுடன் விசாரித்தாள்.

''கால் எலும்பு முறிஞ்சு போச்சு அத்தை! ஆனா எனக்கு அதிலே லாபம்தான்! நஷ்டஈடு மாத்திரம் இருபதாயிரம் குடுத்தாங்க, என் கால் முடமானதுக்கு. ஆயுசு முழுதும் நான் சம்பாதிச்சாலும் இந்தப் பணம் பார்த்திருக்க முடியாது.''

''லாரில அடிபட்டா எல்லாருக்கும் நஷ்டஈடு கொடுப்பாங்களா தம்பி?''

''குடுப்பாங்க அத்தை. அடியைப் பொறுத்துக் கூடக் கொறச்சுக் கொடுப்பாங்க. உயிரே போயிட்டா இன்னும் நிறையக் கூடக் குடுப்பாங்க! சரி அத்தை, நான் வரேன்'' மெள்ள, நொண்டி நடந்து கொண்டே சென்றான் கன்னியப்பன்.

''அடேயப்பா! இருபதாயிரம் ரூபாய் லாரிலே அடிபட்டா எனக்குக் கிடைக்குமாமே! அப்படி எனக்கு மட்டும் பணம் கெடச்சா செல்லிப் பொண்ணை இங்கிலீசு ஸ்கூல்ல சேர்த்துடுவேனே! லாரில அடிபடக் கூடக் குடுத்து வைக்கணும்...'' மனத்தில் அங்கலாய்த்தபடி வீடு வந்து சேர்ந்தாள்.

''ஆயா, ஆயா! நம்ம வீட்டுக்கு யாரோ வந்திருக்காங்க; வந்து பாரேன்.'' வழக்கத்துக்கு மாறாகத் தனக்கு முன்னதாகவே பள்ளியிலிருந்து வீடு திரும்பி இருந்த செல்லியின் உற்சாகமாக வரவேற்பு கிழவிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

''யாரு வந்திருக்காங்கன்னு இப்படி கத்தறே?'' செல்லமாகக் கடிந்து கொண்டே உள்ளே வந்தாள். இளைத்து நூலாய் வற்றிய உடலும் எண்ணெய் காணாது பரந்து கிடந்த தலையுமாக வறுமையின் மறு உருவமாகத் தன் எதிரே நிற்கும் தன் இளையமகன் வேலுச்சாமியைக் கண்டதும் திடுக்கிட்டாள்.

''நான்தாம்மா. உங்களையெல்லாம் பாக்கணும்போல இருந்திச்சு; ஓடி வந்தேன். வந்த பிறகுதான் அண்ணன் இறந்துட்டாருன்னு தெரிஞ்சுது. இனிமே ஒளுங்கா உன் கூடவே இருந்து உன்னையும் செல்லியையும் காப்பாத்தற பொறுப்பு எனக்குத் தாம்மா.'' கண்ணீர் சொரியக் கூறிய மகனைத் தாயின் அளவிலாத பாசம் மன்னித்து ஏற்றுக் கொண்டது. கிழவியின் வருமானத்தில் மற்றுமொரு வயிறு பங்கு கொண்டது!

''கண்ணம்மா! நாளையிலேருந்து இரண்டு மாசம் பள்ளிக்கூடம் விடுமுறை. இன்னிக்குச் சாயந்திரம் உன் கணக்கைப் பார்த்துப் பணம் தரேன் — இரண்டு மாசம் கழிச்சு மறுபடியும் பள்ளிக்கூடம் திறந்ததும் வந்து விடு'' என்று அதிகாரி வீட்டு அம்மாள் கூறியதும் அயர்ந்து போய் விட்டாள் கிழவி. கோடை விடுமுறை எதிர்பார்த்தது என்றாலும் இரண்டு மாதங்கள் வருமானம் இல்லாமல் இருக்க வேண்டிய நிலை அவளை அச்சுறுத்தியது.

வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருக்கும் மகன் வேலுவுக்கும் பேத்தி செல்லிக்கும் அரை வயிற்றுக்காவும் சோறு போட முடிந்தது அவளது வருமானத்தால். அவள் மனம் கலங்கியது. தள்ளாத வயதில் புதிதாக எந்த வேலையைத் தேட முடியும்? சாலையில் தலையில் கூடையுடன் நடந்து கொண்டிருந்த கண்ணம்மாவுக்குக் கவலையினால் கண்கள் இருண்டன. தள்ளாடினாள். ''பாம்—பாம்—'' பின்னாலிருந்து வந்த காரின் ஒலி காதைச் செவிடாக்கியது. சாலையை விட்டு ஓரமாகச் செல்ல எண்ணினாள். மறுகணம் 'காரிலே அடிபட்ட நஷ்டஈடு கிடைக்குமே!' என பளிச்சிட்ட எண்ணம் அவளைச் சாலையைக் குறுக்கே கடக்கத் தூண்டியது. வேண்டுமென்றே கார் வரும் திசையில் குறுக்கே ஓடினாள்.

''க்ரீச்!'' பயங்கர ஓசையுடன் கார் நின்றது. காரின் முன் சக்கரத்திற்கு இடையில் டிபன் பாத்திரங்கள் உருண்டு கிடந்தன. நசுங்கிக் கிடந்த கூடையின் அருகில் தண்ணீர் வைத்திருந்த கண்ணாடிப் பாட்டில்கள் நொறுங்கிக் கிடந்தன. குப்புறக் கிடந்த கண்ணம்மாவின் கண்களில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மயங்கிய நிலையில் கிடந்த அவளைச் சுற்றிக் கூட்டம் கூடியது.

''காரில் அடிபட இருந்தா கிளவி! நல்ல காலம் மரைவர் ப்ரேக் போட்டுக் காரை நிறுத்திட்டாரு. இல்லாட்டி இந்நேரம் சட்டினியாகி இருப்பா.''

''கிளவிக்கு ஆயுசு கெட்டி. கண்ணாடி குத்திக் கண்ணு இரண்டிலேயும் ரத்தம் வருது. ஆனா உசிருக்கு ஆபத்து இல்லேன்னு தோணுது. சீக்கிரமா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுகிட்டுப் போங்க.''

விபத்துக்குக் கிழவியின் அஜாக்கிரதை தான் காரணம் எனக் கணக்கிட்ட கூட்டம் அவளது பணத் தேவையும் அதை அடையும் ஆசையும்தான் காரணம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் கழித்தாள் கண்ணம்மாள். கண்களில் பட்ட காயம் ஆறி விட்டது. ஆனால் கண் பார்வை பறி போய் விட்டது.

''உன்னை எப்படி எப்படியோ படிக்க வைக்கணும்னு கனுக் கண்டுக்கிட்டு இருந்தேனே. உன் மொகத்தைப் பாக்கற சொகம் கூடப் பறி போயிடுச்சே!'' செல்வியிடம் பரிதாபமாக முணுமுணுத்தாள் கண்ணம்மா.

''அத்தை, நீங்க ரெண்டு லாட்டரிச் சீட்டு வாங்கி வைச்சிருந்தீங்களே. இன்னிக்கு பேப்பர்லே நம்பர் போட்டிருக்குது. உங்களுக்குப் பரிசு விளுந்திருக்கா பார்ப்போம். சீட்டைத் தாங்களேன்'' என்று பக்கத்து வீட்டுத் தங்கம்மா கையில் தினசரிப் பத்திரிகையுடன் வந்தாள்.

''ஆமாடியம்மா. எனக்கு இருக்கிற அதிர்ஷ்டத்துக்கு லாட்டரிச் சீட்டுதான் விளப் போகுது! பூமியிலே பொறந்தேனே, அன்னி மொதலே என்னைச் சைத்தான் தான் பிடிச்சு ஆட்டுது'' என்று அலுத்துக் கொண்டாள் கண்ணம்மாள்.

''உங்க சீட்டைத்தான் தாங்களேன்; சும்மாவாவது பார்ப்போம்.''

''செல்வி! அந்த மாடத்திலே பெருங்காய டப்பியிலே வைச்சிருந்தேன். இருக்கா பாரு'' என்றாள் கிழவி.

செல்வி எங்கும் தேடிக் கடைசியில் கண்டெடுத்த கிழவியின் பரிசுச் சீட்டைத் தங்கம்மாவிடம் கொடுத்தாள்.

''அடி ஆத்தி! உங்க அதிஷ்டம் என்னங்றேன். உங்க நம்பர் இதோ போட்டிருக்கே... உங்களுக்குப் பரிசு விளுந்திருக்கு அத்தை. பத்தாயிரம் ரூபாய்!'' வியப்பினால் உரத்த குரலில் அலறினாள் தங்கம்.

''என்னது? எனக்கு லாட்டரி விளுந்திருக்கா. ஏண்டி இப்படி குருடிகிட்டே வெளையாட்டு பண்ணுறீங்க? போங்கடி அப்பாலெ.''

''இல்லெ, அத்தை. நெசமாத்தான். உங்களுக்குப் பத்தாயிரம் ரூபா பரிசு விளுந்திருக்கு.''

எந்தப் பணத்தைத் தேடியலைந்து, உயிர் கொடுத்தும் பெறத் துடித்து, கண்களை இழந்தாளோ, அந்தப் பணம் இன்று அவள் வீடு தேடி வந்து நிற்கிறது.

கண்களை இழந்த கண்ணம்மாவுக்குத் தன் காதுகளையும் நம்ப முடியவில்லை.

அன்று மாலைப் பொழுதுக்குள் கிழவிக்குப் பரிசு கிடைத்த செய்தி தெருவெங்கும் பரவி விட்டது. அவளுக்குத் தெரிந்தவர்கள் அலை வரும் அதிர்ஷ்டத்தை மெச்சி அவளைப் பாராட்டிச் சென்றனர்.

கட்டுக் கட்டாக ரூபாய் நோட்டுக்களைக் கைகளால் தடவி, மகிழ்ந்த கண்ணம்மாள் தன் வாழ்வின் அந்திம நேரத்தில் உதயமாகி விட்டிருக்கும் நல்ல காலத்தை எண்ணிப் பூரித்துப் போனாள்.

''ஏலே வேலு! நாளைக் காலே மொத வேலையா ஒரு இரும்புப் பெட்டி வாங்கிடுடா. இம்மாம் பணத்தைச் சாக்கரதையா வைக்க வேண்டாமா?'' என்றாள் மகனிடம்.

''இன்னிக்கு ஒரு நாள் மட்டும் வீட்டுல வெச்சிப்போம். நாளைக்குப் பாங்கியிலே உன் பேருலே கட்டுவோம். கையிலே ரொக்கம் இருந்தா தகராறு'' என்று பதிலளித்தான் மைந்தன்.

''இந்தாப்பா. சாக்கரதையா வாங்கி வெச்சிடு. நான் ஒரு குருட்டு முண்டம்! எங்கனச்சும் தொலைச்சுடுவேன்!'' பணக் கற்றைகளை மகனிடம் கொடுத்தாள்.

பொழுது விடிந்தது. ''செல்வி! சின்னையாவைக் கூட்டிக்கிட்டுப் போய் ஆபீஸர் வீட்டு அம்மாகிட்ட விவரத்தைச் சொல்லுடி. இஸ்கூலு திறக்க ரொம்ப நாள் இல்லே. தையக்காரங்கிட்ட யூனிபாரம் சட்டைக்கு அளவு குடுத்துடு. கடைக்குப் போயி துணி, பூட்ஸு, ரிப்பன் எல்லாம் வாங்கியாந்துடு. வேலுவைக் கூப்பிடுடி.'' அடுக்கடுக்காகக் கட்டளைகள் பிறப்பித்தாள் கண்ணம்மாள்.

''ராவுக்கே சின்னையா இங்க படுக்க வரல்லியே பாட்டி?'' பேத்தி கத்தினாள்.

''எங்காச்சும் சினிமா பாத்துட்டு பீச்சுலே படுத்திருந்துட்டு வருவான். வந்ததும் அவனைக் கூட்டிட்டுப் போ'' என்றாள்.

காலை மாலையாகி இரவும் வந்தது. வேலுச்சாமி வீடு திரும்பவில்லை. மகன் வருவான் என எதிர்பார்த்துச் சில நாட்கள் காத்திருந்த கண்ணம்மாவுக்கு, தன்னை ஏய்த்து விட்டுத் தனது பெரும் பணத்துடன் தன் மகன் ஓடி விட்டான் என்பது புரிந்தது. ஏமாற்றத்தின் எல்லையில் பிரமித்து அழவும் திறனற்று மரத்து விட்டது அவள் மனம்.

''பாட்டி! இஸ்கூலுக்கு நேரமாச்சு. போயிட்டு வரேன்'' என்று உரக்கக் கூவினாள் செல்வி. காலங் காலமாகக் கண்ணம்மாள் கேட்கத் துடித்துக் கொண்டிருந்த இந்த வார்த்தைகள் அவள் காதில் விழுந்த போது அவள் மனம் துடித்தது.

பச்சையும் இளஞ்சிவப்பும் கலந்த சீருடை, தலையில் பட்டுப்பூச்சியாய்ப் பறக்கும் வெள்ளை ரிப்பன், பளிச்சிடும் வெள்ளைக் காலணியும் காலுறைகளும்—இவை அழகுகூட்டப் புத்தகப் பையைக் கையில் பிடித்தபடி ஒயிலாகச் செல்வி நடப்பது மனக் கண்ணில் நிழலாடியது.

ஏக்கப் பெருமூச்சு கிளம்பியது. ஒளி மங்கிய விழிகளில் நிறைந்த கண்ணீர்த்துளிகள் வற்றிச் சுருங்கிய அக் கிழவியின் கன்னங்களில் வழிந்து பளபளத்தன.

பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கான சாப்பாட்டுக் கூடையைத் தலையில் சுமந்தவண்ணம் சாயம் வெளுத்த சீட்டிப் பாவாடை சட்டையுடன், வீதியில் வெறுங்காலுடன் சென்று கொண்டிருந்தாள் செல்வி!



மூன்றாம் நெப்போலியன் காலத்தில் பாரிஸ் மாநகரச் சீமாட்டிகள் சின்னஞ் சிறு பொன் மீன்கள் நீந்தும் கண்ணாடிக் குவளைகளைக் காதணிகளாக அணிந்தனர்.

ஆதாரம்: 'தி கோல்ட் ஃபிஷ்' என்ற நூல்.

- கன்னிகா

30. மதுவிலக்கு

பொன்னியின் புதல்வர்



சுந்தா

நல்லதைச் சொல்லிடில் நல்லதே
விளையும் – விளையாவிடினும்
நல்லதைச் சொல்வதே நல்லோர் கடமை.

"விமோசனம்" பத்திரிகை அச்சாகி வெளியான விதம், அதன் உள்ளுறை, அதில் கல்கி செய்த பணி முதலிய விவரங்கள் அடுத்த அத்தியாயத்தில் வருகின்றன. அந்த "விமோசனம்" நாட்களில், திருச்செங்கோட்டின் சுற்றுப் புறக் கிராமங்களில், கல்கியும் மற்றத் தொண்டர்களும் செய்த மதுவிலக்குப் பிரசாரத்தையும், அதன் உடனடியான விளைவுகளையும், பிற்காலப் பலன்களையும், இந்த அத்தியாயத்தில் கவனிப்போம்:

கல்கியே சொல்கிறார்:

விமோசனம் பத்திரிகை நடந்து கொண்டிருந்த காலத்தில் சென்னையில் இரட்டை ஆட்சி நடந்து கொண்டிருந்தது. இரட்டையாட்சி சர்க்கார் மாகாணத்தில் மதுஅரக்கனுடைய தீமையைப் பிரசாரம் செய்வதற்காக, ஒவ்வொரு ஜில்லாவிலும் கமிட்டிகளையும் பிரசாரகர்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். "டெம்பரன்ஸ் கமிட்டி" என்று பெயர் கொண்டிருந்த இந்தக் கமிட்டிகளைச் சிலர் "மிதக் குடிப் பிரசாரக் கமிட்டி" என்று பரிகாசம் செய்தார்கள். ஆயினும் மேற்படி கமிட்டிகள் சில ஜில்லாக்களில் சிறந்த வேலை செய்து வந்தன. அந்தக் கமிட்டிகளின் வேலைக்கு 'விமோசனம்' மிக்க உதவியாக இருந்தது. சில ஜில்லாக் கமிட்டிகள் பத்துப் பிரதிகள், பதினைந்து பிரதிகள் தருவித்து மதுவிலக்குப் பிரசாரகர்களுக்குக் கொடுத்தன.

பொதுவாக அச்சமயம் தமிழ் நாடெங்கும் மதுவிலக்குப் பிரசாரத்தில் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. காந்தி ஆசிரமத் தொண்டர்கள் தீவிரமான மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்கள். விமோசனத்தில் வெளியான படங்கள் பிரசாரத்துக்கு மிக்க உதவியாயிருந்தன. மேற்படி படங்களைப் பெரிதாக எழுதச் செய்து துணியில் ஒட்டி வைத்திருந்தோம். மொத்தம் சுமார் முப்பத்திரண்டு படங்கள் இருந்தன. இந்தப் படங்களையும் பெட்ரோமாக்ஸ் விளக்கையும் எடுத்துக் கொண்டு, ஆசிரமத்தின் பெரிய கட்டை வண்டியில் ஏறி, வாரத்துக்கு இரண்டு நாள், கிராமப் பிரசாரத்துக்குச் செல்லுவோம். ஆசிரமத்தில் ராஜாஜி இருந்தபோதெல்லாம் அவர்களும் வருவார்கள்.

ஒரு கிராமத்துக்குப் போனதும் முதலில் கிராமத்துச் சாவடிக்குச் சென்று பெட்ரோமாக்ஸ் விளக்கை ஏற்றிக் கொள்வோம். பிறகு மதுவிலக்குப் பாட்டுப் பாடிக்கொண்டு ஊரைச் சுற்றி வருவோம். அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றதுபோல் நாமக்கல் கவிஞர் மதுவிலக்குப் பாட்டு ஒன்று பாடிக் கொடுத்தார்.

குற்றமென்று யாருமே
கூறுமிந்தக் கள்ளினை
விற்க விட்டுத் தீமையை
விதைப்பதென்ன விந்தையே!

பாடுபட்ட கூலியைப்
பறிக்கும் இந்தக் கள்ளினை
வீடு விட்டு நாடு விட்டு
வெளியிலே துரத்துவோம்!

என்பது போன்ற பாட்டின் அடிகள் கிராமவாசிகளுக்கு எளிதில் புரியக் கூடியதாயும் அவர்கள் மனத்தில் பதியக் கூடியதாயும் இருந்தன....

(கல்கியும் ஒரு பிரசாரப் பாட்டுக் கட்டியிருந்தார். அதன் முதல் வரி: "நீரும் மோரும் சோறும் உண்டு வாழ்வோம் இந்த நாட்டிலே.")


புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் ஏற்பட்ட பிறகு, நூற்றல் கூலி, நெசவுக் கூலி மூலமாய்ப் பக்கத்துக் கிராமங்களுக்கு லட்சக் கணக்கான ரூபாய் பட்டுவாடா ஆகி வந்தது. ஆயினும் கிராமவாசிகளின் நிலைமை மொத்தத்தில் அபிவிருத்தி அடையவில்லை. தரித்திர நாராயணர்களின் வாசஸ்தலங்களாகவே கிராமங்கள் இருந்து வந்தன. இதற்குக் காரணம் கள்ளு, சாராயக் கடைகளே என்பதை ராஜாஜி கண்டார். மதுபானத்தில் ஏழை எளிய

★ விமோசனத்தில் வெளியான 'கல்கி'யின் மதுவிலக்குப் பிரசாரச் சிறுகதைகள், 'பாங்கர் விநாயகராவ்' என்ற பெயரில் நூல் வடிவம் கொண்டன. அதில் இடம் பெற்ற ஒரு சிறுகதைக்கான நிழல் படங்கள்.









GOVERNMENT HOUSE
Calcutta,
21st September, 1947.

★ கல்கி - மதுவிலக்கு இதழ் மேலட்டை.

★ மதுவிலக்கு இதழுக்கு மேற்கு வங்க கவர்னர் அனுப்பிய செய்தி.

★ "நிறுத்து அந்த வார்த்தை மறியல்" என்று கூவிக் கொண்டு துள்ளி எழுந்தான் அந்த மனிதன். அவன் கையிலிருந்த கத்தி பயங்கரமாகப் பிரகாசித்தது!



மக்களின் வீடுகள் நரகக் குழிகளாகி விடுப்பதையும், அவர்கள் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருவதையும் ராஜாஜி பார்த்தார். கள்ளுக் கடைகளை மூடினால் ஒழியக் கிராமவாசிகளுக்கு விமோசனமே கிடையாது என்ற உறுதியான எண்ணம் அவர் மனத்தில் நிலைபெற்றது. தேசத்தில் எந்தத் திட்டமும் இதைப் போல் முக்கியமானதல்ல என்ற எண்ணமும் உண்டாயிற்று. அதனால்தான் மதுவிலக்குப் பிரசாரத்துக்காக ஆரம்பித்த பத்திரிகைக்கு 'விமோசனம்' என்று பெயரிட்டார்....

பெட்ரோமாக்ஸ் விளக்கைப் பொருத்தி வைத்துவிட்டு மதுவிலக்குப் பாட்டைப் பாடிக் கொண்டு ஊரைச் சுற்றி வருவோம். எங்களைத் தொடர்ந்து கிராமவாசிகள் சிலரும் வருவார்கள். வரவரக் கூட்டம் அதிகமாகும். கடைசியில் வசதியான இடம் ஒன்றில் ஊர்வலம் முடிந்து பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். மதுவிலக்குப் பிரசாரப் படங்களை ஒவ்வொன்றாக விரித்து விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் காட்ட, இன்னொருவர் அதைச் சுட்டிக் காட்டி விளக்கிப் பேசியது கிராமவாசிகளின் மனத்தில் மிகவும் நன்றாகப் பதிந்தது. விமோசனத்தில் வெளியான படத் தொகுதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் கிராமவாசிகள், முக்கியமாகப் பெண்கள் மிகவும் ரசித்துச் சிரிப்பார்கள்.

அந்தப் படத் தொகுப்பில் சட்டை தொப்பி போட்ட மனிதன் ஒருவன் ஒரு சாராயப் புட்டியை முதலில் ஒரு மாட்டினிடம் கொண்டு நீட்டுகிறான். மாடு குடிக்கமாட்டேன் என்கிறது. பிறகு குதிரையிடம் போகிறான். குதிரையும் வேண்டாம் என்கிறது. பிறகு நாய் குடிக்க மறுக்கிறது. பன்றிகூட வேண்டாம் என்று மறுதளிக்கிறது. கடைசியில் அந்தச் சட்டைக்காரன் ஒரு கிராமத்துக் குடியானவனிடம் கொண்டு போய்ப் புட்டியை நீட்டுகிறான். அந்தக் குடியானவன் அதை வாங்கிக் குடிக்கிறான். "நாயும் பன்றியும் கூட விஷம் என்று குடிக்க மறுக்கும் மதுவை மனிதன் குடிக்கிறான் பார்த்தீர்களா?" என்று படத்தைச் சுட்டிக் காட்டிப் பிரசங்கி சொன்னதும் கூட்டத்தில் உள்ள ஸ்திரீகள் எல்லோரும் சிரிப்பார்கள். ஆண்களில் சிலர் சிரிப்பார்கள். இன்னும் சிலர், "ஆமாம், அது வாஸ்தவம்தானே!" என்பார்கள்....

படங்களைச் சுட்டிக்காட்டி நாங்கள் ஒவ்வொருவரும் பிரசங்கம் செய்வதுண்டு. படங்களின் உதவி இல்லாமல் பேசுவதும் உண்டு. ஆயினும் ராஜாஜி பேசும்போது கிராமத்து ஜனங்களின் மனத்திலே பதிவது போல் எங்களுடைய பேச்சுப் பதிவதில்லை. ஏனெனில் ராஜாஜியைப் போலக் கிராமத்து ஜனங்களின் கஷ்டங்களை நாங்கள் உணரவில்லை. எங்களுடைய பேச்செல்லாம் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிப்பது போலிருக்கும். ராஜாஜியின் பேச்சோ குழந்தையிடம் உயிரை வைத்திருக்கும் தாயார் அன்புடன் புத்தி சொல்வது போலிருக்கும்.

("பாங்கர் விநாயக ராவ்" முன்னுரை) :

'நண்பனைக் கொலை செய்தவனைத் தூக்கில் போடுவதை விட அதற்குக் காரணமான மதுவைத் தூக்கிலிடுவது அல்லவா அவசியம்!' என்ற கருத்தை உணர்த்துகின்றன.



இவ்விதப் பிரசாரக் கூட்டங்கள் பொதுவாக அமைதியாகவே இருக்கும். சில கூட்டங்களில் மட்டும் கலவரமும் பயங்கர அனுபவங்களும் ஏற்படுவது உண்டு.

ஓர் உதாரணம் தருகிறார் கல்கி:

ஒரு மாரியம்மன் கோயில் வாசலில் கிராம ஜனங்கள் கூடியிருந்தார்கள். நாங்கள்—காந்தி ஆசிரமத் தொண்டர்கள் — நாலைந்து பேர் பிரசங்கத்துக்காகச் சென்றிருந்தோம். பிரசங்கமும் தேசிய கீதமும் மாறி மாறி நடந்து வந்தன. ஆனால் என்னுடைய கவனம் பிரசங்கத்திலும் இல்லை; கீதத்திலும் இல்லை. கூட்டத்திலிருந்த ஒரு மனுஷன் மேலேயே இருந்தது. அவன் கையில் கூரிய கத்தி ஒன்று பளபளவென்று மின்னிற்று. அதை அடிக்கடி அவன் உள்ளங்கையில் தடவிக் கூர்பார்த்துக் கொண்டிருந்தான். நடு வில் நடுவில் தனது முறுக்கு மீசையைத் திருகி விட்டுக் கொண்டும், 'ஹூம், ஹூம்' என்று உறுமிக் கொண்டும் இருந்தான்.

தொண்டர் ஒருவர், ''பாரத சமுதாயம் வாழ்கவே!'' என்று பாட ஆரம்பித்தார். மீசைக்காரன் கத்தியைத் தீட்டுவதைக்கூட நிறுத்தி விட்டுப் பாட்டைக் கூர்ந்து கவனித்தான். எனக்கு உடம்பை என்னவோ செய்யத் தொடங்கியது.

பாட்டின் முதல் மூன்று அடிகளைத் தொண்டர் பாடி, கடைசியாக, ''எல்லோரும் ஓர் குலம்'' என்று ஆரம்பித்தாரோ இல்லையோ, ''நிறுத்து அந்த வார்த்தை மரியல்'' என்று கூவிக்கொண்டு துள்ளி எழுந்தான் அந்த மனிதன். அவன் கையிலிருந்த கத்தி முன்னை விடப் பயங்கரமாகப் பிரகாசித்தது.

''எல்லோரும் ஓர் குலம் என்பது என்ன நியாயம் ஐயா! பார்ப்பாரும் ஒண்ணு, கவுண்டரும் ஒண்ணு, சக்கிலியனும் ஒண்ணாய்ப் போய்விடுவாங்களா? அந்தப் பேச்சு மட்டும் இங்கே வேணாம். வேறே காங்கிரசு, காந்தி சமாசாரம் ஏதாவது இருந்தாச் சொல்லுங்க. இல்லாட்டாக் கடையைக் கட்டுங்க'' என்றான்.

கடை என்றதும் அவனுக்கு என்ன ஞாபகம் வந்ததோ என்னமோ தெரியவில்லை. ''பூப் போட்ட கிளாஸிலே போடய்யா ஒன்னரை!'' என்று பாடிக் கொண்டே போய் விட்டான்.

(ஆ. வி. 5-5-'40)

காந்தி ஆசிரமத் தொண்டர்களுடைய பிரசாரத்தின் பயனாய், திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம் தாலுகாக்களில் இருந்த இருபத்தேழு கள்ளு, சாராயக் கடைகளை, 1930 ஏப்ரல் முதல் தேதியன்று, கலால் கமிஷனர் உத்தரவிட்டு மூடிவிட்டார். அது மிகச் சிறிதளவான மதுவிலக்கேயாயினும், அதை ஒரு விமோசனத் திருநாளாகவே ஆசிரமத் தொண்டர்களும் மக்களும் கொண்டாடினார்கள். தாம் அங்கே இருந்தபோது நிகழ்ந்த அந்தத் திருநாளை உற்சாகத்துடன் கல்கி ''விமோசனம்'' இதழொன்றில் வர்ணித்தார்:

காந்தி ஆசிரமத்தைச் சுற்றியுள்ள பெரிய கிராமங்கள் எல்லாவற்றிலும் கடைகள் மூடப்பெற்ற தினத்தை, கள்ளரக்கனை ஒழித்த விமோசனத் திருநாளாக ஜனங்கள் கொண்டாடினார்கள். கிராமக் கோயில்களில் விசேஷ ஆராதனையும், பஜனை, ஊர்வலம், பொதுக் கூட்டம் முதலியவைகளும் நடைபெற்றன. காந்தி ஆசிரமத் தொண்டர்கள் அன்று மூன்று தனித் தனிக் கூட்டமாகப் பிரிந்து முக்கியமான கிராமங்கள் எல்லாவற்றிலும் சென்று மேற்படி கொண்டாட்டத்தை நடத்த உதவி செய்தார்கள்....

மூடப்பெற்ற கடைகளுக்குள் மிகப் பெரியவை திருச்செங்கோட்டிலிருந்த இரண்டு கள்ளுக் கடைகளும் ஒரு சாராயக் கடையுமே யாகும்.

அன்று மாலை திருச்செங்கோட்டில் நமது ஆசிரியர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் தலைமையில் இரண்டு பெரிய பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

கடை மூடிய தினம் செவ்வாய்க்கிழமை யாதலால், அன்று திருச்செங்கோட்டில் வழக்கம்போல் பெரிய வாரச் சந்தை கூடிற்று. சுற்று வட்டத்தில் பல கிராமங்களிலிருந்து வந்து கூடும் ஜனங்களில் பலர், சந்தையிலிருந்து திரும்பும்போது, கள்ளுக் கடையில் நுழைந்து விட்டுப் போவது வழக்கம். அன்றைய தினம் கடை இல்லாமல் போகவே அவர்கள் எல்லோரும் கையில் காசுடன் வீடு திரும்பினார்கள். ''கடை மூடியாயிற்று'' ''கடை மூடியாயிற்று'' என்ற பேச்சே அன்று எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள். சுமார் பத்து வருஷ காலமாய்ப் பேச்சிலிருந்து வந்த விஷயம் இப்போது காரியத்தில் நடந்து விட்டது குறித்து மகிழ்ச்சி அடையாதவர்கள் இல்லை. முக்கியமாகப் பெண் மக்கள் இது குறித்துக் காட்டிய சந்தோஷத்தை அளவிட முடியாது...,.

(பிரமோதூத, சித்திரை, நன்றி - குமரி மலர்)

ஆனால் அந்தத் திருநாள் பின்னர் வெறு நாளாய்ப் போயிற்று. மீண்டும் அந்தப் பகுதிக்கும், சேலம் மாவட்டம் முழுதிலும், மதுவிலக்கு வருவதற்கு ஏழு ஆண்டுகள் ஆயின. அப்படி 1937 அக்டோபர் மாதத்தில் வந்தபோது, ''தமது'' ராஜாஜி பிரதம மந்திரியாகி அதைக் கொண்டு வந்தது பற்றியும், அதுவும் தாம் பிரசாரம் செய்த மாவட்டம் ஒன்றில் கொண்டு வந்தது பற்றியும் கல்கி ஆனந்தம் அடைந்தார். அந்த ஆனந்தத்தைத் தலையங்கம் ஒன்றில் பொங்க விட்டார்:

...பாரதத்திலே, பகாசுரன் கதையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தப்



புள்ளியிட்ட கோட்டினூடே வெட்டவும்.

பக்கத்திலுள்ள கூப்பனை வெட்டி எடுங்கள் அதில் உங்கள் பெயரையும், முகவரியையும் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து, கூப்பனில் உள்ள முகவரிக்கு போஸ்ட் செய்யுங்கள். (தபாலில் அனுப்புங்கள்) உங்களுக்கு ஒரு விசேஷ தள்ளுபடிச் சீட்டு அனுப்பப்படும். அந்தச் சீட்டை உங்கள் டீலரிடம் கொடுங்கள். அவர் பட்டியல் விலையைவிட ரூ. 1.50 குறைந்த விலையில் ஹேலோ வெய்ல் ஆ:ப் லவ் டால்க் எகானமி சைஸ் டப்பா ஒன்று கொடுப்பார். இந்த விசேஷ சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமே உண்டு. எனவே முந்துங்கள். இன்றே கூப்பனை தபாலில் சேருங்கள்.

COUPON K

To
Halo Veil of Love Talc D. O.
C/o Colgate-Palmolive (India) Pvt. Ltd.
12-A Ritchie Street, Madras 600 002.

Dear Sirs,
I would like to have my Halo Veil of Love Talc discount voucher sent to :

Name ______________________

Address ______________________

____

HT.G 7 TM


பகாசுரனைப்போல் ஆயிரம் மடங்கு கொடிய அசுரன் மதுவரக்கன். அவன் இந்தச் சென்னை மாகாணத்தில் மட்டும் தினந்தோறும் எண்பதுலட்சம் ஜனங்களின் ஒரு வேளை உணவைத் தானே முழுங்கிக் கொண்டு வருகிறான். அத்துடன் அவனுக்கு உணவு கொண்டு வரும் எத்தனையோ மனிதர்களையும் முழுங்கத்தான் முழுங்குகிறான்.

இப்படிப்பட்ட கொடிய அசுரனுடனே தான் முதன் முதலாகச் சேலம் ஜில்லாவிலே போர் தொடங்கியிருக்கிறார் நமது பிரதம மந்திரி....

இதோ ஒரு ஜில்லா முழுவதும் கள்ளுக் கடைகளை மூடி விட்டார்களே! கள்ளுப் பானைகளை உடைத்து விட்டார்களே! சாராயப் பீப்பாய்களைக் கவிழ்த்து விட்டார்களே!

''ஜய பேரிகை கொட்டடா-கொட்டடா!
ஜய பேரிகை கொட்டடா!''

(ஆ.வி. 3-9-'37)



எலுமிச்சம்பழம் ஏன் தரப்படுகிறது?

அமைச்சர்களையோ, அதிகாரிகளையோ அல்லது பிரமுகர்களையோ பார்க்கச் செல்லும்போது சிலர் எலுமிச்சம்பழத்தைத் தந்துவிட்டே வந்த விஷயத்தை எடுத்துச் சொல்வார்கள். ''இதன் தத்துவம் என்ன?'' என்று திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களிடம் கேட்டேன்.

கி. வா. ஜ. தந்த பதில்:

முக்கனி எனப்படும் மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகியவற்றை எடுத்துச் சென்று பிரமுகர்களிடம் கொடுக்கும்வரை நசுங்காமல் இருக்காது; கையில் ஒட்டும் தொல்லை. மேலும் இவை எப்போதும் கிடைக்காது. தூக்கிச் செல்வதில் சிரமம்.

எலுமிச்சம் பழத்துக்கு 'சதா பலம்' என்று பெயர். எப்போதும் கிடைக்கும் என்று பொருள். சௌகரியமாய் எடுத்துச் செல்லலாம். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களைக் காணும்போது எலுமிச்சம் பழத்தைத் தருவார்கள். அவர்களும் அன்புடன் ஏற்றுக் கொள்வார்கள். மலிவான பழமாதலால் கொடுப்பதிலோ வாங்குவதிலோ சங்கோசம் ஏற்பட இடமில்லை. எலுமிச்சம் பழம் மஞ்சள் நிறம். மஞ்சள் மங்களகரமானது. பிரமுகர்களைப் பார்க்கச் சென்ற நோக்கமும் நல்லபடியாக முடியக்கூடும்.

- சாமிநாதன்

இதைவிட அதிக ஆனந்தத்தை, மது விலகிய மாவட்டத்தில், பிரதம மந்திரியுடன் சுற்றுப் பிரயாணம் செய்த போது கல்கி அடைந்திட்டார். ''மது ஒழிந்தது! தேன் சொரிந்தது'' என்று எழுதிய அலங்கார வளைவுகளின் ஊடேயும், ''ஜே'' கோஷங்களினிடையேயும், ராஜாஜி பவனி சென்றார். அவருடைய காருக்கு அடுத்த காரில் கல்கி சென்று, தாம் பார்த்ததையும், கேட்டதையும் நேர்முக வர்ணனைபோல் தமது வாசகர்களுக்கு அறிவித்தார்:

...ஜலகண்டாபுரம் என்று ஓர் ஊர்.... ''ஜலம் கண்டால் போரும்'' என்று இருந்து, பின்னால் ஜலகண்டாபுரம் என்று மருவியதாகச் சொல்கிறார்கள். ''ஜலம்கண்டபுரம்'' என்று இருந்ததாக வேறு சிலர் கூறுகிறார்கள். மொத்தத்தில் அந்த ஊர் வாசிகளுக்கு ஜலத்தைக் கண்டாலே பரம சந்தோஷம் என்று தெரிந்தது. ஜலத்தைக் காண்பது அவ்வளவு அருமையாம்!

அப்பேர்ப்பட்ட ஊரில், இன்று மோட்டார்க் கார்களைக் கண்டு என்ன இவ்வளவு சந்தோஷம்? ஊரே திரண்டு வருவது போல், மேள தாளங்களுடன், தாரை தப்பட்டைகளுடன், வெற்றிலைத் தாம்பாளங்கள் சந்தனப் பேலாக்களுடன், இவ்வளவு ஜனங்களும் இத்தனை குதூகலமாய் ஏன் வருகிறார்கள்? ஊரிலே குஞ்சு குழந்தைகள் பாக்கியில்லாமல் வந்து விட்டார்களே?...

''ஏன் அம்மா! எதற்காக இங்கே நிற்கிறாய்?''

''கள்ளுக்கடை மூடின சாமி வராராம்; பார்க்கறதற்காக நிக்கறோம்.''

''அவர்தான் முதல் வண்டியிலே போனாரே பார்க்கலையா?''

''அவர்தானுங்களா? பச்சை மூக்குக் கண்ணாடி போட்டிருக்காரே?''

''அவரேதான்.''

''அவரு மவராஜரா இருக்கணும். மார்க்கண்டனைப் போல் என்றும் பதினாறாயிருக்கணும்!''

''கள்ளுக்கடை மூடினதிலே எல்லாருக்கும் சந்தோஷம்தானா?''

''ரொம்ப சந்தோஷங்க!''

இது எளம்பள்ளி என்னும் கிராமத்தில்.

சாலைப்புறத்தில் ஒரு மேடையும் பந்தலும் போட்டிருக்கிறது. மேடையிலே ராஜாஜியும் மற்ற மந்திரிகளும் வீற்றிருக்கிறார்கள். சுற்றிலும் வெகு தூரத்துக்கு ஜனக் கூட்டம். பக்கத்திலிருந்த சுவர்களின் மேல் எல்லாம் ஜனங்கள், வீட்டுக் கூரைகள் மேலெல்லாம் ஜனங்கள், மரங்களின் மேல் எல்லாம் ஜனங்கள்.

''கள்ளுக்கடை சாத்தினது சந்தோஷம் என்று யாராருக்கு எண்ணமோ அவர்கள் எல்லாம் கை தூக்குங்கள்'' என்கிறார் ராஜாஜி. உடனே அவ்வளவு ஆயிரக்கணக்

கான பேரும் கை தூக்குகிறார்கள். இரண்டு கையையும் தூக்குகிறார்கள். இரண்டு கையையும் தூக்கித் தலைக்கு மேல் கூப்புகிறார்கள். சுவர்களின் மேல் உள்ளவர்கள் அப்படியே தலைக்கு மேல் கை கூப்புகிறார்கள். மரங்களின் மேல் தொத்திக் கொண்டிருப்பவர்களும் அப்படியே இரண்டு கையையும் தலைக்கு மேல் கூப்புகிறார்கள். ''ஐயோ விழுந்து விடப் போகிறார்களே!'' என்று நமக்குப் பயமாயிருக்கிறது. ஆனால் அவர்கள் பயப்பட்டதாய்த் தெரியவில்லை.

இவ்வளவு பெருந்திரளான ஜனங்கள் இவ்வளவு குதூகலத்துடன் தோன்றியதை இதற்கு முன்னால் நான் பார்த்தது கிடையாது; நம் காலத்தில் யாருமே பார்த்திருக்க முடியாது என்றுதான் நினைக்கிறேன். இதிகாசங்களிலும் காவியங்களிலும்தான் இம்மாதிரியான ஜனத்திரளின் குதூகலத்தைப் பற்றிப் படித்திருக்கிறோம்.

(ஆ. வி. 10-9-'37)

பொடி எழுத்தில் ஆறு பக்கங்களுக்கு மேல் விரிந்த இந்தக் கட்டுரைக்கு ''யுகப் புரட்சி'' என்று கல்கி தலைப்புக் கொடுத்திருந்தார். அந்த மதுவிலக்கு புரட்சி மேலும் மூன்று ஜில்லாக்களுக்குப் பரவிற்று. பின்னர் 1944ல், கவர்னர் ஆட்சியின்போது, நாலு மாவட்டங்களிலும் ஒரே வீச்சில் அது அடிபட்டுப் போயிற்று.

1946-ல் மீண்டும் பொறுப்பேற்ற காங்கிரஸ் கட்சியார், எட்டு மாவட்டங்களில் மதுவிலக்கைக் கொண்டு வந்தனர். ''கள்ளே ஒழிந்து போ'' என்று அது பற்றிக் கல்கி எழுதி, மது அரக்கனை வழியனுப்பிய அரசாங்கத்தின் செயலை வரவேற்றார். அதற்கு அடுத்த ஆண்டில் நாடு விடுதலை அடைந்த பிறகு மேலும் எட்டு மாவட்டங்களில் மதுவிலக்குச் சட்டம் பரவிற்று. அதை முன்னிட்டுக் கல்கி தமது பத்திரிகையின் செப்டம்பர் 28ம் தேதிய வெளியீட்டை மதுவிலக்கு இதழாகக் கொண்டு வந்தார்.

அந்த இதழுக்கென அப்போது மேற்கு வங்காள கவர்னராய் இருந்த ராஜாஜி கல்கியின் வேண்டுகோளின் பேரில் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினார். அந்தக் கடிதம் ஆங்கிலத்தில் இருக்கபடியால், அதைக் கல்கி தமிழாக்கிக் கையெழுத்து வடிவில் பிளாக் செய்து வெளியிட்டார். ராஜாஜியின் தமிழ்க் கையொப்பத்தையும் ''நமஸ்காரம்'' என்ற சொல்லையும் வேறொரு கடிதத்திலிருந்து வெட்டி எடுத்து ஒட்டியிருந்தார். கவர்னர் முத்திரை பொறித்த தலைப்புப் பகுதியை அப்படியே வைத்துக் கொண்டார்.

Government House
Calcutta, 21st, September. 1947

நமஸ்காரம்,

உங்களுடைய செப்டம்பர் 16உ கடிதம் கிடைத்தது. மதுவிலக்குக்கு என்னிடமிருந்து விசேஷச் செய்தி எதற்காக? அதன் பொறுப்பு முழுதும் சென்னை சர்க்காருடையதல்லவா?...

குடி மிகவும் பொல்லாதது. ஏழைகளுக்கோ அது கொடிய சத்துரு. குடியை ஒழிப்பது போல் மக்களுக்கு நன்மையான காரியம் வேறு ஒன்றுமில்லை. எனவே, சென்னை சர்க்காரின் மதுவிலக்குத் திட்டம் பூரண வெற்றி பெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இந்த வடிவில் தமது கடிதம் கல்கியில் வெளியானதைப் பற்றிக் குறிப்பிட்டும், சிறப்பிதழைப் பாராட்டியும், கல்கிக்கு ராஜாஜி தமிழில் ஒரு கடிதம் எழுதினார்.

பிரசுரிக்கப்படாத அந்தக் கடிதம்:

அரசாங்க இல்லம், கல்கத்தா
28—9—1947

நமஸ்காரம்,


மதுவிலக்கு இதழ் பார்த்தேன். பழைய விமோசனத்தின் புனர் அவதாரமாகக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். மிகவும் நன்றாக இருக்கிறது.

என் கடிதத்தைத் தமிழ்ப் படுத்தியது சரியே. என் வணக்கக் குறிப்பையும் கையெழுத்தையும் எடுத்துப் படப் பதிவு செய்துவிட்டு, மொழிபெயர்ப்புடன் சேர்த்து ஒன்றாக்கி விட்டது வெகு சாமர்த்தியமான கைத்திறமை. படித்துப் படித்து இது என் தமிழ் அல்லவே என்று கஷ்டப்பட்டு, ஒருவேளை இப்படியே நானும் அவசரத்தில் எழுதினேனோ என்று சந்தேகப்பட்டேன். ஆனால் கடைசி வாக்கியத்தில் ''எனவே!'' என்று படித்ததும் இது எனது அல்ல என்று தீர்மானித்தேன்.

இந்தக் கடிதத்தை எழுதுகையில் ராஜாஜி முன்னாள் ''விமோசனம்'' ஆசிரியர் என்ற முறையிலும், இதைப் படிக்கையில், கல்கி அதன் முன்னாள் உதவி ஆசிரியர் என்ற முறையிலும், அந்த மதுவிலக்குப் பத்திரிகையை வெளியிடுவதில் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒன்றாக உழைத்ததை எல்லாம் நினைத்துப் பார்த்திருப்பார்கள்.

(தொடரும்)

துக்ளக்



தில்லி தலைநகராக இருப்பதற்குத் தகுதியற்றது என்று தெற்கே தௌலதாபாத் என்ற நகருக்குத் தலைநகரை மாற்ற முயன்று தோல்வி கண்ட துக்ளக் பற்றிப் பள்ளி மாணவரும் அறிவார்கள். அவனைப் பைத்தியம் என்பாரும் உண்டு; உயர்ந்த நோக்கங்கள் கொண்டவன், நடைமுறையில் அவற்றைக் கொண்டுவர முயன்று படுதோல்வியுற்றவன் என்பாரும் உண்டு. இந்தச் சரித்திர பாத்திரத்தை புனே பிலிம் இன்ஸ்டிட்யூட் முதல்வர் கிரீஷ் கர்னாட் வேறொரு விதமாகப் புனைந்திருக்கிறார். துக்ளக் சிறந்த அறிவாளி. தன்னைப் பற்றி மிக உயர்ந்த கருத்துக் கொண்டவன். ஆனால் அவனுக்குத் தன் மக்களைப்பற்றித் தெரியாது. அவர்களுடன் அவனுக்குத் தொடர்பு விட்டுப் போயிருந்தது. அவர்கள் மனங்களைப் புரிந்துகொண்டு செயல்பட அவனுக்குத் தெரியவில்லை. அதனால் அவன் கருத்துக்களும் திட்டங்களும் மிகப் புரட்சிகரமானவையாக இருந்தாலும் அவை மக்களைத் தொடவில்லை. அவற்றினால் மக்களுக்கு ஒரு பயனுமில்லை; துன்பந்தான்.

இன்று நாட்டை ஆளுவோரின் ஆட்சி முறையைப் பிரதிபலிப்பதாகவே இருக்கிறது நாடகம்.

இத்தகைய ஆங்கில நாடகத்தை லயோலா கல்லூரி மாணவர்கள் மிக வெற்றிகரமாகச் சென்னை மியூஸியம் தியேட்டரில் நடித்துக் காட்டினர்.

உத்திகள் கற்றுக் கொடுத்து இயக்கிய திரு கோபாலி அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

விலக்கப்பட்ட கனி

கேப்டன் குமார் போரில் தன் காலை இழந்ததோடு ஆண்மையையும் இழந்து விடுகிறான். ஆயினும் மனைவி மாதவி அவனது தூய காதலே போதும் என்று கூறி அன்புடன் வாழ்கிறாள்.

குடும்ப நண்பனாக வந்த அசோகன் ஒரு நாள் ''டேகல்லு குட்டட மேலே'' என்ற மலைப் பிரதேசத்தில் உள்ள வனப்பு மிக்க குகைக்கு மாதவியை அழைத்துச் செல்கிறான். அவ்விடத்தில் இயற்கை வனப்பும், தனிமையும், அசோகனின் இளமையும் மாதவியின் மனத்தைப் பரவசப்படுத்துகின்றன. நிலைகுலைந்து தவறு இழைத்து விடுகிறாள். செய்த தவற்றுக்காக மிகவும் வருந்துகிறாள்.

இந்நிலையில் மாதவியின் தங்கை தேவகி அவர்கள் வாழ்க்கையில் நுழைகிறாள். அவள் திருமணமாகாதவள். அவளைப் பார்த்ததும் அசோகனின் உள்ளம் அவள்பால் ஓடுகிறது. இதை உணரும் மாதவி, தன் தங்கையின் வாழ்க்கை ஒரு தூர்த்தனிடம் அகப்பட்டுக் கொண்டு அவதிப்படப் போகிறதே என்று கவலைக்குள்ளாகிறாள். ஆனால் உண்மையை வெளியில் சொல்லிவிடக்கூடிய நிலையிலா அவள் இருக்கிறாள்?

இப்படிக் கதை போகிறது.

இது ஒரு கன்னடக் கதை. ''டேகல்லு குட்டட மேலே'' என்ற தலைப்பில் எடுக்கப்பட்ட இந்த ஈஸ்ட்மென் கலர் படத்தின் வெளிப்புறக் காட்சிகள் கண்ணுக்கு அருவிருந்து.

அசோக்காக நடிக்கும் சந்திரசேகர் கட்டுமஸ்தான இளைஞர். மாதவியாக ஜெயந்தியும், ஆரத்தியாகத் தேவகியும் மிக நன்றாக நடித்திருக்கிறார்கள்.

கன்னட மொழிப் படத்தை மலையாளத்தில் 'டப்' செய்திருக்கிறார்கள், 'விலக்கப்பட்ட கனி' என்ற பெயரில். ஆனால் படத்தைப் பார்க்கும்போது டப் செய்யப்பட்டதாக உணர்வு ஏற்படவேயில்லை.

'ஏ' படமாயினும் எவ்வித ஆபாச, அருவருப்புக் காட்சியும் இல்லை. - எஸ். வி. எஸ்.





நாட்டில், மழை இல்லாமல் பெரிய நெருக்கடி * ஏற்பட்டிருக்கிறது. செயற்கை மழை உண்டாக்குவதில் விஞ்ஞானிகள் இன்னும் முழு வெற்றி பெறவில்லை.

"யாகத்தினால் மழை 'உண்டாகிறது" என்று கீதை தெளிவாகக் கூறுகிறது.

ஆனால் நம் நாட்டில் ஆட்சியாளர் பலருக்கு அதில் நம்பிக்கை கிடையாது. சரி, ரஷ்யாவுக்குப் போவோம். இப்பொழுது நம்மிடையே அந்த நாட்டுக்குத்தான் அதிக மவுசு ஏற்பட்டிருக்கிறது!

ரஷ்யாவில், மழை கொண்டு வருவதற்கு, மூன்று பேர், மிக செங்குத்தாக ஓங்கி வளர்ந்து நிற்கும் ஒரு மரத்தின் மீது ஏறி அதன் உச்சாணிக் கொம்பை அடைவார்கள். அங்கிருந்து கொண்டு ஒருவன் தன் கையில் உள்ள தப்பட்டையை, 'டபார்' 'டபார்' என்று சத்தம் கேட்கும்படி அடிப்பான். இது இடி இடிக்கிறது என்று அர்த்தம். இன்னொருவன் கையில் உள்ள இரண்டு தீப்பந்தங்களை ஒன்றோடு ஒன்று உரசி, தீப் பொறிகள் பறக்கும்படி செய்வான். இது மின்னல் அடிக்கிறது என்று அர்த்தம். மூன்றாவது ஆள், கையிலுள்ள பாத்திரத்தில் உள்ள தண்ணீரை இலைக் கொத்தினால் கீழே தெளிப்பான். இது மழை பொழிகிறது என்று அர்த்தம். இந்த அசட்டு இடியையும், மின்னலையும் மழையையும் காணச் சகிக்காமல் நிஜ மழை தானாக உடனே பெய்யும் என்பது இவர்கள் நம்பிக்கை.

ஜப்பானிலும் கிட்டத்தட்ட இதுபோன்ற வழக்கம் இருக்கிறது. மழை இல்லாவிட்டால், ஜப்பானியர் ஜோனன்டாக்கே என்னும் மலைமீது ஏறி, அங்கு மலை உச்சியில் நெருப்பை மூட்டுவார்கள்; துப்பாக்கியால் ஆகாயத்தைப் பார்த்துச் சுடுவார்கள்; பாறைகளை மேலேயிருந்து உருட்டி விடுவார்கள்.

வட அமெரிக்காவைச் சேர்ந்த ஒமாஹா இந்தியர்கள் ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டியைச் சுற்றி ஆடிப் பாடி வருவார்கள். பிறகு ஒருவன் தன் வாய் நிறையத் தண்ணீர் நிரப்பி, அதை மழை போலத் துப்புவான். பிறகு தண்ணீர்த் தொட்டியைக் கவிழ்த்து அத்தனை தண்ணீரையும் கீழே கொட்டுவார்கள்.

மெக்ஸிகோ இந்தியர்கள் புகைக்கும், மழைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது



என்று நம்புகிறார்கள். ஆகவே மழை இல்லாத நாட்களில் அவர்கள் அங்கே குப்பை செத்தைகளை எறியவிட்டு, எங்கும் ஒரே புகை மயமாக இருக்கும்படி செய்வார்கள். இந்தச் சமயங்களில் இந்த நாட்டில் யாருமே பயணம் செய்ய முடியாது; எங்கு நோக்கினும் அத்தனை புகையாக இருக்கும்.

சில ஐரோப்பிய நாடுகளில் இன்னொரு வழக்கம் கையாளப் பட்டது. தன் மேனியை இலைகளைக் கொண்டே மறைத்துக் கொண்டுள்ள ஓர் இளம் பெண்ணைச் சுற்றி, அநேக இளம் பெண்கள் ஆடிப் பாடிக் கொண்டு, வீடு, வீடாகச் செல்வார்கள். ஒவ்வொரு வீட்டு அம்மாளும், ஒரு வாளித் தண்ணீரைக் கொண்டு வந்து, இலையால், தன் மேனியை மூடிக் கொண்டிருக்கிறாளே, அவள் மீது கொட்டுவாள்.

ஆர்மீனியா நாட்டில் இதே காரியத்தைச் சற்று மாற்றிச் செய்கிறார்கள். ஒரு விளக்கு மாற்றைப் பெண்போல் அலங்காரம் செய்து, அதைச் சுற்றி ஆடிப்பாடிக் கொண்டு, சிறுவர்களும், சிறுமியர்களும் வீடு வீடாகச் செல்வார்கள். விளக்குமாற்றுக்குத் தண்ணீர் அபிஷேகம் கிடைக்கும், ஆனால் சிறுவர்களுக்கோ தின்பண்டங்கள் கிடைக்கும்.

பஞ்சாப்பில் ஒரு வழக்கம் உண்டு. கிராமத்தில் வாய்த் துடுக்கு அதிகம் உள்ள ஒரு கிழவியின் குடிசைக்கு முன்னால், கிராமத்தார் கண்ட குப்பைகளைக் கொட்டி அசிங்கம் செய்வார்கள். இதைக் கண்டு கிழவி சினந்து, வாயில் வந்தபடி ஏசுவாள். இந்த ஏச்சு வார்த்தைகளைக் கேட்கப் பொறாமல் மழை வந்து விடும் என்று நம்பிக்கை.

நம் அரசியல் கூட்டங்களில் ஏச்சு வார்த்தைகள் அதிகம் இருந்தும் ஏன் மழை வரவில்லை என்று நீங்கள் கேட்கலாம். பஞ்சாப் கிழவிகளுக்கு ஏசத் தெரிந்த அளவுக்கு நம் அரசியல் தலைவர்களுக்கு இன்னும் ஏசத் தெரியவில்லை என்றுதான் அர்த்தம்!

ஜாவாவில், ஒரு கறுப்பு ஆண் பூனையையும் ஒரு கறுப்பு பெண் பூனையையும் ஜோடியாகச் சேர்த்து ஒரு பல்லக்கில் உட்கார்த்தி வைத்து அவற்றை மேள தாளத்துடன் ஊர்வலம் எடுத்துச் செல்வார்கள். இதை வேடிக்கை பார்க்க மழை வரும் என்பது நம்பிக்கை.

ஜூலுலாந்தில், வருண பகவானுக்குத் தங்கள் மீது கருணை பிறக்க வேண்டும் என்பதற்காகத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கழுத்தளவுக்குப் பூமியில் புதைத்து வைப்பார்கள்.

ஆனால் சீனாவில் கையாளப்பட்ட வழக்கம் இருக்கிறதே, அது இவற்றையெல்லாம் தூக்கி அடிப்பது. சீனர்களின் மனப்பான்மையைப் புரிந்து கொள்வதற்கும் இது உதவும்.

மழை பெய்யாவிட்டால், மழைக் கடவுளைக் குறிக்கும் ஒரு பூதாகாரமான உருவத்தை (அது பார்ப்பதற்கும் பூதம் போல் இருக்கும்) காகிதத்தைக் கொண்டு செய்வார்கள். இந்த மழைக் கடவுள் ஏக ஆர்ப்பாட்டத்துடனும், மேள தாளத்துடனும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். பிறகு இந்தக் 'கடவுளுக்கு' நிறைய பூஜைகள் நடக்கும். பூஜைகள் நடந்து முடிவதற்குள் மழை பெய்தாக வேண்டும். இல்லையோ —

இந்த மழைக் கடவுளின் பாடு ஆபத்துத் தான்! மழைக் கடவுளை அடித்து நொறுக்கி, சின்னாபின்னப் படுத்தி விடுவார்கள். மழைக் கடவுள்களின் கோவில்களை இடித்தெறிவார்கள். மழைக் கடவுளுக்கு யாரும் பூஜை போடக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போடும்!

நம் நாட்டில் மழை கொண்டு வர இந்த வழியெல்லாம் அவசியமில்லை. ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'' என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். மழை இல்லாததைப் பார்க்கும் போது நாட்டில் நல்லாரே இல்லையோ என்று அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது.

நல்லார் விஷயம் இருக்கட்டும், பொய்யா மொழி என்று கூறப்படும் குறளில் திருவள்ளுவர் கூறியிருக்கிறாரே, யாரோ, ''பெய்யெனப் பெய்யும் மழை'' என்று அப்படிப் பட்ட அம்மாள் யாரும் கிடையாதா? என் வீட்டில் நிச்சயமாகக் கிடையாது. அது எனக்குத் தெரியும். உங்கள் வீட்டில் கூடவா கிடையாது?

மழை வேண்டுமா?

நாகேஷ்





தினசரி உங்கள்
உடலுக்குத் தேவை
இந்த 23 அத்தியாவசிய
ஊட்டச் சத்துக்கள்.
பருகுவீர்
காம்ப்ளான்®
போஷாக்குப்
பற்றுக்குறையிலிருந்து
உங்களைப்
பாதுகாக்கவே







இளவல் வருகிறார்!



பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் இந்தியா வருகிறார். அவர் விஜயம் இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவை மேலும் வளர்ப்பதுடன் பரஸ்பரம் பயன் தருவதாகவும் அமையட்டும். இளவரசர் சார்லஸ் ராஜ கம்பீரத்துடன் விளங்கினாலும் படாடோப மின்றிப் பாமரருடனும் பழகப் பயின்றவர். இதோ அவரது சில தோற்றங்கள்:

★ கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தமது தனி அறையில்.

★ உயர்ந்த கல்வியுடன் கடுமையான ராணுவப் பயிற்சியும் பெற்றவர். விமானத்திலிருந்து பாராசூட் உதவியுடன் கடலில் குதித்தும் பிறகு கப்பலேறுகிறார் இளவரசர்.

★ விமானம் ஏறுவதற்கு முன் பாராசூட் சரி பார்க்கப்படுகிறது.

★ பல மொழிகள் அறிந்திருக்க வேண்டிய இளவரசர் வெல்ஷ் மொழி கற்கிறார். டேப்பில் பதிவான பாடங்களை ஹெட்ஃபோன்ஸ் அணிந்து கேட்கிறார்.

★ வேல்ஸ் இளவரசர் என்ற பட்டம் பெற்றவர். அந்தப் பகுதியில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்திலும் சில மாதங்கள் தங்கிப் பயில விரும்பி வருகிறார். டி. வி. காமிராக்கள் இயங்குகின்றன.











★ நியூசிலாந்து சென்றிருந்தபோது ரோமிய பாணி நடனத்தில் கலந்து கொண்டு மகிழ்விக்கிறார்.

★ விமானம் ஓட்டுவதில் தேர்ச்சி பெறுகிறார்.

★ டெலிவிஷன் பிரமுகர் டேவிட் ஃப்ராஸ்ட் இளவலைப் பேட்டி காண்கிறார்.



★ மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவை யொட்டி லண்டனில் நடைபெற்ற அஞ்சலி இசைநிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகிறார். அவர் அருகில் நமது முன்னாள் கவர்னர் ஜெனரல் மவுண்ட்பாட்டன் அமர்ந்திருக்கிறார்.

★ ராணுவ தளபதி உடை தரித்துப் பவனி வருகிறார்.

★ ராணுவ மரியாதையைத் தளபதி ஏற்கிறார்.







காட்சி 9

(குப்புசாமி வீடு. பாத்திரங்கள்: வெங்கட், சீதா குப்புசாமி, பாதிரியார் அருமைநாயகம்.)

வெங்கட்: ஆமாம். என் பேர் வெங்கட். அட்வகேட் சத்யநாராயணா என் ஃபாதர்.

சீதா குப்புசாமி: தெரியுமே. எங்க லேடீஸ் கிளப்லே உங்கம்மாவைப் பார்த்திருக்கேன். என் வீட்டுக்காரரைப் பார்க்க வந்திருக்கியா தம்பி? அவரு இல்லியே.

வெங்: நான் உங்களைத்தான் பார்க்க வந்திருக்கேன்.

சீதா: என்னையா?

வெங்: விஷயத்தைத் தெளிவாச் சொல்லிடறேனே... நான் லவ் பண்றேன்.!

சீதா: டேய்!

வெங்: உங்களை இல்லே மேடம்! அலட்டிக் காதீங்க! உங்க லேடீஸ் கிளப்பிலே ரமான்னு ஒரு பொண்ணு இருக்கா தெரியுமா? இண்டஸ்ட்ரியலிஸ்ட் சதாசிவம் டாட்டர்.... அவளைத் தான் லவ் பண்றேன்.

சீதா: என்னமோ பேசறேன்னு நினைச்சுட்டேன் தம்பி. கல்யாணம் ஆகப் போவுதா? இன்விட்டேஷன் கொடுக்க வந்தியா? ரமா ரொம்ப நல்ல பொண்ணு. கெட்டிக்காரப் பொண்ணு.

வெங்: என்ன கெட்டிக்காரப் பொண்ணு? ஒரு வாரம் ஆறது என்னைப் பார்த்து. அப்பனுக்குப் பயந்துக்கிட்டு என்னைப் பார்க்க மாட்டேங்கறு.

சீதா: கல்யாணம் நிச்சயம் ஆகலியா?

வெங்: அதுக்குத்தான் முயற்சி பண்ணறேன். நீங்க ஒரு சின்ன உதவி பண்ணணும். ஒரு லெட்டர் தரேன். அதை, ரமா லேடீஸ் கிளப் வரும்போது கொடுத்திடுங்களேன்.

சீதா: அந்த மாதிரிக் காரியம் எல்லாம் நான் பண்ண மாட்டேன்.

வெங்: நான் உங்களுக்குப் பிரதி உபகாரம் பண்ணத் தயார்! நீங்க யாரையாவது லவ் பண்ணி, என்கிட்ட லெட்டர் கொடுத்தா நான் கொண்டு போய்க் கொடுப்பேன்.

சீதா: மரியாதை இல்லாமப் பேசாதே. எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு.

வெங்: சரி, உங்க ஹஸ்பெண்டுக்கு லெட்டர் கொடுங்கோ. கொண்டு போய்க் கொடுக்கிறேன்.

சீதா: நான் ஏண்டா என் ஹஸ்பெண்டுக்குக் கடிதாக கொடுக்கணும்?

வெங்: அப்ப என் ஹஸ்பெண்டுக்கு லெட்டர் கொடுங்க!... ஐ ஆம் சாரி.

சீதா: காதல்னு அவ்வளவு சர்வ சாதாரணமாப் போச்சா?

வெங்: காதல் மூக்நாறு நாள் ஓடிப் போச்சு... ஐ மீன் பாபி... நீங்க பாபி பார்த்தீங்களா?

சீதா: நான் ஒரு மண்ணாங்கட்டியும் பார்க்கலே. போ வெளியிலே!

வெங்: ப்ளீஸ் மேடம்.... ஒரு வாரமா ரமாவைப் பார்க்காம எனக்குத் தூக்கம் இல்லே, சாப்பாடு இல்லே!

சீதா: இன்னும் நாலு நாள் பட்டினி இட. சரியாப் போயிடும்.

வெங்: உண்ணாவிரதம் இருந்தா சரியாப் போறதுக்கு இது என்ன தொழிலாளர் பிரச்னையா? இது கல்யாணப் பிரச்னே. நீங்க பாபி பார்த்தீங்களா? அந்த மாதிரி ரமாவைக் காஷ்மீர் அழைச்சுக்கிட்டுப் போய் டுயட் பாடணும்.

சீதா: யாராவது வரதுக்கு முன்னாடி தாவு பண்ணி வெளியே போ. சரியான ரெண்டுங் கெட்டானா இருக்கியே.

வெங்: உங்களுக்குத் தெரியுமா? எங்க அப்பாவும் ஒரு ரெண்டுங் கெட்டான்தான்! சரி. சரி. அந்தக் கடிதாசைப் படிக்கிறேன். கேக்கறீங்களா? லேடீஸ் ரியாக்‌ஷன் என்னன்னு தெரிஞ்சுக்கலாம். மை டியர் டார்லிங் ரமா...

சீதா: கர்மம்... கர்மம்.

வெங்: அது அவ அப்பா! அது அடுத்த வரிலே வருது. கர்மம் பிடிச்ச உன் அப்பன்... அய்யய்யோ ஃபாதர் அருமைநாயகம் வராரு. அவர் எங்கப்பா க்ளையண்ட். இங்கே என்னைப் பார்த்தா அனாவசியமா நியூஸ் எங்கப்பா கிட்டப் போகும். நான் மாடியிலே போய் ஒளிஞ்சுக்கறேன். அவர் போன உடனே போயிடறேன். எனக்கொண்ணும் எங்கப்பா கிட்டப் பயமில்லே. இருந்தாலும் இப்பவே தெரிவானேன்? கல்யாணம் நிச்சயம் பண்ணி இன்விடேஷன் கொடுக்கலாம்னு பார்க்கறேன்! இந்த ஃபாதர் கிட்ட நான் இருக்கிறதாச் சொல்லாதீங்க. நான் மாடிக்குப் போறேன். என்னைப் பத்தி ஏதாவது சொன்னீங்க.... ஜாக்கிரதை. வெங்கட் ஈஸ் எ ரௌடி!

சீதா: பார்த்தாலே புரியுதுப்பா.

(அவன் உள்ளே போகிறான். பாதிரியார் வருகிறார்.)

கீதா : வாங்க.... உக்காருங்க.... அவர் ஆபீஸ் போயிருக்கார்.

அருமைநாயகம்: அன்னிக்கு நீங்க என் கிட்டச் சொன்னது பொய்ன்னு எனக்குத் தெரிஞ்சுடுச்சு அம்மா. இதோ பாருங்க, ஆரோக்கியசாமியின் மகன் உங்களுக்கு எழுதின லெட்டர்.

கீதா: இது எப்படி உங்க கிட்ட வந்தது? நான்....

அரு: ஆண்டவன் அருளாலே கிடைச்சதும்மா. ஒரு டாக்ஸி டிரைவர் உங்க மானத்தையே காப்பாத்தி யிருக்கான். அவன் உயிரைக் காப்பாத்தறது இப்போ உங்க கையிலேதாம்மா இருக்கு.

கீதா: ஃபாதர்... நீங்க இந்தக் கடிதாசைக் காட்டியிருக்காட்டிக் கூட நான் இப்ப உண்மையைச் சொல்லியிருப்பேன். அன்னிக்கு நான் அந்த டாக்ஸியிலேதான் போனேன். அந்த ஆரோக்கியசாமி மகன் கிட்ட லேடீஸ் கிளப்புக்காக டொனேஷன் கேட்டிருந்தோம். இவருக்கு நான் டொனேஷன் கலெக்ட் பண்ணப் போறது பிடிக்காது. அதனாலே அவருக்குத் தெரியாம டாக்ஸிலே போனேன். வந்து.... அங்கே அந்தப் பையன் என்னைக் கட்டிப் பிடிச்சு...நல்ல வேளை, அந்த டாக்ஸி டிரைவர் வந்திருக்காட்டி என் மானமே போயிருக்கும்! என்னைக் காப்பாத்தினதுக்கு நான் அவனுக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கேன்.

அரு: அன்னிக்கு ஏம்மா இந்த உண்மையை யெல்லாம் மறைச்சுட்டீங்க?

கீதா: இவர் ரொம்ப சந்தேகப் பிராணி. அந்த மாதிரி ஒரு சம்பவத்திலே நான் அகப்பட்டுக்கிட்டேன்னு தெரிஞ்சா, நான் தப்பிச்சு வந்தேன்னு இவர் நினைக்க மாட்டார். கெட்டுப்போயிட்டேன்னுதான் சந்தேகப் படுவார். எங்களுக்கு ரெண்டு குழந்தைங்க. இவருக்கு என் மேலே சந்தேகம் வந்துட்டா எங்க குடும்பமே பாழாப் போகும். என் பசங்களைக் கூட என்னாலே ஒழுங்கா வளர்க்க முடியாமப் போயிடும். அதனாலேதான் இதை யெல்லாம் மறைச்சுட்டேன்.

அரு: இப்பவாவது உண்மையைச் சொன்னீங்களே; அதுக்காக நான் உங்களுக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கேனம்மா.

கீதா: நான் உண்மையை அப்படியே சொன்னதுக்காக நீங்க எனக்குப் பதிலுக்கு ஓர் உதவி செய்யறீங்களா?

அரு: சொல்லுங்கம்மா செய்யறேன்.

கீதா: ஏக பேலே சத்யமா?

அரு: ஆண்டவன் அறியச் சொல்றேன். நீங்க கேக்கற உதவியை நான் செய்யறேன்.

கீதா : நான் உங்ககிட்ட சொன்னதை யார் கிட்டேயும் சொல்லக் கூடாது!

அரு: கோர்ட்டிலே கூடவா?

கீதா: ஆமாம். வாக்குத் தவற மாட்டீங்களே?


அரு: ஐ வில் கீப் மை ப்ராமிஸ் ... ஆண்டவனே! என் இதயத்தில் இருக்கும் பரம பிதாவே.., ஏன் இப்படி வெளியே சொல்லக் கூடாத உண்மைகளையே என்கிட்டக் கொடுத்துக்கிட்டிருக்கே? உம்... நான் வரேம்மா.

கீதா: அந்தக் கடிதாசை எங்கிட்டக் கொடுக்க மாட்டீங்களா?

அரு : இது என்னுடைய சொத்து இல்லே. இருந்தாக் கொடுத்திடுவேன். நீங்க கவலைப் படாதீங்க. இதைப் பயன்படுத்தி உங்களைக்

''ரமா கெட்டிக்காரப் பொண்ணு.''
''என்ன கெட்டிக்காரப் பொண்ணு? ஒருவாரம் ஆறது என்னைப் பார்த்து. அப்பனுக்குப் பயந்துகிட்டு என்னைப் பார்க்க மாட்டேங்கறா.''





"ஆமாம். என் லவ் பத்திப் பேசினேன். என்ன இப்போ?"

காட்டிக் கொடுக்க மாட்டேன். என்மூலமாக நீங்க சொன்ன விஷயங்கள் வெளியே வராது.

கிதா: என்னாலேதான் உங்களுக்கு உதவி செய்ய முடியல்லே. எங்க குல தெய்வம் கிருஷ்ண பரமாத்மா உங்களுக்கு உதவி பண்ணனும்னு நான் மனசார வேண்டிக்கறேன்...ஃபாதர்.

அரு: அது போதும்! எற்கனவே ஏசு என்பக்கம்; கொஞ்ச நேரம் முன்னேதான் கபாலீசுவரரும் என் பக்கம்னு தெரிஞ்சுக்கிட்டேன். இப்போ கிருஷ்ண பரமாத்மா! கடவுளின் பல உருவங்களும் பல நம்பிக்கைகளும் என் பக்கமே சேர்ந்துக்கிட்டு இருக்கு. அது போதும்....காட் ப்ளெஸ் யூ மை சைல்ட்.

(போகிறார்.)

கிதா: தம்பி! வெங்கட்!... வெங்கட்!...

(வெங்கட் உள்ளே யிருந்து வருகிறான்.)

வெங்: போயிட்டாரா? என்னைப் பற்றி நீங்க ஒண்ணும் சொல்லலியே? சொன்னாலும் ஒண்ணும் பயமில்லே. நீங்க என்ன பேசினீங்கன்னு நான் கண்டு பிடிப்பேன், தெரியுமா? சரி... அந்த லெட்டர்...ரமா கிட்டே குடுக்கிறீங்களா? என்ன அழறீங்க? காதல் கடிதாக கொடுக்கவா? ஐ யாம் ஸாரி மேடம்! நானே பார்த்துக்கறேன். என் லவ் என்ன தேவதாஸ் லவ்வா, அழறதுக்கு? இது பாபி டைப் காதல்! நீங்க பாபி பார்த்திங்களோ?

கிதா: தம்பி! பேசாமல் வீட்டுக்குப் போய்ச் சேர்.

(உள்ளே போகிறாள். வெங்கட் மப்பாய்க்கு அடியில் இருந்து டேப்ரிக்கார்டரை எடுக்கிறான்)

வெங்: உம்... கிட்டத்தட்ட அரை கேஸட் டேப் ரிக்கார்ட் ஆயிருக்குது... வேஸ்ட், வீர் வேஸ்ட்!.... ஹும் ஹும்...

(பாடியபடியே போகிறான்.)

காட்சி 10

(வக்கீல் சத்யநாராயண வீடு. பாத்திரங்கள்: பங்கஜம், சத்ய நாராயண, வெங்கட். டேப் ரிக்கார்டரை வைத்துக் கேட் டுக் கொண்டிருக்கிறார்கள். டேப்ரிக்கார்டர் முடிகிறது.)

பங்கஜம்: பார்த்தேளா, பார்த்தேளா! என் பையன் சாமர்த்தியத்தைப் பார்த் தேளா? கேஸ் என்னன்னு தெரியாம திருதிருன்னு முழிச் சுண்டிருந்தேளே. எல்லா விஷயமும் அப்படியே டேப் ரிக்கார்ட் பண்ணிண்டு வந்துட் டானே! எப்படிடா ரிக்கார்ட் பண்ணினே?

வெங்: நான் அந்தம்மா கிட்டே பேசும்போதே முதல் லேயே டேப் ரிக்கார்டரைப் போட்டு வெச்சுட்டேன். அதான் எல்லாம் ரிக்கார்ட் ஆகியிருக்குது!

பங: அய்யோ...அய்யோ... நீ எப்படிடா இவ்ளோ சமர்த் தாப் பொறந்தே? இவருக்குப் பொறந்தும் இவ்வளவு புத்தி சாலியா இருக்கியேடா! அந்தக் கிதாவும், பாதிரியாரும் பேசி னதை அப்படியே ரிக்கார்ட் பண்ணிட்டியே!

வெங்: இதெல்லாம் என் னம்மா? எனக்குச் சர்வ சாதா ரணம்! நான் என்ன அப்பா மாதிரி மக்கா?

பங்: எவ்வளவு பெரிய காரி யத்தைப் பண்ணிட்டு எத்தனை அடக்கமாப் பேசறான், பார்த் தேளா? ஏன்னா, பாதிரியாரும், கிதாவும் பேசினது அப்படியே ரிக்கார்ட் ஆயிடுத்து. கோர்ட் டிலே கேஸுக்கு ரொம்ப உதவியா இருக்கும் இல்லே?

சத்தியநாராயண: அதி கோர்ட் கேஸுக்கு உதவி... இப்படு இங்கே ஒரு கேஸ் இருக் குது. இந்த மடையனும் அந்தக் கிதாவும் பேசினதுகூட ரிக்கார்டு ஆயிருக்குதே, அதுக்கு என்ன சொல்லுது இப்போ?

வெங்: ஆமாம். என் லவ் பத்திப் பேசினேன். என்ன இப்போ?

சத்: ஏமிரா சேஸ்தாவு நீவு? லவ்வு. உன் மூஞ்சிக்கு லவ்வு. பாபி... ஏமிட்ரா அதி பாபி?

வெங்: டிட் யூ ஸி பாபி? ரொம்பப் பிர மாதமா ஓடிச்சு!

சத்: மன ஊர்லே பாபி பிரமாதங்கா போறது; மகா பாபியும் பிரமாதங்க போறுங்க. நீவு பாபி காதுரா. மகா பாபி! மகா பாபி!

மங்: சும்மா இருங்கோன்னு. கேஸுக்கு எவ்வளவு பெரிய விஷயத்தை ரிக்கார்ட் பண்ணிட்டு வந்திருக்கான். அந்த டாக்ஸி டிரைவர் சீதாவைக் காப்பாத்தி யிருக்கானே!

சத்: இந்த மடையன் லெட்டர் கொண்டு போய்க் கொடுக்குது... மை டியர் டார்லிங்.. ஏமிட்ரா டார்லிங்?

வெங்: பின்னே என்ன? லவ் பண்ற பெண்ணை உங்களை மாதிரி நீ காது, நீ சாதுன்னு சொல்லுவேன்னு நினைச்சீங்களா?

பங்: என்னமாப் பேசறான் பாத்தேளா? வர வர ரொம்ப சூட்டிகையாயிண்டு வரான்.

சத்: நீரு தெப்பது இஸ்தானு... கும்மா இரு... அரே வெங்கட்...சதாசிவம் டாக்டர் ரமாவை நீவு லவ் பண்றியா!

வெங்: என்ன தப்பு? எங்க தாத்தா பொண்ணை நீ லவ் பண்ணலே?

சத்: எவர்ரா அதி, உங்க தாத்தா பொண்ணு?

பங்: என்னைத்தான்னு சொல்றான்.

வெங்: அம்மாவை நீ லவ் பண்ணலே?

சத்: ஆமாண்டா உன் தாத்தா பொண்ணை என் தாத்தா பேரன் லவ் பண்ணினது. சரே லவ் சேசானு. ஏமிட்டிரா ஆயிந்தி?

பங்: கல்யாணம் ஆயிந்தி!

சத்: கல்யாணத்துக்கு அப்புறம் ஏமி ஆயிந்தி?

வெங்: அசிங்கமாப் பேசாதீங்க!

சத்: ஊரிகே உண்டுரா. அரே வெங்கட்! நான் சொல்றதைக் கேளு. லவ் பண்ணி மேரேஜ் பண்ணினு கடவுள் தண்டனை கொடுக் கறாரு.

வெங்: உனக்கு என்ன தண்டனை கொடுத் தார் கடவுள்?

சத்: உன்னைக் கொடுத்தார். அதே நாகு தண்டனை. நீ லவ் பண்ணி மேரேஜ் சேஸ்குனு இன்னொரு வெங்கட் ஒஸ்தாரு. இந்த வீட்லே ரெண்டு வெங்கட் கூடாது. ஒரு வீட்டிலே ரெண்டு பைத்தியக்காரன் காதுரா!

பங்: இந்த வீட்டிலே ரெண்டு பைத்தியக் காரன் இருக்கக் கூடாதுன்னு ஒண்ணு வெங் கட்டாவது இருக்கணும். இல்லே நீங்களாவது இருக்கணும். இரண்டு பைத்தியத்தையும் ஆத்திலே வைச்சுண்டு எனக்குப் போறும் போறும்னுஆயிடுத்து. அப்பாவும் புள்ளையும் சமாதானமா யிருந்து அப்பப்போ சண்டை போட்டாலும் அம்மா ஒருத்தி நான் இருக் கேனேன்னு அடங்கி நடந்தாத்தான் அப்பா வும் புள்ளையும் எனக்குக் கட்டுப்பட்டு இருக்க முடியுங்கறதை எத்தனையோ தரம் நான் சொல்லி யிருந்தாலும் திரும்பத் திரும்பச் சொல்றதிலே தப்பில்லேங்கறதினாலே அம்மா வார்த்தைக்கு மதிப்புக் கொடுங்கோன்னு இன்னொரு தடவை சொல்றது என் கடமை!

சத்: பங்கஜமு! ஏமிட்டி இது ஸ்பீச்சு! அம்மாயிஸமா! தமிழ் நாட்டிலோ ஏமேமோ இஸமெல்லாம் வருது. அப்பாயிஸமு, அம்மா யிஸமு, சித்தப்பாயிஸமு, சித்தியிஸமு, தம்பி யிஸமு.... உறவு வச்சுக்கினே ஜனங்க முட்டாளாறது இந்த ஊரிலேதான்!

பங்: நல்லவேளை! வெங்கட்டின் லவ்வைப் பத்தி மறந்தேளே அதுவே போதும்!

சத்: வெதவா! ஏமிட்ரா அதி லவ்வு?

பங்: இப்ப என்ன குடிமுழுகிப் போச்சு? அந்த ரமாவோட அம்மாவை எனக்கு நன்னு தெரியும். அந்த வீட்டுச் சம்பந்தம் கிடைக்க நாம கொடுத்து வெச்சிருக்கணும்.

வெங்: அப்பா! இவ்வளவு தூரம் எல் லாம் வெட்ட வெளிச்சமானப்புறம் ப்ளெய் னாவே சொல்றேன். எனக்கு அந்த ரமாவைக் கல்யாணம் பண்ணி வைக்காட்டி இந்த வீட்டை விட்டே போயிடுவேன்!

சத்: நிஜங்கா சேஸ்தாவா?

வெங்: சத்யமா சொல்றேன்! அவளைக் கல்யாணம் பண்ணி வைக்காட்டி நான் வீட்டை விட்டுப் போயிடுவேன்.

சத்: அப்புறம் பேச்சை மாத்தக் கூடாது! கல்யாணம் லேது; வீட்டைவிட்டு வெளியே வெள்ளு!

பங்: என்னன்னு பேச்சு இது... அந்தக் கேசுக்கு எவ்வளவு பெரிய விஷயத்தைக் கண்டு பிடிச்சுண்டு வந்திருக்கான். அதுக்காக ரெண்டு நல்ல வார்த்தை சொல்லக்கூடாதா?

சத்: அது சரி, வெங்கட்! நல்ல வேலை சேசாவு. இப்பதான் எனக்கு கேஸே அர்த்தம் அவுத்திந்தி. இக்கட ராரா.... (வெங்கட் அணுகியதும்) நல்ல பையன்.

பங்: நல்ல வேளை! உன் லவ்வைப் பற்றி மறந்துட்டார்!

சத்: வெதவா! லவ் சேஸ்தாவு நீவு!

(அறைகிறார்.)

பங்: அவனை ஏன் அடிக்கிறேள்?

வெங்: அப்பா! ஏதோ பாராட்டற மாதிரி கூப்பிட்டு உதைக்கிறீங்களே. நான் ஏதாவது தப்புக் காரியம் செய்தேனா? இந்தக் காலத் திலே எல்லாரும்தான் லவ் பண்றாங்க.... எனக்கு மாத்திரம் லவ் இருக்கக் கூடாதா? டிட் யூ ஸி பாபி?

சத்: ஆசியாயினுரா... நானு, பங்கஜமு இரண்டு பேரும் ஆசினமு.

பங்: போங்கன்னு... இதையெல்லாம் போய் அவன்கிட்ட சொல்லிண்டு....

சத்: மன கொடுக்கே காதா? செப்தே ஏமி? அரே வெங்கட்! இந்த டேப் ரிக்கார்ட் டிங்கு கேஸுக்கு உதவியா இருக்கும்..... சால தாங்ஸ்ரா.....

வெங்: அப்ப ரமாக்கு என்னைக் கல் யாணம் பண்ணி வைக்கிறீங்களா?

சத் (உரக்க): உரேய் வெதவா! கல் யாணம் லேதுரா. நீவு கவத்லே போய் முட்டிக்கோ. இங்க ஒரு நிமிஷம் இருந்தே செருப்பு கழட்டிக்கினு உன் தலேகா பயனே அடிக்குது.... வெள்ரா லோபல.... வெள்ளு.....

பங்: அன்பாப் பேசுங்கோ! அன்பாப் பேசுங்கோ.....!

சத் (மெல்லிய குரலில்) உரேய் வெதவா... கண்ணில்லே? கழுத்தை அறுக்காதே!..... வெள்ளு.

(பாதிரி வருகிறார். பங்கஜம் உள்ளே செல்கிறாள்.)

அரு: குட்மார்னிங் மிஸ்டர் சத்ய நாராயணா.....

சத்: ரண்டி, ரண்டி.... ஏமி சமாசாரமு?

அரு: உங்ககிட்ட கொடுக்க ஒரு லெட்டர் கிடைச்சிருக்கு.

சத்: ஏமி இதி லெட்டரு? ஓ... ஆரோக்கியசாமி கொடுக்கு கிதா குப்புசாமிக்கு எழுதின லெட்டர்காதா இதி?

அரு: உங்ககிட்ட சொல்ல முடியாத விஷயமும் எனக்குக் கெடைச்சிருக்கு.

சத்: மீரு ஏமி செப்ப ஒத்து... எனக்கு எல்லாம் தெலுசு.... அந்த டாக்ஸி டிரைவர் தாமஸ் டாக்ஸிலோ கிதா குப்புசாமி, ஆரோக்கியசாமி இன்டிகு போச்சு... அந்த ஆரோக்கியசாமி கொடுக்கு இந்தப் பெண்ணைக் கெடுத்து. அப்புடு டாக்ஸி டிரைவர் அவன் தலையிலே அடிக்கு.... போலீஸ் அவனைப் பிடிக்கு. இதே காதா கேஸு.

அரு: உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்? கிதா இங்கே வந்தாங்களா?

சத்: கிதா ராலேது.... கிதா வாய்ஸ் ஒச்சந்தி.... இந்த டேப்லே அல்லாம் உந்தி...

அரு: இதுலேயா?

சத்: போட்டுக் காட்டட்டுமா?

(டேப்பைப் போடுகிறார்.)

டேப் குரல்: காதல் 300 நாள் ஓடிப் போச்சு.... டிட்யூ லிவ் பாபீ?

சத்: அதி... ஒரு ரேடியோ டிராமா. இப்புடு போடறேன். கேளுங்க.

டேப் குரல்: உங்களுக்குத் தெரியுமா? என் அப்பாவும் ஒரு ரெண்டுங்கெட்டான் தான்.

சத்: பாதர் ரெண்டுங்கெட்டான் அன்டே நீங்க இல்லே! நீங்க ஒண்ணுங்கெட்டானே! ஆரேய், வெங்கட்! கிதா பேசினது எக்கடரா உந்தி?

அரு: இது என்ன ரிக்கார்டிங்?

சத்: நீங்களும் கிதா குப்புசாமியும் பேசினது கம்ப்ளீட்டா இதிலே ரிக்கார்ட் ஆயிந்தி!

வெங்: அப்பா! என் டேப் ரிக்கார்டரைக் கொடுங்க.

(எடுத்துக் கொள்கிறான்.)

சத்: ஆரேய்.... அது கொட்ரா!

வெங்: என் ரூமுக்கு வந்து வாங்கிக்குங்க... ஆறு நான் ஒண்ணு சொல்றேன். என் ரூம்லே வந்து உங்க இஷ்டப்படி பேச முடியாது! இங்கே ஹாலில் கூட்டாட்சி, ரூமிலே சுயாட்சி ஜாக்கிரதை!

(போகிறான்.)

அரு: சத்யநாராயணா... உங்க மகன் இப்படி அந்தம்மாவும் நானும் பேசினதை டேப் ரிக்கார்ட் பண்ணினது ரொம்பத் தப்பான காரியம். அந்த டேப்பை என்னிடம் கொடுங்க. நான் அந்தக் கிதாம்மாகிட்டே கொண்டு கொடுத்துடறேன்.

சத்: நேனு ஏமி.... பிச்சிவாடா? அந்த அம்மாவுக்கு வந்த லெட்டர் ஏன் எங்கிட்ட மீரு கொடுத்தீங்க?

அரு: தாமஸ் அதை ஒங்ககிட்டதான் கொடுக்கச் சொன்னான். அது அவன் சொத்து.

சத்: அதே..... அந்த டேப் ஈவ் பையன் சொத்து. நானு கொடுக்கறது லேது.

அரு: அந்த டேப்பைக் கோர்ட்லே பயன் படுத்துவீங்களா?

சத்: அவசியம் வந்தா சேஸ்தானு. கேஸுக்கு இன்னும் இருபது நாள் உந்தி.... இப்புடு ஏமி?

அரு: இந்த லெட்டரையும் டேப்பையும் கோர்ட்லே பயன்படுத்த நான் அனுமதிக்க முடியாது. அந்தம்மா சொன்னதை நான் யார்கிட்டேயும் சொல்லமாட்டேன்னு சத்யம் பண்ணியிருக்கேன்.

சத்: நேனு சத்யம் பண்ணலேயே? மீரு சத்யம் மீரு காப்பாத்து. நீங்க எங்கிட்டே சொல்லலேயே? அதனாலே உங்க சத்யம் ஜாக்கிரதையாலே உந்தி.

அரு: நீங்க இதைப் பயன்படுத்த நான் அனுமதிச்சாலும் நான் சத்தியத்தை மீறின மாதிரி ஆயிடும். அந்தக் கிதாம்மா அனுமதி கொடுத்தாத்தான் அதை நீங்க பயன்படுத்த நான் அனுமதிப்பேன்.

சத்: ஃபாதர்! ஒக்க மேட்டர் செப்தானு. ஈ டேப் ரிக்கார்டர் சாட்சியம் நான் யூஸ் பண்றதா லேதா அனி நிர்மானம் செயலேது. எந்துகண்டே கோர்ட்லே... டேப் ரிக்கார்டர் சாட்சியம் நல்ல எவிடன்ஸ் காது... நாகு கேஸ் புரியறதுக்கு இது யூஸ் ஆயிந்தி..... கோர்ட்லே தினி ரொம்ப மதிப்பு லேது... கொஞ்சம் உந்தி. ருஜுவு காவாலா. இதைவிட அந்தக் கிதாம்மா கையாலே எழுதி ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தா பாக உந்தி.

அரு: நான் கேக்க மாட்டேன். அவங்களா சொல்ல முன் வந்தா சரி. நானு எப்படிக் கேக்க முடியும்?

சத்: நாகு இப்படி ஒரு க்ளைன்ட். நா தலகா பயல பிரும்ம தேவுடு சரிக எழுத லேது.

அரு: என்னை மீறி அந்த லெட்டர், டேப் ரிகார்டர் எல்லாம் நீங்க கோர்ட்டிலே உபயோகப்படுத்தமாட்டீங்கன்னு நான் நம்பறேன்.

சத்: அந்த டாக்ஸி டிரைவர் நிரபராதின்னு எட்ல நிரூபிக்கிறது?... இதே மாதிரிக போத்தே டாக்ஸி டிரைவர் தூக்கிலே மாட்றாரு. நீங்க ஜெயிலுக்குள்ளே போறாரு.

அரு: நீங்க நம்பிக்கையை இழக்காதீங்க. கடவுள் நிச்சயமா அந்த டாக்ஸி டிரைவரைக் காப்பாத்துவார். உங்க இந்து மத புராணத்திலே ஒரு சம்பவம். நினைச்சுப் பாருங்க. முதலை யானையுடைய காலைப் பிடிச்சப்போ யானை 'ஆபத்பாந்தவா! அநாத ரக்ஷகா'ன்னு கத்தின உடனே பகவான் ஓடி வந்து முதலையைக் கொன்னு யானையைக் காப்பாத்தலையா?

சத்: மீரு ஏமி, பாதர் அருமைநாயகமா? செங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதரா?

(தொடரும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விசேட 60 சதம் (தபால் செலவு தனி)

